வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 28.11.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 358 | பக்கங்கள் : 20






# தடை தகர்த்து தமிழர் தேசத்தில் மாவீரர்களுக்கு எழுச்சி அஞ்சலி!

## தீருவிலில் தீபங்களை தட்டி இராணுவத்தினர் அடாவடி!

யாழ்ப்பாணம், நவம்பர் 28

**படைத்தரப்புகளின் அச்சுறுத்தல்கள் - அடக்குமுறைகள் - கண்காணிப்புகள் - அடாவடிகளுக்கு மத்தியில் தமிழர் தேசமான வடக்கு - கிழக்கில் நேற்று பேரெழுச்சியுடன் மாவீரர்கள் நினைவேந்தப்பட்டனர்.**

தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து தீருவிலில் ஏற்பாடு செய்த நினைவேந்தல் நிகழ்வில் மக்கள் ஏற்றிய தீபங்களை ஏற்றிய கையோடு படையினர் அவற்றை தட்டிவீழ்த்தி அராஜகம் புரிந்தனர்.

தமிழ் மக்களின் 19



## நினைவேந்தலுக்கு சென்ற பீற்றர் இளஞ்செழியன் கைது

முல்லைத்தீவு, நவ. 28

முல்லைத்தீவு கடற்கரையில் மாவீரர்களை நினைவேந்த முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் அரசியல் செயல்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வீட்டில் மாவீரர்களை நினைவேந்துவதற்கு ஆயத்த மானபோதே நேற்று மாலை அவர் கைது 19

## அரசும் விரைவில் வெடித்துச் சிதறும்

### சபையில் எதிரணி சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 28

நாட்டில் எரிவாயு சிலிண்டர்கள் வெடித்துச் சிதறுவதைப் போன்று இந்த அரசும் விரைவில் வெடித்துச் சிதறும் என்று தெரிவித்த முன்னாள் காணி அமைச்சரும் தற்போதைய ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியுமான கயந்த கருணாதிலக, வடக்கு, கிழக்கில் 75 19



## சாட்டி துயிலும் இல்லத்தில் இராணுவம் அச்சுறுத்தல்!

யாழ்ப்பாணம், நவ. 28

வேலணை - சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தலுக்காக சென்றவர்களை இராணுவத்தினர் துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்தினர்.

மாவீரர் தினமான நேற்று நினைவேந்தலுக்கு சென்ற அரசியல் கட்சியினரையும் மக்களையுமே 19

## இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு இந்திய - அமெரிக்க ஊக்கம் தேவை!

### சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

சென்னை, நவ. 28

இலங்கையில் தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வைக் காண இந்தியாவுடன் இணைந்து ஊக்கத்தை கொடுக்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அமெரிக்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வாஷிங்டனில் இராஜாங்க திணைக்கள அதிகாரிகளுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தலைமையிலான சட்ட நிபுணர்கள் தூதுக்குழு அண்மையில் பேச்சு நடத்தியது. இவர்களே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர் என்று தி இந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அமெரிக்கா மீண்டும் இணையவிருக்கும் நிலையில், தீர்வு காணப்படாமல் இருக்கும் பொறுப்புக்கூறல் மற்றும் நீதிப் 19



இந்தியாவின் தமிழ்நாட்டில் ம.தி.மு.க.வின் தலைமைச் செயலகத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நேற்று எழுச்சியுடன் இடம்பெற்றது.

## தொற்றுக்கு 20 பேர் பலி!

கொழும்பு, நவ. 28

நாட்டில் மேலும் 20 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் 19

## துட்டகைமுனு மன்னன் செய்ததை ஏன் உங்களால் செய்ய முடியாது?

### சபையில் மாவீரர்களை நினைவுகூர்ந்து அரசிடம் சிறிதரன் எம்.பி. கேள்விக்கணை

கொழும்பு, நவ. 28

"இந்த நாட்டில் இருந்த துட்டகைமுனு மன்னன் கூட தமிழ் மன்னனான எல்லாள மன்னனுடன் போரிட்டு அந்தப் போரில் தான் வென்ற பின்னர் எல்லாளனுக்கு சமாதி அமைத்து வணக்கம் செலுத்துங்கள் என்று சொன்ன சிங்கள வீர வரலாற்றைக்கொண்ட நாட்டில் துட்டகைமுனு மன்னன் செய்ததை ஏன் உங்களால் செய்ய முடியாது?

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி. சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று 19



## தமிழர் தேசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகளுக்காக களமாடி மரணித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 27ஆம் திகதி நினைவேந் தப்படுகின்றனர். 2009 போர் முடிவுக்கு வந்த பின்னர் மாவீரரை நினை வேந்த அப்போதைய அரசாங்கம் தடை விதித்தது. 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற் றத்தைத் தொடர்ந்து மாவீரர் நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது. எனி னும், ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து நீதிமன்றங்கள் மூலமும் கொரோனா தொற்றை காரணம் காட்டியும் மாவீரர் நினைவேந்தல் தடுக்கப்பட்டது. இந்த ஆண்டு சில நீதிமன்றங்கள் கொடிகள், அடையாளம் இன்றி நினைவுகூர முடி யும் என்றும் தெரிவித்தமையை தொடர்ந்து நேற்றைய தினம் மாவீரர்களை நினைவுகூர மக்கள் எழுச்சியுடன் தயாரானார்கள்.

ஆனால், படைத் தரப்புக்கள் தமிழர் தாயகம் முழுவதும் குவிக்கப்பட்டு கண்காணிப்புக்கள் தீவிரப்படுத்தப்பட்டதுடன், நினைவேந்தல்களை தடை செய்யும் ஏற்பாடுகளும் தொடங்கின. ஆனால், அவற்றையெல்லாம் தகர்த் தெறிந்து தமிழ் மக்கள் எழுச்சியுடன் தமது உறவுகளை - தமக்காகக் களமாடி வீழ்ந்தவர்களை உறுதியுடன் மாலை 6.05 மணிக்கு மாவீரர் துயிலும் இல்லங் கள் அமைந்திருந்த இடங்களிலும், வீடுகளிலும், பொது இடங்களிலும், மத ஸ்தலங்களிலும் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

**யாழ்ப்பாணத்தில்...**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வல்வெட்டித்துறை - தீருவிலில் குமரப்பா - புலேந்திரன் பன்னிரு வேங்கைகளின் நினைவுதூபி இருந்த இடத்தில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. மாவீரர் துயிலும் இல்லம் இருந்த வேலணை - சாட்டி, பருத்தித்துறை முனை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம் என்பவற்றில் மாவீரர் நினைவேந்தல் இடம்பெற்றது. அத்துடன், பொதுமக்கள் பலரும் வீடுகளில் தீபங்கள் ஏற்றியதுடன், மாவீரர்களின் உறவினர்கள் அவர்களின் உருவப்படங்களுக்கு மலர் மாலையிட்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

**தீருவிலில் அடக்குமுறை**

வடமராட்சி - வல்வெட்டித்துறை - தீருவிலில் குமரப்பா - புலேந்திரன் நினைவுத் தூபி இருந்த இடத்தில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து நினைவேந்தலை முன்னெடுத்தனர். ஆழிக்குமரன் ஆனந்தன் நீச்சல் தடாகம் இருந்த பகுதியிலிருந்து பேரணியாக தீருவில் நினைவுதிடலில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் மக்களும் ஒன்றுகூடினர். பெருமளவு படையினரும் பொலிஸாரும்கூடி நிகழ்வை கட்டுப்படுத்தினர். சுமார் ஒரு கிலோ மீற்றர் சுற்றுவட்டாரப் பகுதிக்குள் மாலை 5 மணி தொடக்கம் சென்றவர்கள் கடும் சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். தீருவில் நினைவுத் திடல் செல்லும் பாதைகளில் மக்கள் தடுத்து திருப்பி அனுப்பப்பட்டனர்.

எனினும், மாலை 5.30 மணிக்கு பேரணி ஆரம்பமானபோது படைத் தரப்புகளால் மக்களை தடுக்கமுடியவில்லை. “பயங்கரவாதிகளை நினைவு கூராதீர்கள்”, “விடுதலைப் புலிகள் என்று சொன்னாலே கைது செய்யப்படு வீர்கள்” என்று பொலிஸார் எச்சரித்தனர். அதையும் பொருட்படுத்தாமல் தீருவில் நினைவுத் திடலை சென்றடைந்தனர். அங்கு, குவிந்திருந்த இராணுவத்தினர் கொரோனா தொற்றை காரணம் காட்டி 50 பேரையே உள்ளே செல்ல அனு மதித்தனர். பெருந்திரளான மக்கள் அங்கு திரளவே இராணுவத்தினர் அச்சு றுத்தி அவர்களை அங்கிருந்து விரட்ட முற்பட்டனர். இதனால், அங்கு கடும் தர்க்கங்கள் வெடித்தன.

மாலை 6.05 இற்கு பிரதான தீபம் திடலில் ஏற்றப்படவே, திடலின் வெளியே நின்ற மக்களும் தீபங்களை ஏற்றினர். திடலின் மதிலில் ஏற்றப்பட்ட தீபங்களை உடனடியாகவே அங்கு நிறைந்திருந்த படையினர் தட்டி வீழ்த்தினர். இதனிடையே அங்கு கூடி தீபம் ஏற்றிய பலநூறு மக்களை புலனாய்வாளர்கள் ஒளிப்பதிவு செய்தனர். எனினும், மக்கள் எழுச்சியாக அஞ்சலியை முன்னெடுத்தனர்.

**கிளிநொச்சியில்....!**

கிளிநொச்சியில் மாவீரரை நினைவேந்த விதிக்கப்பட்ட தடை நீக்கப்படாமையால் மக்கள் வீடுகளிலேயே மாவீரர்களை நினைவேந்தினர். அத்துடன், ஆலயங்கள், தேவாலயங்களில் விசேட பூசைகள் - வழிபாடுகளிலும் மக்கள் கலந்து கொண்டனர்.

**முல்லைத்தீவில்...**

முல்லைத்தீவில் மக்கள் வீடுகளில் மாவீரர் நாளை எழுச்சியுடன் நினைவேந்தினர். வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லம், அளம்பில் துயிலும் இல்லம், தேவிபுரம் துயிலும் இல்லம், முல்லைத்தீவு கடற்கரையில் படைத் தரப்பினரின் எதிர்ப்பையும் மீறி மக்கள் அஞ்சலி செலுத்தினர். வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லத்திலும் 50 பேருக்கே அனுமதி வழங்கப்பட்டது. ஏனையோரை கலைந்து செல்லுமாறு பொலிஸார் எச்சரித்தனர். உள்ளே செல்ல முடியாத போதிலும் வெளியே நின்ற பெருமளவிலானோர் 6.05 மணிக்கு தீபங்களை ஏற்றி அஞ்சலித்தனர்.

**மன்னாரில்...**

மன்னாரில் பொதுமக்கள் வீடுகளில் அஞ்சலி செலுத்தினர். இலங்கை தமிழ் அரசு கட்சி அலுவலகம், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் அலுவலகம் என்பவற்றில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன அத்துடன், ஆலயங்கள், தேவாலயங்களில் விசேட பூசைகளும் இடம்பெற்றன.

**வவுனியாவில்**

வவுனியாவில் பிரஜைகள் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட இடம் ஒன்றிலும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நடத்தும் தொடர் போராட்ட பந்தல் மற்றும் இல்லங்கள், வர்த்தக நிலையங்கள் தோறும் மாவீரர்கள் எழுச்சியுடன் அஞ்சலிக்கப்பட்டனர்.

**கிழக்கு மாகாணத்தில்...**

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தடைகள் காரணமாக பொதுமக்கள் வீடுகளிலும், அரசியல்வாதிகள் வீடுகள் மற்றும் கட்சி அலுவலகங்களிலும் மாவீரர்களை நினை வேந்தினர். ஆலயங்களில் வழிபாடுகளி லும் மக்கள் ஈடுபட்டனர்.

இதேவேளை, தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் மாவீரர் நாள் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. (ஐ-2-3-5-6)

## தொற்றுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மர ணங்களின் மொத்த எண் ணிக்கை 14 ஆயிரத்து 278 ஆக அதிகரித் துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 20 மரணங்களில் 7 பெண்களும், 13 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## நினைவேந்தலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டார்.

முன்னதாக, மாவீரரரை நினைவேந்த அவருக்கு தடை உத்தரவு விதிக்க பொலிஸார் நீதிமன்றை கோரியபோதும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில், பீற்றர் இளஞ்செழியன் நேற்று மாலை கைது செய்யப்பட்டார். இருந்தபோதிலும், நேற்று இரவு 10 மணியளவில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஐ)

## இனப்பிரச்னைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்னைகளுடன் சேர்த்து தமிழ் தேசிய பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றை வாஷிங்டன் வலியுறுத்த வேண்டியது முக்கியமானதாகும்

மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தொடர்பான மைய குழுவுக்கு ஐக்கிய இராச்சியம் தலைமை தாங்குகிறது.

ஜெனிவாவில் உள்ள பேரவையில் 2022 மார்ச்சில் நடைபெறவிருக்கும் கூட்டத்தொடரில் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் இலங்கை தொடர்பாக எழுத்துமூல அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவிருக்கிறார்.

நீண்டகால உள்நாட்டு போரில் இருந்து இன்னமும் மீண்டுகொண்டிருக்கும் இலங்கையில் அரசியல் தீர்வொன்றுக்காக பேச்சுக்களில் பங்கேற்கும் பிரதான சர்வதேச பங்காளியாக இதுவரையில் இந்தியாவே விளங்கும். இதேவேளை மேற்குலக வல்லாதிக்க நாடுகள் பொறுப்புக்கூறல் மற்றும் நீதி தொடர்பிலேயே அக்கறை காட்டுகின்றன.

புதிய அரசியலமைப்பு ஒன்றை வரைவதற்கான ராஜபக்ச அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மத்தியில் அரசியல் தீர்வொன்றுக்கான அவசர கோரிக்கைக்கு வலுச்சேர்க்க அமெரிக்காவை அழைக்கும் கூட்டமைப்பின் நகர்வு இடம்பெற்றிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.அதன் காரணத்தால்தான் அரசியலமைப்பு வரைவு துறையில் நிபுணத்துவம் கொண்டவர்களை முழுவதுமாகக்கொண்ட தூதுக்குழு அமெரிக்கா சென்றது.

1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையின் விளைவாக கொணடுவரப்பட்ட இலங்கை அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் ஓர் அவசியமான நடவடிக்கை. ஆனால், போதுமானதல்ல என்பதே கூடடமைப்பின் நிலைப்பாடாகும். மாகாணங்களுக்கு ஓரளவு அதிகாரங்களை உறுதிப்படுத்துகின்ற அந்த திருத்தத்தை இலங்கை அரசாங்கங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை - என்றும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

## அரசும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகளாக அந்த மக்களின் காணிப் பிரச்னைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, அரசு வெடித்துச் சிதறுவதற்குள் அதனைத் தீர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் பேசுகையில்,

“வடக்கு, கிழக்கில் இளைஞர்களையும் தேசிய விவசாயத்துறையில் இணைத்துக்கொள்ள - அவர்களுக்குத் தேவையான நிலத்தைப் பெற்றுக் கொடுக்க மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்துக் கொண்டுள்ளதாக காணி அமைச்சர் அண்மையில் கூறினார். வடக்கு, கிழக் கில் 40 கிராமங்களுக்கு அதிகமான பகுதிகளில் 75 ஆண்டுகளாக அவர்களின் பிரச்னைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. தேசிய காணி கொள்கை ஒன்றை உருவாக்கி சகல காணிப் பிரச்னைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

காஸ் சிலிண்டர்கள் வெடித்துச் சிதறுவதை போன்று இந்த அரசும் வெடிக்கும் நிலையில் உள்ளது. ஒவ்வொரு நாளும் காலையில் அரசுக்குள் ஏற்பட்டு வரும் வெடிப்பைப் பார்க்கையில் அவ்வாறே நினைக்கத் தோன்றுகின்றது. இன்னும் குறுகிய காலமே இந்த அரசு இருக்கப் போகின்றது. அதற்குள் மக்களின் காணிப் பிரச்சினைகளை இந்த அரசு தீர்க்க வேண்டும்” - என்றார். (இ)

## சாட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் அச்சுறுத்தினர். இதனால் அந்தப் பகுதி யில் நேற்று பதற்றமும் குழப்பமும் ஏற் பட்டது.

உள்ளே செல்ல விடாது இராணுவத்தினர் தடுத்து நிறுத்திய போது மக்கள் தரையில் அமர்ந்து எதிர்ப்பு தெரிவித்தனர். இவ்வாறு எதிர்ப்பு தெரிவித்தவர்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் க. சுகாஸும் இருந்தார்.

எனினும், எதிர்ப்புகளை தாண்டி பின்னர் அங்கு மக்கள் மாவீரர்களை நினைவு கூர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)

## துட்டகைமுனு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மாவீரர்களை நினைவு கூர்ந்ததுடன் இவ்வாறு கேள்வி எழுப்பிய சிறிதரன் எம்.பி. மேலும் பேசுகையில் -

“கார்த்திகை 27 தமிழர்களின் மாவீரர் நாள். இந்தப் பூமிப்பந்தின் தேசமெங்கும் பரந்து வாழும் உலகத் தமிழர்கள் அத்தனை பேரினதும் ஆழ்மன உணர்வுகளோடு இரண்டறக் கலந்துபோன ஈகைத் திருநாளே இன்றைய மாவீரர் நாளாகும். மக்களுக்கான போராட்டம் ஒன்றின் தோற்றுவாய்க்கு மனிதாபிமான மனோநிலையும் மனித நிலை மாண்புகளுமே அடிப்படையாக அமைய முடியும். அத்தகைய ஒரு மக்கள் போராட்டத்துக்கு சக மனிதர்களையும் தான் சார்ந்த சமூகத்தையும் நேசிக்கத்தக்க அன்பின்பாலான மனோநிலை மட்டுமே மூலாதாரமாக முடியும். அந்தவகையில் அனைத்துலகும் பிரமித்து நிற்கத்தக்க பிரமாண்டத் தோடு தமிழின விடுதலை ஒன்றையே மூச்சாகவும் வீச்சாகவும் கொண்டு 30 ஆண்டு காலமாக நடைபெற்று முடிந்த மக்கள் போராட்டத்துக்காக தம்மையே தாரைவார்த்த எமது தேசத்து வீரர்களை பயங்கரவாதிகள் என்று விளித்துப் பறை சாற்றுவது எத்தனை அபத்தமானது?

அடுத்த சந்ததியின் அமைதியான வாழ்வுக்காக வாழ்வியலின் அத்தனை சுகபோகங்க ளையும் துறந்து மனித சுதந்திர உணர்வின் பிரதிபலிப்பாய் தம்மையே தற்கொடையாக்கி 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களை இந்த மண்ணிலே புதைத்துவிட்டு விடுதலையை நோக்கிய ஆழ் மன ஏக்கங்களோடு தவித்திருக்கும் எமது மக்களின் வலி சுமந்த மனப்பரப்பின் முழுமைக்கும் மாவீரர்களின் தியாகங்கள் என்றென் றைக்கும் சுடர்ந்த வண்ணம்தான் இருக்கும். இந்த நாட்டிலே ஜே.வி.பிக்கும் தங்களுடைய இழந்துபோன வீரர்களை அவர்கள் நினைவுகூருவதற்கான சந்தர்ப் பம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நாட்டில் யாருக்கும் இதில் தடையில்லை. இந்தச் சபையில் எதிர்க்கட்சிகள் கூட இறந்து போனவர்களை நினைப்பதற்கான தடையை விதிக்க வேண்டாமெனனக் கூறின. ஏன் இந்த நாட்டில் இருந்த துட்டகைமுனு மன்னன் கூட எல்லாள மன்னனுடன் போரிட்டு அந்தப் போரில் தான் வென்ற பின்னர் எல்லாளனுக்குச் சமாதி அமைத்து வணக்கம் செலுத்துங் கள் என்று சொன்ன சிங்கள வீர வரலாற்றைக்கொண்ட நாடுதான் இந்த நாடு. போர் வீரர்களை மதிக்கின்ற நாடு. ஆகவே, ஒரு போரில் ஒருவர் இறந்திருந்தால் அவரை மதிக்கின்ற பக்குவம் உங்களுக்கு வர வேண்டும். அந்தப் பக்குவம் இருக்கின்ற நாடுதான் நியாயமான கருத்துக்களை கருத்துக்களால் வெல்கின்ற அடுத்த இனத்தின் கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்ற பக்குவமுள்ள நாடாக இருக்க முடியும்.

இது பயங்கரவாதம் அல்ல. நான் உண்மையை உங்களுக்குச் சொல்கின்றேன். இந்த நாட்டில் நடக்காத ஒன்றை நான் சொல்லவில்லை. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் துட்டகைமுனு மன்னன் செய்ததை ஏன் உங்களால் செய்ய முடியாது?” - என்று கேள்வி எழுப்பினார்.(இ)

# தமிழர் வாழும் தேசம் எங்கும் மாவீரருக்கு அஞ்சலி


வல்வெட்டித்துறை தீருவில்


முல்லைத்தீவு


யாழ்.பல்கலைக்கழகம்


தீருவில்


சாட்டி





சுவிஸ்


















மன்னார்

## வடமாகாண மரநடுகை மாதம் 28 கார்த்திகை 2021

“மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்”

- ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)

## கல்வி tv CHANNEL-1

### 28.11.2021 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

### 28.11.2021 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
28.11.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

## சிங்கள தலைவர்களின் பிரச்னை?

எதிர்காலத்தில் மக்கள் விரும்பாத சில தீர்மானங்களை மேற்கொள்ள நேரிடலாம் - என, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். நாட்டின் பொருளாதார நிலைமைகளை கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். ஏற்கனவே நாட்டின் பொருளாதார நிலைமை வெடிப்பின் விளிம்பில் இருக்கின்றது. இந்த நிலையில் சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோரும் திட்டத்தை அரசாங்கம் தொடர்ந்தும் புறத்தள்ளி வருகின்றது. எனினும் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் இலங்கை வரவுள்ளனர். ஏற்கனவே டொலரின் பெறுமதி பாரதூரமாக அதிகரித்துவிட்டது. தற்போதுள்ள நிலைமை இன்னும் சில மாதங்கள் தொடர்ந்தால், டொலரின் பெறுமதி இன்னும் அதிகரிக்கலாம். இவ்வாறானதொரு பின்னணியில்தான் ஜனாதிபதி இன்னும் சில கடுமையான தீர்மானங்களை மேற்கொள்ள நேரிடுமென்று அறிவித்திருக்கின்றார்.

உலக பொருளாதாரம் வீழ்சியடைந்தால் நாடுகளின் பொருளதாரமும் வீழ்ச்சியுறும். இதுதான், பொருளாதாரம் பற்றி மிகவும் இலகுவான சூத்திரம். கொரோனா பெருந்தொற்றின் விளைவாக உலக பொருளாதார நிலைமை பெரியளவில் பாதிப்படைந்திருக்கின்றது. ஏற்கனவே உள்நாட்டு யுத்தத்தால் பெருமளவு பாதிப்படைந்திருந்த இலங்கையின் பொருளாதாரத்தின் மீது, புதிய நிலைமைகள் பெருமலையாக தாக்கியிருக்கின்றது. ஆனால் இந்த நிலைமையை வெற்றிகரமாக கையாளுவதற்கான வாய்ப்புக்கள் ஆட்சியாளர்களிடம் இருந்தது.

குறிப்பாக போர் வெற்றியை கொண்டாடிய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், இலங்கையின் இனப்பிரச்னையை சுமூகமான முறையில் தீர்த்திருக்க முடியும். 13இற்கு அப்பால் சென்று பிரச்னைகளை தீர்ப்பதாக மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதியும் வழங்கியிருந்தார். யுத்தம் முடிவுற்ற உடனேயே, யுத்தத்திற்கான வேர் காரணமான, தமிழ் மக்களின் பிரச்னையை தீர்த்து, நாட்டை ஒரு புதிய பாதையில் வழிநடத்தியிருக்கலாம். அதற்கான முழு வாய்ப்பும் அதிகாரமும் மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்தது. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஒரு தீர்க்கமான முடிவை எடுத்திருந்தால், சிங்கள மக்கள் மத்தியிலும் அதற்கான முழுமையான ஆதரவு இருந்திருக்கும். ஆனால் போர் வெற்றி மயக்கம் உண்மைகளை பரிசீலிக்க மறுத்தது.

இன்றும் பழைய கதைகளே மீளவும் புனையப்படுகின்றன. ஆனால் தற்போதுள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை கொண்டு, கடந்த கால தவறுகளை சரிசெய்யலாம். இதுவரை தீர்க்கப்படாமல் இருக்கின்ற பிரச்னைகளை தீர்க்கலாம். ஓர் உறுதியான தலைமைத்துவத்தை வழங்கலாம். ஆனால் அதற்கு மாறாகவே விடயங்கள் இடம்பெறுகின்றன. இப்போதும் சிங்கள - பௌத்த அடிப்படைவாதிகளை திருப்திப்படுத்தும் பழைய கதைகளிலேயே அரசாங்கம் சுகம் காண முயற்சிக்கின்றது.

இந்த நாட்டின் நிலத்தை எந்த நாட்டுக்கு வழங்கினாலும் - தமிழர்களுக்கு மட்டும் எதனையும் வழங்கமாட்டோமென்னும் மனோநிலையே தென்னிலங்கையின் அரசியலில் மேலாதிக்கம் பெற்றிருக்கின்றது. இந்த நிலைமை தென்னிலங்கையில் ஆதிக்கம் பெற்றிருக்கும் வரையில், இலங்கைத் தீவு ஒருபோதும் ஓர் அரசியல் ஸ்திரத்தன்மையை பெறாது. அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளாவிட்டால் இந்த நாட்டை முன்நோக்கிக் கொண்டு செல்லவும் முடியாது.

ஒரு நாடு முன்னேற்றப் பாதையில் பயணிக்க வேண்டுமாயின் - அரசியல் ஸ்திரத்தன்மையே அதற்கான அடிப்படையாகும். இலங்கையின் தேசிய இனமான ஈழத் தமிழ் மக்களின் பிரச்னையை நியாயமாக தீர்க்காவிட்டால் - இலங்கையின் உள்ளக அரசியல் ஒருபோதும் ஸ்திரத்தன்மையை அடையாது. ஓர் இனத்தை ஒடுக்குமுறையின் கீழ் வைத்துக் கொண்டு நாட்டை முன்னேற்ற முடியாது. இனரீதியான பிரச்னைகளின் சிக்கலான தன்மைகளை துல்லியமாக மதிப்படுவதில் வெற்றிபெற்றதால்தான், சிங்கப்பூரின் சிற்பி, லிகுவான் யூ - ஒரு குறித்த இனத்தை முதன்மைப்படுத்தாத வகையிலான கொள்கை ஒன்றை கடைப்பிடித்து, வெற்றிகண்டார். ஆனால் இங்கு நடந்ததும், நடந்து கொண்டிருப்பதும் வேறு. அதாவது, ஒரு சிங்களத் தலைவர் தவறு செய்தால் - அடுத்து வருபவர் அதனை சரிசெய்வதில்லை. மாறாக - அந்த தவறை, அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதை ஒரு சிங்கள கடமையாக எண்ணிக் கொள்கின்றார். இதுதான் சிங்கள அரசியலின் அடிப்படையான பிரச்னை. இந்த நாடு எதிர்கொண்டிருக்கும் அனைத்து பிரச்னைகளுக்குமான வேர் இங்குதான் இருக்கின்றது.

# ஆபத்தான ஆபிரிக்க திரிபு பெல்ஜியத்துக்கு பரவியது

## ஏழு நாடுகளது வான் சேவைகளை உடனடியாக நிறுத்தியது ஐரோப்பா

**பாரிஸிலிருந்து குமாரதாஸன்**



ஆபிரிக்காவில் கண்டறியப்பட்டிருக்கும் கொரோனா வைரஸின் புதிய திரிபை "கவலைக்குரிய மாறுபாடு" ("variant of concern") என்று தரப்படுத்தியிருக்கும் உலக சுகாதார நிறுவனம், அதற்குக் கிரேக்க இலக்கப் பெயர்களின் வரிசையில் "ஒமைக்ரோன்" (Omicron) என்று பெயர் சூட்டியிருக்கிறது.ஒமைக்ரோன் என்பது கிரேக்க எழுத்துக்களில் 14 ஆவது இலக்கத்துக்குரிய பெயர் ஆகும்.

புதிய வைரஸ் பற்றிய அச்சத்தால் ஆபிரிக்காவின் தெற்குப் பகுதி நாடுகளுடனான சகல விமான சேவைகளையும் ஐரோப்பிய ஒன்றியம் இடைநிறுத்தியிருக்கிறது. போட்ஸ்வானா நாட்டில் முதலில் தோன்றியதாக நம்பப்படுகின்ற மிக வீரியமான வைரஸ் திரிபு தென் ஆபிரிக்கா உட்பட ஆறு நாடுகளில் பரவியிருக்கிறது. அங்கிருந்து உலகின் வேறு சில நாடுகளுக்கும் அது பாய்ந்திருக்கிறது. ஐரோப்பாவில் பெல்ஜியம் நாட்டில் முதல் தொற்றாளர் கண்டறியப்பட்டுள்ளார் என்ற தகவலை அந்நாட்டின் சுகாதார அமைச்சர் வெளியிட்டிருக்கிறார்.

இம்மாத ஆரம்பத்தில் எகிப்தில் இருந்து திரும்பிய ஒருவருக்கே ஆபிரிக்க வைரஸ் தொற்றியிருப்பது தெரியவந்துள்ளது. மலாவி (Malawi) நாட்டில் இருந்து திரும் பிய தனது பிரஜை ஒருவர் புதிய ஆபிரிக்க வைரஸ் தொற்றுக்கு ஆளாகியுள்ளார் என்ற தகவலை இஸ்ரேலும் வெளியிட்டுள்ளது. ஏற்கனவே ஹொங்கொங் நாட்டுக்கும் புதிய வைரஸ் பரவியுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் ஏற்கனவே டெல்ரா வைரஸின் புதிய தொற்றலைகளில் சிக்கியுள்ள இந்தத் தருணத்தில் - டெல்டாவைவிடத் தீவிரமாகப் பரவக்கூடியது என நம்பப்படுகின்ற புதிய ஆபிரிக்க வைரஸ் பற்றிய செய்திகள் ஐரோப்பிய நாடுகளை உஷாரடைய வைத்துள்ளன.

தென் ஆபிரிக்கா,(South Africa) லெசோதோ (Lesotho), போட்ஸ்வானா (Botswana), ஷிம்பாப்வே (Zimbabwe), மொசாம்பிக் (Mozambique), நமீபியா (Namibie) மற்றும் சுவாஸிலான்ட் என அழைக்கப்படும் ஈஸ்வதினி(Eswatini) ஆகிய ஏழு நாடுகளில் இருந்துவருகின்ற விமானங்களை பிரான்ஸ் இடைநிறுத்தியிருக்கிறது.

கடந்த 14 நாட்களுக்குள் இந்நாடுகளில் இருந்து திரும்பியவர்கள் எவராயினும் தங்கள் தகவல்களைச் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்கு மாறு கேட்கப்பட்டுள்ளனர். போர்ப் பதற்றங்கள், பெரும் தீவிரவாதத் தாக்குதல்களின் போது உலக பங்குச் சந்தைகள் சரிவைச் சந்திப்பது வழக்கம்.


இன்று ஆபத்தான ஆபிரிக்க வைரஸ் பற்றிய செய்திகள் வெளியானதை அடுத்து ஐரோப்பிய பங்குச் சந்தைகளில் சரிவு ஏற்பட்டிருக்கிறது. பாரிஸ் CAC 40 பங்குச் சந்தைச் சுட்டெண் கடந்த ஆண்டு மார்ச் மாதத்துக்குப் பின்னர் முதல் முறையாக 4.4% வீத வீழ்ச்சியைக் காட்டி யுள்ளது. அமெரிக்கப்பங்கு நிலைவரமும் லேசான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

உலக நாடுகள் எங்கும் தற்சமயம் பரவி வருகின்ற டெல்டா திரிபை தடுப்பூசிகள் 40 சதவீதம் மட்டுமே எதிர்க்கின்றன என்ற தகவல் சமீபத்திய ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது. இந்நிலையில் ஆபிரிக்கா வைரஸ் திரிபு டெல்ராவை விடவும் தீவிரமாகப் பரவக்கூடியது எனச் சந்தேகிக்கப்படுவதால் அது தடுப்பூசிகள் அனைத்தையும் எதிர்த்துத் தவிடுபொடியாக்கிவிடக் கூடும் என்ற அச்சம் மருத்துவ அறிவியலாளர்களிடம் உள்ளது.

ஆனால் இந்த அச்சமும் அவசரப்பட்டு விதிக்கப்படும் பயணத் தடைகளும் "மிகையான" நடவடிக்கைகள் என்று வேறு சில தொற்று நோய் நிபுணர்கள் கூறியிருக்கின்றனர். பிரிட்டன், பிரான்ஸ், சுவிஸ், இத்தாலி போன்ற நாடுகள் தென் ஆபிரிக்காவுக்கான வான் சேவைகளை அவசரப்பட்டு நிறுத்தியிருப்பதற்கு அந்த நாட்டின் சுகாதார அமைச்சர் கடும் கண்டனம் ரிவித்துள்ளார்.

இதேவேளை, அச்சத்தைக் கிளப்பியிருக்கின்ற ஆபிரிக்கத் திரிபு, தடுப்பூசிகளை எதிர்க்கும் வலுவுடையதா என்பதைக் கண்டறியும் ஆய்வுகளை ஆரம்பிக்கப் போவதாக "பைசர் - பயோ என்ரெக்" தடுப்பூசித் தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. பெறுபேறுகள் தெரியவருவதற்குச் சில வாரங்கள் எடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





# இந்தவார ராசிபலன்
## 28.11.2021 – 05.12.2021

நவம்பர்.28 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - கார்த்திகை 12
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : நவமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

பணியிடத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். முன்பிருந்த அவமானங்கள் நீங்கும். உங்கள் பக்க நியாயம் உலகுக்குத் தெரிய வரும். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டி வரும். அறிமுகம் இல்லாதவர்களை நம்பி எந்த விஷயத்திலும் இறங்க வேண்டாம். தடைகளும், தாமதங்களும் சரியாகிவிடும். தர்மசங்கடமான சூழல்களை சமாளிக்க வேண்டியிருக்கும். பெண்கள் வகையில் ஆதரவு கிடைக்கும். பொருளாதாரத்தில் முன்னேற்ற நிலை இருக்கும். உணர்ச்சிவசப்படக் கூடிய நிலை இருக்கும். செலவுகள் ஏற்படலாம்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

கடமை உணர்வுடன் செயல்படுவீரகள். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிகழ்வுகள் நடக்கும், பயணம் செய்வதற்கு ஏற் வாரம் அல்ல அதனால் அதைத் தவிர்ப்பது நல்லது. இந்த வாரம் செலவு அதிகமாக இருக்கும்.ஆரோக்கிய விஷயங்களில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். வியாபாரத்தின் பாணியை மாற்றுவீர்கள். பணியிடத்தில் சவாலான வேலைகளை எடுத்து சிரமத்துடன் முடிக்கும் திறன் வரும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உங்களால் நன்மையடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

பங்குச் சந்தை முதலீடுகளுக்கு செய்யும் முன் கவனம் தேவை. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும் பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்வீர்கள். நீங்கள் முனெடுத்த விஷயங்களில் சிறிய தடைகளுக்குப் பிறகு பெரிய வெற்றியை அடைவீர்கள். மருத்துவ சிகிச்சை எடுக்க திட்டமிட்டிருந்தால் அது நிறைவேறும். தொழிலில் வளர்ச்சியடைவீர்கள். பெற்றோரின் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கும், பெற்றோருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். சிலருக்கு பணிச்சுமை அதிகமாகலாம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கும். மழலைச் செல்வம் இல்லாதவர்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். சரளமான பண வரவால் சந்தோஷம் அடைவீர்கள். நம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். பெற்றோரின் உடல்நிலையில் முன்னேறம் ஏற்படும். வார இறுதியில் நிறைய வேலைகளில் மும்முரமாக இருப்பீர்கள். நண்பர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் தேவையான உதவிகளைச் செய்து மன நிறைவு அடைவீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

முயற்சிகள் எல்லாம் நல்லபடியாக முடியும். எதிர்கால முன்னேற்றம் பற்றிய சிந்தனைகள் மனதில் உதயமாகும். இது பிற்கால நன்மைக்கு வழிவகுக்கும். புதிய முயற்சிகள் நன்மை தருவதாக அமையும். பணி அழுத்தம் காரணமாகக் குடும்பத்தினருடன் குறைவான நேரம் செலவிடக் கூடிய சூழல் அமையலாம். செலவுகள் அதிகமாக இருக்கும், உறவினர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு மறையும். ஆன்மிகப் பணிகளில் ஈடுபாடு உண்டாகும். சாதுக்களின் தரிசனம் கிடைக்கும். மனஅமைதி மீளும். உடல் நலனில் கவனம் தேவை.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

தனிப்பட்ட முறையில் உங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள். வீடு மனைகள் வாங்குவது சம்பந்தமாக முயற்சிகளில் உள்ளவர்கள் வெற்றி காண்பர். அலுவலகத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். மனதில் நிம்மதி கூடும். சிந்தனையில் தெளிவு உண்டாகும். சகோதரர், நண்பர்களால் நன்மை அடைவீர்கள்.குடும்பத்தில் ஒருவருக்குத் திருமணம் நடைபெறுவதற்கான வாய்ப்பு கூடும். குழந்தை பாக்கியம் சிலருக்கு உண்டாகும். தந்தைவழி உறவினர் மூலம் நல்ல நன்மைகள் நடக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

புதிய முதலீடுகளில் தைரியத்துடன் ஈடுபடுவீர்கள். பழைய கடன்களும் வசூலாகும். எதிரிகளின் பலம் குறையும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். மன அழுத்தம் மறையும். பெரியோர், பெற்றோரின் ஆலோசனை கிடைக்கும். பிரிந்த குடும்பங்கள் அல்லது நண்பர்களை சேர்த்து வைப்பீர்கள். உங்களுக்குக் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் மூலம் நன்மைகள் ஏற்படும். புதிய சொத்துகள் வாங்குவீர்கள். தோற்றத்தில் பொலிவு உண்டாகும். புத்திசாலிகளின் நட்பைப் பெற்று பலனடைவீர்கள். மன உறுதி உண்டாகும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

கவலைகள் மறைந்து மகிழ்ச்சி பிறக்கும். ஏற்றுமதி இறக்குமதியில் ஈடுபாடு வரும். பொருளாதாரத்தில் இருந்த சிக்கல் தீரும். பெண்களால் குடும்பத்தின் கவுரவம் உயரும். கணவரின் முயற்சியால் குடும்ப நிலை உயரும். வீட்டில் சுப செலவு ஏற்படும். வாகன சேர்க்கை ஏற்படும். தங்க, வெள்ளி பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரிகளுக்கு பண வரவு திருப்தி தரும். வியாபாரம் சூடுபிடிக்கும். வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்வீர்கள். ஆராய்ச்சிப் படிப்பு படித்துக் கொண்டிருப்பவர்கள் முன்னேற்றமான சூழ்நிலை. எதிர்பார்ப்பு நிறைவேறும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உடன் பணிபுரிவோரின் ஆதரவு உண்டு. சேமிப்பில் முன்னேற்றம் காண்பீரகள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். நண்பர்கள் வழியில் ஏற்பட்ட வருத்தம் நீங்கும். சிக்கல்கள் மறையும். தனவரவு உண்டாகும். குறைந்த அளவு முதலீட்டிலும் அதிக லாபத்தை அள்ளுவீர்கள். எண்ணங்களுக்குத் தகுந்த செயல் வடிவம் கொடுப்பீர்கள். உடல் உபாதை விலகும். விட்டுக்கொடுத்து செல்ல வேண்டியிருக்கும். குழந்தைகள் வழியில் கூடுதல் செலவு ஏற்படும். பெற்றோரின் உடல் நிலை திருப்தியளிக்கும். மாணவர் படிப்பில் கவனம்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

வீண் வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். கடனாகக் கொடுத்திருந்த பணம் திரும்ப வந்துசேரும். நகை வியாபாரம் முன்னேற்றம் தரும். கடந்த வாரங்களில் எடுத்ததற்கெல்லாம் பிரச்னை என்றிருந்த நிலை மாறி நிம்மதி மீளும். பெரிய தீர்மானம் எடுக்கும்போது அனுபவசாலிகளின் ஆலோசனையை நாடுவது நல்லது. மேலதிகாரிகள் மற்றும் முதலாளியிடம் விட்டுக்கொடுப்பது நல்லது. சமூகத்தில் நற்பெயர் வாங்குவீர்கள். உறவினர் வருகை மகிழ்ச்சி தரும். குடும்பத்தினருடன் வெளியில் சென்று மகிழ்வீர்கள்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

உடன் பிறந்தோரால் ஆதாயம் உண்டு. கொடுக்கல், வாங்கலில் கவனமாக இருந்தால் பிரச்னை உண்டாகாது. சொத்துக்கள் மூலம் வருமானம் உயரும். சிலர் மனம் விரும்பிய வீட்டிற்குக் குடி பெயர்வார்கள். புதிய திட்டம் நிறைவேறுதில் தாமதமாகும். குழந்தைகள் உடல் நலனில் கவனம் தேவை. விடாமுயற்சியால் வெற்றி கிடைக்கும். உயர்ந்தவர்களின் நட்பால் வளர்ச்சி காண்பீர்கள். உடல்நலக்குறைவு நீங்கும். வருமானம் திருப்தி தரும். பழைய கடன் அடைபடும். தம்பதியரிடையே இணக்கம் குறையும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். வீண் அலைச்சல் இருக்கும். அடுத்தவர்களிடம் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. தொலைதூரத் தகவல்கள் நல்லவையாக இருக்கும். எதிலும் நிதானம் தேவை. உடல்நிலை சீராகும். கலைத்துறையினர் கோபமாகப் பேசுவதைத் தவிர்க்கவும். அதிகாரிகளுடன் வாக்குவாதம் ஏற்படாதபடி நடப்பது நல்லது. சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். புதிய முயற்சிகளில் ஈடுபடும் போது நிதானமுடன் செயல்படுவது அவசியம். தொழிலில் சீரான வளர்ச்சி இருக்கும்.

---

பகிர்வு - 5

# துயர் பகிர்வு

கணபதி சர்வானந்தா

சமகாலத்தில் நமது சமூகம் எப்படி இருந்ததென்பதை ஆவணப்படுத்துகின்ற முயற்சியே இலக்கியப் படைப்பு. அந்தவகையில் யாருக்கும் இல்லாத பொறுப்பு எழுத்தாளனுக்கு இருக்கிறது. அதுவே அவனுக்குக் கிடைக்கும் பெரிய அங்கீகாரம். வள்ளுவன் தொடங்கிப் பாரதிதாசன் வரையிலானவர்களின் படைப்புகளை இன்றும் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அவை எம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட சங்ககால இலக்கியங்களை சமூகம் இன்றும் கொண்டாடிக் கொண்டிருப்பதற்குக் காரணம் அவற்றின் கனதி என்றே சொல்லலாம்.

1960களில் வாசிப்பே முக்கிய பொழுது போக்காக இருந்தது. பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வாசிப்புக்குரிய முக்கிய தளமாகக் காணப்பட்டன. இந்திய இதழ்கள் தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்தன. அக்காலத்தில் இங்கு குறிப்பிடத்தக்கவர்களே எழுதிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் இணுவில் கிழக்கைச் சேர்ந்த கார்த்திகேசு சச்சிதானந்தம். கே.எஸ்.ஆனந்தன் என்ற புனைபெயரிலேயே அவர் அப்போது எழுதிவந்தார்.

கதை, நாடகம், ஆய்வுக்கட்டுரை, இலக்கிய விமர்சனங்கள் எனப் பல விடயங்களை ஜனரஞ்சமாக எழுதத் தொடங்கினார். ஒன்பது நாடகங்களை மேடையேற்றியுள்ளார். ஆரம்பத்தில் இவரது ஆக்கங்களைப் பிரசுரிக்கப் பத்திரிகைகள் ஆர்வம் காட்டாது போனாலும் இவர் எழுதுவதை நிறுத்தாது தொடர்ந்து எழுதி வந்தார். பின்னர் இவரது படைப்புகளை, குறிப்பாக இவரது நாவல்களைத் தேடிப் பிரசுரிக்குமளவுக்கு பத்திரிகைகள் ஆர்வம் காட்டின. இதுவரை நூலுருப் பெற்ற இவரது பத்து நாவல்களில் எழுபதுகளில் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்த வெற்றிப்படைப்பான "தீக்குள் விரலை வைத்தால்" என்ற நாவல் பலரது வரவேற்பையும் பாராட்டையும் பெற்றதோடு முன்னணி வெளியீடாகவும் காணப்பட்டது. தொடர்ந்து இரண்டாவது பதிப்பையும் வெளியிட வேண்டியதாயிற்று.

இவர் எழுதிய சிறுவர் இலக்கியத்துக்காக "யாழ். இலக்கிய வட்டம்" இவரைக் கௌரவித்தது. இவர் நாடகத்துக்காக "அகில இலங்கைச் சைவப் புலவர்கள் சங்கம்" அவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தது. இலங்கைப் பத்திரிகைகளில் மட்டுமல்ல தமிழகத்திலிருந்து வெளிவரும் முன்னணிப் பத்திரிகைகளான கல்கி, கலைமகள், ஆனந்தவிகடன், குமுதம் ஆகியவற்றிலும் கே.எஸ்.ஆனந்தனின் படைப்புகள் வெளிவந்தன. தன்னை எழுதத் தூண்டிவர்களில் ஒருவராக மறைந்த எழுத்தாளர் செ.குணராசாவை -செங்கையாழியானை - முதன்மைப்படுத்தியிருக்கிறார் கே.எஸ்ஆனந்தன். செங்கையாழியான் இவர் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் "ஒரு பரந்துபட்ட வாசகர் பரப்பைக் கொண்டவர்" என்று குறிப்பிட்டிருந்த பதிவையும் காண நேரிட்டது. மேலும் தன்னை இத்துறையிலே எழுதத் தூண்டியவர்களில் பத்திரிகை ஆசிரியர் எஸ். டி.சிவநாயம் மற்றும் புலவர் பார்வதிநாதசிவம் ஆகியோர் மிக முக்கிய மானவர்கள் என இவர் கூறியிருக்கிறார்.

தனது படைப்பான தீக்குள் விரலை வைத்தால் என்ற நாவலின் இரண்டாவது பதிப்புக்காக அவர் எழுதிய ஆசிரியர் உரையில், "நான் எழுதிய நாவல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் படைக்கப்பட்டனவாயினும், தீக்குள்விரலை வைத்தால் என்ற இந்த நாவல் பலதரப்பட்ட வாசகர்களினாலும் வரவேற்கப்பட்டதொன்றாகும்.ஆகவே இந் நாவல் இரண்டாம் பதிப்பாக வெளிவருவதில் பெருமைப்பட எதுவும் இல்லை. இந்திய நூல்கள் குப்பையாக வந்திறங்கும் இவ்வேளையில் இந் நூலை மறுபிரசுரம் செய்ய வேண்டி நிற்கும் வீரகேசரி நிறுவனத்தையும், நண்பர் திரு.சி.பாலச்சந்திரன் அவர்களது துணிவையும் பாராட்ட வேண்டும்." எனக் குறிப்பிட்டிருக்கிறார். (இரண்டாவது பதிப்பு ஜூலை - 1978)

அப் பதிப்பில் உள்ள வெளியீட்டாளரின் மதிப்புரையிலே "சமூக வாழ்க்கையைக் களமாகக் கொண்டு படைக்கப்படும் நவீனத்திலும் "சஸ்பென்ஸ்"அம்சத்தைச் சாதுர்யமாகக் கையாள்வதால் போதிய விறுவிறுப்பையும், வாசகர் கவர்ச்சியையும் தோற்றுவிக்கலாம் என்பதை இந் நாவல் மூலம் நிரூபித்துள்ளார் கதாசிரியர் கே.எஸ். ஆனந்தன். ஜீவ - களை நிறைந்த பாத்திரங்கள், உள்ளத்தைத் தொடும் சம்பவங்கள், உணர்ச்சிமயமான நடை - இவையனைத்தும் கதைக்கு உயிரோட்டத்தை அளிக்கின்றன. படித்து முடித்ததும் ஒரு நல்ல நவீனத்தைச் சுவைத்தோம் என்ற மனச்சாந்தி ஏற்படுகின்றது - என்றவாறு எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன்.

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கே. எஸ். ஆனந்தன் இணுவில் சைவ மகாஜனா வித்தியாலயம், நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்ற பின்னர் பட்டப்படிப்பை வெளிவாரியாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்றார். இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் வேலைவாய்ப்பொன்றைப் பெற்றபோதும் அதனை விட்டுவிட்டு விவசாயத்தை மேற்கொண்டவர். சமூகப் பரப்பில் வாழுகின்ற மக்களின் உணர்வுகளைத் தன் ஒவ்வாரு நாவலிலும் வெளிப்படுத்தியுள்ளார். அவர் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.



## கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் "மாவீரர் நாள் நவம்பர் - 27" வாசகம்!

யாழ்ப்பாணம், நவ. 28
கொடிகாமம் - பருத்தித் துறை பிரதான வீதியின் நடுவே "மாவீரர் நாள் நவம்பர் - 27" வாசகம் எழுதப்பட்டுள்ளது.

மாவீரர் வாரம் ஆரம்பம் முதல் வடக்கு-கிழக்கில் இரா ணுவத்தினர், பொலிஸார் புல னாய்வாளர்கள் ஆகியோரின் சுற்றுக்காவல் (ரோந்து) நடவ டிக்கைகளும், கண்காணிப் புக்களும் தீவிரமாக முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன. இந் நிலையில் நேற்று அதி காலை வேளை குறித்த வீதியில் மாவீரர் நாளை நினைவு கூறும் முகமாக "மாவீரர் நாள் நவம்பர் - 27" என எழுதப்பட்டுள்ளது.(அ-03)

## வவுனியாவில் மின் தாக்கி முதியவர் ஒருவர் மரணம்!

வவுனியா, நவ. 28
வவுனியா- நொச்சி மோட்டை, துவரங்குளம் பகுதியில் விலங்குகளுக்காக பொருத்தப்பட்ட மின்சார இணைப்பில் சிக்கி, முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை 5 மணிய ளவில் குறித்த முதியவர், தனது வீட்டிலிருந்து மரவள்ளிக் கிழங் குகளை பறிப்பதற்காக அருகில் உள்ள தோட்டக்காணிக்குச் சென்றுள்ளார்.

இவ்வாறு சென்ற அவர், நீண்ட நேரமாகியும் வீட்டுக்கு திரும்பாத நிலையில் அவரது மனைவி அவரை தேடியுள்ளார்.

இதன்போது முதியவர், அவ ரது தோட்டக்காணியில் சடல மாக கிடந்துள்ளார். அதனைத் தொடர்ந்து சம்பவம் தொடர் பாக ஓமந்தை பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் சம்பவ இடத் துக்குச் சென்ற ஓமந்தை பொலி ஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் நொச்சி மோட்டை பகுதியைச் சேர்ந்த துரைச்சாமி சுப்பிரமணியம் (வயது 69) என்ற முதியவரே உயிரிழந்துள்ளார். (அ)

## 6 நாடுகளின் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருவதற்கு தடை!

கொழும்பு, நவ. 28
தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட கோவிட்-19 வைரஸின் புதிய மாறுபாடு காரணமாக தென்னாபிரிக்கா உள்பட ஆறு நாடுகளின் சுற்றுலாப் பயணி கள் இலங்கைக்கு வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை நேற்று முதல் நடைமுறைக்கு வரும் என சிவில் விமானப் போக்குவரத்து அதி கார சபை தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்கா, பொட்ஸ் வானா, லெசோதோ, சிம் பாப்வே, சுவாசிலாந்து மற்றும் நமீபியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகளுக்கு இந்தத் தடை பொருந்தும் என சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்துள் ளார்.

இந்த நாடுகளில் இருந்து வேறு நாட்டுக்கு செல்லும் போக்குவரத்து விமானங்களும் தடை செய்யப்பட்டுள்ளன.

அந்த நாடுகளில் இருந்து எவரேனும் ஏற்கனவே இலங் கைக்கு வருகை தந்திருந்தால், அவ்வாறான பார்வையாளர்கள் தனிமைப்படுத்தலுக்கு அனுப் பப்படுவார்கள் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

## சுதந்திரக்கட்சியே தாய்க்கட்சி!

### மொட்டு கட்சிக்கு துமிந்த பதிலடி

கொழும்பு, நவ. 28
"மொட்டு கட்சியின் தாய் வீடுகூட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிதான். எனவே, அக்கட் சியை அழிக்க முடியாது." - என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில் சிலருக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இன்று சிறிய கட்சியாக தெரியலாம். இது தான் தாய்க்கட்சி என்பதை மறந்துவிட்டே அவர்கள் விமர் சனங்களை முன்வைக்கின்றனர்.

மாகாண மற்றும் உள்ளாட் சிமன்றத் தேர்தல்களின்போது நாம் பலத்தை காட்ட வேண்டும். மாறாக அரசு கவனிப் பதில்லை யென கவலையடைந்து கொண் டிருப்பதில் பயன் இல்லை - என்றார். (அ)

# மஹிந்தானந்த காற்சட்டையுடன் வீதியால் செல்ல முடிகின்றதா?

### குமார வெல்கம எம்.பி. கேள்வி



**கொழும்பு, நவ. 28**
**அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே யால் இப்போது காற்சட்டை அணிந்து கொண்டு வீதி யில் செல்ல முடிகின்றதா எனத் தெரியவில்லை. நானாக இருந்தால் தற்போது ஒரு முறையல்ல, 10 முறையாவது என் பதவியை இராஜினாமா செய்திருப்பேன் என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.**

அத்தோடு, நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதி பதி, அதிக அதிகாரத்தால் பைத்தியக்காரராவார் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை யாற்றையில்-

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மையை நீக்க முடியாவிட்டால், குறைந்த பட்சம் அடுத்தமுறை அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களை பாராளுமன் றத்துக்கு அனுப்பவேண்டும். அவ்வாறில்லாது இந்த பய ணத்தில் தொடர்ந்து பயணிக்க முடியாது. தனியொருவருக்கு முழு அதிகாரத்தையும் கொடுப் பது ஆபத்தானது. இது மிக ஆபத்தான அதிகாரங்கள்.

ஆணை பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்ற முடியாது என அன்று ஜே.ஆர். ஜெயவர்தன கூறினார். ஆனால், இன்றுள்ள அதிகாரத்தைக் கொண்டு அதனையும் செய்ய முடியும். இவ்வாறான அதி காரம்கொண்ட ஜனாதிபதி பைத்தியக்காரராவார். மூளை மலிவடைந்து, தனக்கு தேவை யானவரை மாத்திரம்கொண்டு ஆட்சியை முன்னெடுப்பதற்கு முயற்சிப்பார். யாரிடமும் ஆலோசனை கேட்கமாட்டார். நானே அதிகாரம் படைத்தவன் என நினைப்பார்.

ஆகவே, இந்த அரசாங்கத் துக்கு எதிராக அனைத்து சக்தி களும் ஒன்றிணையவேண்டும். அப்போது எங்களால் மாற்ற மொன்றை ஏற்படுத்த முடியும். இன, மதங்களை மறந்து எதிர் வரும் சந்ததியினரை பற்றி சிந் தித்து ஒரு முடிவை எடுக்க வேண்டும்.

மக்கள் புரட்சி ஏற்பட்டு ஜனா திபதியை மாற்றினாலே தவிர, தற்போதுள்ள அதிகாரமுறைக்கு அமைய ஜனாதிப தியை பதவி நீக்கம் செய்ய முடியாது. விமல் வீரவன்ஸவின் தரப்பினரும் மைத்திரிபால சிறிசேனவின் தரப்பினரும் அரசாங்கத்திலி ருந்து வெளியேறினாலும் அரசாங்கத்துக்கு 120இற்கும் அதிகமான ஆசனங்கள் இருப் பதால் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது. சட்டத்தின்படி 2024ஆம் ஆண்டே ஜனாதிப தித் தேர்தல் நடத்தப்படும். 2024ஆம் ஆண்டு நடத்தப்ப டும் தேர்தலுக்கு தற்போதிருந்து குழப்பமடைவதில் அர்த்த மில்லை. அந்த காலப்பகுதி வரை நாங்கள் உயிரோடு இருப்போமா என்பதே தெரி யாது. ஆகவே, 2023, 24ஆம் ஆண்டு வரும்போது, பொது மக்களே சிறந்த நபரொருவரை பொது வேட்பாளராக தெரிவு செய்வார்கள். அதுவரை நாங் கள் அமைதியாக இருக்க வேண் டும். ஆனால், 50 வீதமான புதிய முகங்களை அடுத்த முறை தெரிவு செய்வார்கள்.

இன்று மஹிந்தானந்த அளுத்கமகேவால் காற்சட்டை அணிந்துகொண்டு பாதையில் செல்ல முடியுமா எனத் தெரிய வில்லை. அவருக்கு எதிராக எரிக்கும் உருவப்பொம்மை களை பார்த்தும் பாதையில் செல்ல வெட்கமில்லையா? நானாக இருந்தால் தற்போது ஒரு முறையல்ல, 10 முறையா வது என் பதவியை இராஜி நாமா செய்திருப்பேன்.

அதேபோன்று வரலாற்றில் இதுவரை யாருக்கும் இடம் பெறாது அவமானங்கள் ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ வுக்கு இடம்பெறுகின்றன. ஒவ்வொரு போராட்டங்களி லும் அவருக்கு எதிராக விமர்ச னங்களை முன்வைக்கின்றனர்.

எதிர்வரும் காலங்களில் பொருளாதார பாரிய வீழ்ச் சியை சந்திக்கும். இந்த நாட்டை அமெரிக்காவுக்கு தொடர்பு டையவர்களே நாட்டை ஆட்சி செய்வார்கள். 69 இலட்சம் மக்களை ஏமாற்றியுள்ளனர். இது இறைவனின் சாபமாகும். இந்த சாபமே இந்த அரசாங் கத்தை ஆட்டிப்படைக்கின்றது. இது எங்கு போய் முடியும் எனத் தெரியாது -என்றார்.

## கோதுமை மாவின் விலை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 28
கோதுமை மாவின் விலை நேற்று சனிக்கிழமை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக புறக்கோட்டை மொத்த வர்த்தக சந்தை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 17 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக சந்தை உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, சந்தையில் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வெதுப்பக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு நில உரிமையை வழங்குங்கள்

### கூட்டமைப்பு சபையில் வலியுறுத்து

கொழும்பு, நவ. 28
"200 வருடங்களாக இந்நாட் டுக்கு உழைத்தும் இன்னும் காணி உரிமையற்றவர்களாகவே மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு துண்டு காணியைக்கூட வழங்க முடியாத நிலையிலேயே காணி அமைச்சு இருக்கின்றது."

-என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு- செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத் தில் கலந்துகொண்டு உரையாற் றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வரு மாறு:

காடாக இருந்த மலை நாட்டை மலையக மக்கள் வளமாக்கினர். இந்நாட்டின் பொருளாதாரத்தை தோளில் சுமந்தனர். 200 வருடங்களாக உழைப்பை வழங்கிவருகின் றனர். ஆனால் அம்மக்களுக்கு இன்னும் காணி உரிமை இல்லை.

தற்போது 7 பேர்ச்சஸ் காணி யில் வீடுகள் கட்டப்படுகின் றன. அதுவும் பின்னிலையி லேயே இருக்கின்றது.

ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படுகின்றது எனக் கூறப்பட்டாலும் வேலை நாட் கள் குறைக்கப்பட்டுள்ளன. எனவே, அவர்கள் தொடர்பில் கூடுதல் கரிசனை செலுத்துங்கள்-என்றார்.

# பாடசாலை மாணவரிடையே வேகமாக பரவும் கொரோனா!

கொழும்பு, நவ. 28

பாடசாலை மாணவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவும் நிலைமை உருவாகியுள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளதாகவும் குறித்த பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதன்படி, அனைத்து மருத்துவ அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டுமெனவும் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன் பின்னர் எடுக்கப்படும் தீர்மானங்களை உடனடியாக எடுக்க வேண்டுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிச் செயலாளர் நவீன் டி சொய்சா தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் தொற்றுநோய் பரவி வருவதால், இந்நோய் மேலும் பரவாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஏற்கனவே பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.





# யாழ்.நகரில் போராட்டத்தில் ஈடுபட்டோர் விரட்டியடிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 28

**யாழ்.நகரில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்தப்பட இருந்த போராட்டம் பொலிஸாரின் தலையீட்டினால் இடைநிறுத்தப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட வந்தவர்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.**

நேற்று சனிக்கிழமை மாவீரர் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், யாழ். நகரில் சமூக நீதிக்கான அமைப்பினரின் ஏற்பாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் தேசியக் கொடியை ஏந்தி, விடுதலைப் புலிகளுக்கு எதிரான சுலோகங்களை தாங்கியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட இருந்தது.

இதன்போது அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார், தற்போதுள்ள நிலையில் இவ்வாறு அதிகளவானோர் ஒன்று கூடிப் போராட்டங்களை நடத்த முடியாது என கூறினர்.

மேலும், போராட்டத்தில் ஈடுபட்டோரை அவ்விடத்திலிருந்து கலைந்து செல்லுமாறும் இல்லாவிடின் அவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (அ-03)



# மாவீரர்களுக்கு நந்திக்கடலில் அஞ்சலி செலுத்திய ரவிகரன்!

முல்லைத்தீவு, நவ. 28

முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், இராணுவத்தினருடைய கெடுபிடிகளுக்கு மத்தியில் மாவீரர்களுக்கு, நந்திக்கடலில் மலர்தூவி நேற்றுக் காலை அஞ்சலி செலுத்தினார்.

எங்கள் பெருமைமிகு வரலாற்றின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடலாகும் என துரைராசா ரவிகரன் கூறியுள்ளார்.

மேலும், ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும் செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, உயிர் நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த அஞ்சலி நிகழ்வுகளில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உருக்குலைந்த நிலையில் வடமராட்சி கிழக்கில் நேற்று சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 28

வடமராட்சி கிழக்கு மணற்காடு பிரதேசத்தில் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

நேற்று காலை குறித்த சடலம் கரையொதுங்கியதாக பிரதேச மீனவர்கள் தெரிவித்தனர்.

மணற்காடு அந்தோனியார் கோவில் பகுதியில் சடலம் கரையொதுங்கிய நிலையில் அதில் காயம் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் இந்திய மீனவருடையதா என்ற கோணத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# மாவீரர் நாளை முன்னிட்டு பொலிஸாருக்கு உதவியாகவே இராணுவத்தினர் களமிறக்கம்

## யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

மாவீரர் தினமாகிய நேற்று பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாகவே இராணுவத்தினர் களமிறக்கப்பட்டனர் என யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு தெரிவித்தார்.

புத்தூர் பகுதியில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீட்டைக் கையளிக்கும் நிகழ்வின்போது, யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் பிரசன்னம் அதிகமாக காணப்படுகின்றது ஏன் என ஊடகவியலாளர்கள் வினவியதற்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்.நகரில் இராணுவத்தினரின் பிரசன்னம் அதிகமாக காணப்படுகின்றது. எனினும் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இராணுவத்தின் கடமையாகும். அதனை இராணுவத்தில் தாக்கிய நாங்கள் மேற்கொண்டுள்ளோம். எந்த சூழ்நிலையிலும் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இராணுவத்தினராகிய நாங்கள் முன்னின்று செயற்படுவோம்.

அதனடிப்படையில் தற்போது பொலிஸாருக்கு உதவும் முகமாகவே இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளார்கள். அத்தோடு சட்டம் ஒழுங்கை பொலிஸார் நிலைநிறுத்துவதற்கு செயல்படுகிறார்கள்.

அவர்களுக்கு ராணுவத்தினரின் ஒத்துழைப்பு தேவைப்படுமிடத்து ராணுவத்தினரும் களமிறக்கபடுவார்கள்-என்றார். (அ)

# ஒற்றையாட்சிக் கட்டமைப்பு அரசியலமைப்பே உருவாகும்

## ஆஸி. தூதுவரிடம் சித்தார்த்தன் எடுத்துரைப்பு

கொழும்பு, நவ. 28

நாட்டின் தற்போதைய ஆட்சியாளர்களினால் உருவாக்கப்பட்டு வரும் புதிய அரசமைப்பு, ஒற்றையாட்சிக் கட்டமைப்பை வலுவாகக் கொண்ட சிங்களம் மற்றும் பௌத்தத்தை முன்னிலைப்படுத்தியதாகவே உருவாகும் சாத்தியம் அதிகம் காணப்படுவதாக புளொட் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அவுஸ்திரேலிய தூதுவர் டேவிட் ஹோலிக்கும் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் இடையிலான சந்திப்பொன்று தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது, புதிய அரசமைப்பு தொடர்பான விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டபோதே சித்தார்த்தன் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும், வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்பட வேண்டிய உட்கட்டமைப்பு விடங்கள் தொடர்பாக அவுஸ்திரேலிய தூதுவரின் கவனத்துக்கு கொண்டு வந்த சித்தார்த்தன், கல்வித்துறை மேம்பாட்டுக்கான ஒத்துழைப்புக்களை அவுஸ்திரேலியா மேம்பட்ட ரீதியில் தொடர்ந்தும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரியுள்ளார்.

மேலும், தமிழ் மக்களின் பொறுப்புக்கூறல் விடயத்தில் சர்வதேசத்தின் அழுத்தங்கள் மேலும் வலுவாக முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் சித்தார்த்தன் தூதுவரிடன் கூறினார்.

இதேவேளை, தற்போதைய அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையிலான ஒரு அரசமைப்பை உருவாக்கும் என நம்பிக்கை கொள்ளவில்லை எனவும் சித்தார்த்தன் குறிப்பிட்டார். (அ)

# தனிவழி பயணத்துக்கு தயாராகின்றது சு.க.!

கொழும்பு, நவ. 28


மாகாணசபைத் தேர்தலில் தனித்து களமிறங்குவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தயாராகி வருகின்றது என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடை யிலான மோதல் உக்கிரமடைந்துள்ளது.

அதேபோல சுதந்திரக் கட்சிக்கு அரச கூட்டுக்குள் பாகுபாடு காட்டப்படுவதாகவும், நிதி ஒதுக்கீடுகள் இடம்பெறுவதில்லை எனவும் அக்கட்சி உறுப்பினர்கள் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்திவருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தனிவழி செல்வதற்கு சுதந்திரக்கட்சி தயாராகிவருகின்றது என தெரிய வருகின்றது. (அ)




# ஒற்றுமையின்மை; சுயநலம்; வெற்றுப் பூசல்கள்!



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

## ஓர் ஒருங்கிணைந்த தமிழ் கூட்டமைப்பை முன்னிறுத்துவதற்கான நேரம்

வேலுப்பிள்ளை பிரபாகரனை நான் மிகவும் 'மிஸ் பண்ணுகிறேன்'. ஈழம் வென்றிருப்போமா என்ற விவாதத்திற்கு நான் போகவில்லை, ஆனால், அவரும் அவரது துப்பாக்கியும் இருந்திருந்தால், இது போல் அவமானங்கள் நிகழ்ந்திருக்காது. இனம் இப்படி உலகத்தின் முன்னால் ஓர் ஒற்றுமையற்ற உருவமாகவும், சுயநலத்தால் சிதறிப்போன உறவாகவும், வெற்றுப் பூசல்களின் வடிவமாகவும் சரிந்திருக்காது. புலியின் கோரப் பற்கள் மற்றும் கூர் நகங்கள் மீதான பயம் காரணமாகவேகூட, இப்படி வெளிப்படையாகவும் மோசமாகவும் உரக்க சண்டையிடாமல் இவர்கள் இருந்திருப்பார்கள்.

சனிக்கிழமை, நவம்பர் 21ஆம் திகதியன்று, கனடாவின் ஸ்கார்பரோவில் வெடித்த கொந்தளிப்பைப் பற்றித்தான் புலம்புகிறேன். தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனும், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இரா. சாணக்கியனும் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளார்கள் என்று சொல்லியிருந்தது அந்த பொதுக் கூட்டத்திற்கான அழைப்பிதழ். அழைப்பிதழின் அடியில், சிறு எழுத்துக்களில், அரங்கிற்கு வருவதற்கான விதிமுறைகளும் சொல்லப்பட்டிருந்தன. 'கோவிட்-19 தடுப்பூசிகள் இரண்டையும் ஏற்றிக் கொண்டதற்கான ஆதாரத்தைக் கொண்டுவருவோர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். அத்துடன் அனைத்து சுகாதார வழிமுறைகளையும் கடைபிடிக்கவேண்டும். மண்டபக் கொள்ளளவிற்கு ஏற்பவே மக்கள் அனுமதிக்கப்படுவார்கள்' என்று அதில் கூறப்பட்டிருந்தது.

அரங்கத்திற்குள் நுழைபவர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்ற விதிமுறைகள் அழைப்பிதழில் தெளிவாகக் கூறப்படவில்லை. தங்களது தாய்நாட்டிலிருந்து வந்திருந்த இந்த இரு பேச்சாளர்களின் உரையைக் கேட்பதற்காக சிலர் அங்கு செல்லவில்லை என்பது இறுதியில் தெரிந்துபோனது. சுமந்திரன் பேசாமல் இருப்பதை உறுதி செய்யவே அவர்கள் அரங்கில் கூடியிருக்கிறார்கள். இந்த அரங்கில் நடந்த துரதிருஷ்டவசமான நிகழ்வுகளின் வீடியோக்களைப் பார்க்காத 'ஈழநாடு' வாசகர்கள் இப்போதாவது அதைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமது முன்னோர்களும் தாய்மார்களும் நமக்கு ஊட்டிவிட்ட பரஸ்பர மரியாதையும் சகிப்புத்தன்மையும் கொண்ட நமது பண்பாடு, எந்த அளவுக்கு அதல பாதாளத்தில் சரிந்துவிட்டது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

ஈழத்தைச் சேர்ந்த, புலம்பெயர்ந்த என்னுடைய பல நண்பர்களிடம் பேசினேன். பெரிய கோஷங்கள் எழுப்பி, மாநாட்டைக் குலைத்தவர்களின் செய்கைக்குப் பலர் கண்டனம் தெரிவித்தனர். ரொறன்ரோவுக்குச் செல்வதற்கு முன்னால் இந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் நடந்துகொண்ட முறையைப் பற்றி சிலர் மனவருத்தத்தைத் தெரிவித்தனர். "கடந்த சில நாட்களாக சுமந்திரன் ஒரு சார்புநிலையுடன் நடந்து கொள்கிறார். சம்பந்தர் மற்றும் மாவை (சேனாதி ராஜாவை) மட்டும் கலந்து ஆலோசிக்கிறார் எனத் தெரிகிறது. ஆனால், கூட்டமைப்பின் பிற மூத்த உறுப்பினர்களுடன் அவர் பேசுவதில்லை. இதோ, இந்த மோசமான கனடா பயணம்கூட இரகசியமான முறையில் நடந்திருக்கிறது" என்றார் ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர். தன் பெயரைக் குறிப்பிடவேண்டாம் என்று அவர் கேட்டுக்கொள்ளவில்லை என்றாலும், கூட்டமைப்பில் ஏற்கனவே உள்ள பூசல்களைப் பெரிதாக்கவேண்டாம் என்று நானாகவே அவரது பெயரைத் தவிர்க்கிறேன்.

உரையின்போது பிரச்னை பண்ணியவர்களிடமிருந்து புலம்பெயர்ந்தவர்கள் பலர் விலகியே இருந்தாலும், ரொறன்ரோவைச் சேர்ந்த வழக்கறிஞரும் செயற்பாட்டாளருமான ஒரு நண்பர், 'புலிக்கொடிக் கூட்டம்' என்றபடி அவர்களை உதறித் தள்ளினார். புலம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானோருக்கு இந்த கேவலமான கூச்சல் குழப்பத்தோடு எந்தத் தொடர்பும் இல்லை என்று வலியுறுத்தினார். தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த பலர், இந்த இருவரின் வெளிநாட்டுப் பயணத்துக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறினர். அப்படியானால், இந்தப் பிரச்னை சுமந்திரன் மற்றும் 'புலிக்கொடிக் கூட்டம்' ஆகிய இரு தரப்புகளுக்கு இடையில் மட்டுமே இருப்பதாகவும், வேடிக்கை பார்ப்பதைத் தவிர தமிழ்ச் சமூகத்திற்கும் இதற்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்றும் புரிந்து கொள்ளலாமா? ஈழத் தியாகிகளின் பிரதிநிதிகளாகத் தங்களை அடையாளப்படுத்திக்கொண்டு இங்கு இலங்கையிலோ புலம்பெயர்ந்தோ வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழர்கள், தங்கள் அரசியலில் குறுக்கிடும் எவரையும் 'துரோகி' என்று முத்திரை குத்துவதற்கு முழு அதிகாரத்தை வைத்திருக்கிறனர் என்று புரிந்துகொள்ளலாமா? அவர்களை செயல்படவிடாமல் தடுத்து, தன் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கான குறைந்தபட்ச ஜனநாயக உரிமையைக்கூட அவர்களுக்கு அளிக்காமல் இருக்கவும் இந்தக் குழுவுக்கு அதிகாரம் உள்ளதா?

சுமந்திரன் ஒரு சிறந்த வழக்கறிஞர், மனித உரிமைகள் மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் நிபுணர், 2007ஆம் ஆண்டு தொடங்கி இவர் ஜனாதிபதியின் சட்ட ஆலோசகராக இருந்திருக்கிறார் என்பதை எல்லாம் அறிவோம். கூட்டமைப்பின் தலைவர் பதவியைப் பெறுவதற்காக விடாமுயற்சிகள் செய்து வருகிறார் என்றும், அதற்கு சம்பந்தரும் மாவையும் ஒப்புக்கொண்டனர் என்றும் சில கூட்டமைப்பு நண்பர்கள் சொல்கிறார்கள். அது உண்மையாக இருந்தாலும் அதில் தவறில்லை. யாராக இருந்தாலும் வாழ்க்கையிலும், தொழிலிலும், சமுதாயத்திலும் சிகரத்தை எட்ட முயல்வது குற்றமும் இல்லை. மாறாக, அந்த உற்சாகம் வரவேற்கக்கூடியதே. கூட்டமைப்பில் இருக்கிற சில நண்பர்கள், ஏன் இலங்கை அரசியல் வட்டாரங்களுக்கு வெளியில் இருக்கும் நண்பர்கள்கூட, அவர் கொஞ்சம் திமிரோடு நடந்துகொள்வார் என்றும், அவ்வளவு சீக்கிரம் சாமானியர்களோடு பழகமாட்டார் என்றும் கூறுகின்றனர். இந்தத் தகவல் உண்மையானால், அது துரதிருஷ்டவசமானதுதான். இந்தியாவிலும் மூத்த காங்கிரஸ் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான ப. சிதம்பரத்தைப்பற்றியும் இப்படி ஒரு குற்றச்சாட்டு அவ்வப்போது எழும். புத்திசாலித்தனமான, ஆனால் மற்றவர்களுடன் பழகாத ஓர் அரசியல்வாதி - அதனால்தானோ என்னவோ, அவரால் மக்கள் தலைவராக உருவெடுக்க முடியவில்லை. தமிழ்நாட்டில் ஜி. கே. மூப்பனார், மத்தியில் சோனியா காந்தி, மன்மோகன் சிங், ஆகியோருக்கு அடிபணிந்தவராகவே அவர் பார்க்கப்பட்டார்.

இந்த ஸ்காபரோ பேரிடருக்கு முன்பாக, தனது தலைமையிலான சட்ட வல்லுநர்கள் குழு ஒன்றை சுமந்திரன் அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றிருந்தார். அமெரிக்க அரசு, அதிகாரிகள் மற்றும் சட்ட வல்லுநர்கள் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்தக் குழுவுக்கு அழைப்பு விடுத்திருந்தது. டாக்டர் நிர்மலா சந்திரகாசன், கே. கனகேஸ்வரன் ஆகியோர் அடங்கிய இந்தக் குழு, தமிழ் தேசிய கூட்டமைப்பின் நீண்டநாள் கோரிக்கையைப் பற்றி விவாதித்தது. மே 2009இல் நடந்த ஈழப்போரின் இறுதியிலிருந்தே இது மீண்டும் மீண்டும் முன்வைக்கப்படும் ஒரு கோரிக்கையாகும். தமிழ்ப் பிரச்னைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்பதும், மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கும் 13ஆவது சட்டத் திருத்தத்தை அமல்படுத்துவது அதில் முதல் படி என்றும் அந்தக் கோரிக்கையில் வலியுறுத்தப்பட்டது. இந்த அரசியல் தீர்வுக்கு இந்தியாவுடன் அமெரிக்கா கைகோர்க்கவேண்டும் என்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எண்ணத்தையும் சுமந்திரன் குழு அமெரிக்க அதிகாரிகளிடம் முன்வைத்ததாக தொடர்பான வட்டாரங்கள் தெரிவித்தன. இதுவரை, மேலை நாடுகள் நீதி மற்றும் மனித உரிமை பிரச்னை பற்றிய விவாதங்களில் ஈடுபட்டிருந்தபோது, இந்தியா மட்டுமே ஓர் அரசியல் தீர்வைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தது.

இந்தியா, அமெரிக்கா, பிற மேலை நாடுகளிடம் தென்படும் இந்த மனமாற்றம், சீன பிடியிலிருந்து ராஜபக்ஷக்களை வெளியேற்றுவதற்கான ஒரு நோக்கத்துடன் வந்திருக்கலாம் என்று என்னிடம் பலர் கூறுகின்றனர். சீன அதிபர் ஜீ ஜின்பிங்கின் ஆதிக்கப் பரவலாக்கத் திட்டத்துக்கு எதிராக எழுந்திருக்கும் நான்முனைக் கூட்டணியான 'க்வாட்' அமைப்பில் இலங்கையை இணைப்பதற்கான முயற்சியாகவும் இது இருக்கக் கூடும். டிராகனுடைய (சீன) கடனில் மூழ்கிவிடாமல் நமது இலங்கையைக் காப்பாற்றுவதற்காக ஒரு பெரிய அளவிலான நிதி ஒதுக்கப்பட இருக்கிறது என்று தெரிகிறது.



இந்த ரொறன்ரோ சொதப்பலுக்குப் பிறகு, சுமந்திரனின் அணி லண்டனுக்குச் சென்று, இதேபோன்ற ஒரு பேச்சுவார்த்தையை பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் நடத்தியது. அதாவது, இந்தியாவுடன் கூட்டணி சேர்ந்து ஓர் அரசியல் தீர்வுக்காக இலங்கையிடம் பேசுவது. இதில் ஏதோ ஓர் அவசரத் தன்மையும் இருக்கக் கூடும். ஏனென்றால், அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார். அவரது அரசியல் நிலைப்பாடுகள் எப்படி இருக்கும் என்று தெரியாத நிலையில், ஒன்பது மாகாண சபைகளுக்கான தேர்தலை அவர் அறிவிப்பதற்கு முன்பே, மாகாண சபைகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் கிடைப்பது நல்லது என்று நினைக்கிறேன்.

தமிழ் ஒற்றுமை இருந்தால், சர்வதேச அதிகார அமைப்புகள் தமிழர்களிடம் வந்து சீனாவுக்கு எதிராக நிற்பதற்கு ஆதரவு கேட்பார்கள் என்று சில நாட்களின் முன்பு எழுதியிருந்தேன். இதோ இப்போது, அந்த அதிகார அமைப்புகள் உங்களை நாடுகின்றன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தலைவர்கள், கட்சிகள், பிற அமைப்புகளுக்கு இடையிலான இடைவெளியை சரிகட்டி, ஓர் ஒருங்கிணைந்த தமிழ் கூட்டமைப்பை முன்னிறுத்துவதற்கான நேரம் இது. 'துரோகி' என்ற சொல்லை உங்கள் அகராதியிலிருந்து நீக்குவதன்மூலம் உங்கள் செயல்பாட்டைத் தொடங்கலாம். உண்மையிலேயே, வலிமையான ஒரு மனிதன், ஒரு துரோகியைக்கூட நண்பனாக மாற்றலாம். ஸ்கார்பரோவில் நடந்ததும் அதுதான் - "நான் முதலில் பேசி முடித்துவிடுகிறேன், அதைக் கேட்டுவிட்டு நீங்கள் எழுப்பும் கேள்விகளுக்கு விடையளிக்கிறேன்" என்று உறுதியளித்து சுமந்திரன் இறைஞ்சியபோதும்கூட, 'புலிக்கொடிக் கூட்டம்' அவரைப் பேச விடவில்லை.

சுமந்திரனுக்குப் பேச வாய்ப்பளித்துவிட்டு, பிறகு அவரைக் கேள்விகளால் வறுத்தெடுத்திருக்கலாம் என்றுதான் என்னிடம் பேசிய பலரும் கூறினார்கள். ஆனால், சலசலப்பை ஏற்படுத்தி, "திரும்ப வராதீர்கள்" என்ற கோஷத்தோடு அவர் வெளியில் அனுப்பப்பட்டார். அதோடு, தனக்கு எல்லாம் தெரியும், மற்றவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று சுமந்திரன் நம்பினாலும்கூட, தனது கட்சி உறுப்பினர்களிடமும் அரசியலுக்கு அப்பாற்பட்ட பிறரிடமும் சுமந்திரன் தொடர்ந்து பேசி ஆலோசனைகளைக் கேட்கவேண்டும் என்று ஈழ நண்பர்கள் பலர் என்னிடம் கூறினார்கள். கூட்டமைப்பின் தலைவராகவும், ஈழத்துக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கே சிறந்த வழிகாட்டியாகவும் மாறுவதற்கான லட்சியங்களை சுமக்கும் ஒருவர் கண்டிப்பாக இதைப் பின்பற்றவேண்டும். அது மட்டுமல்ல, அவரும் எல்லா தரப்பு தமிழ்த் தலைவர்களும், ஈழ சமுதாயத்தின் எதிர்காலம் சிறப்பாக அமைய, ஒரு சிறந்த கூட்டு தலைமையை நோக்கி முயற்சி செய்யவேண்டும் என்று நம்புகிறேன்.



# கலிங்க மாகன் பற்றிய கல்வெட்டு முக்கியத்துவம் பெறுவது ஏன்?

## திருமலையில் அண்மையில் கண்டறியப்பட்ட கல்வெட்டு குறித்த ஒரு வரலாற்று ஆய்வு

**கா. இந்திரபாலா**

திருகோணமலை மாவட்டத்தில் கொமரன் கடவெல/ குமரன் கடவை என்னும் இடத்திலுள்ள காட்டில் அண்மையில் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்) தலைமையில் ஓர் ஆய்வுக் குழுவினர் முக்கிய கல்வெட்டு ஒன்றைக் கண்டு வெளிப்படுத்தியுள்ளனர்.

தொடக்கத்தில் உள்ள சில சம்ஸ்கிருத வரிகளைத் தவிர ஏனைய வரிகள் தமிழில் உள்ளன. பாறையில் எழுதப்பட்டுள்ள இக்கல்வெட்டின் பல சொற்கள் அழிந்துவிட்டன. கோயில் ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட சில தானங்களைப் பதிவு செய்வதே கல்வெட்டின் நோக்கம். இக் கோயிலின் அழிபாடுகள் அங்கு காணப்படுகின்றன.

தானங்களை வழங்கி இக்கல்வெட்டைப் பொறிப்பித்தவன் பெயர் ஸ்ரீகுலோத்துங்க சோழ காலிங்கராயன் என்று கொடுக்கப்பட்டுள்ளது. இவன் 'ஈழ மண்டல மானமும் முடிசோழ மண்டலம் எறிந்து, அதாவது இலங்கையைக் கைப்பற்றி, கங்க ராஜகாலிங்க விஜயவாகு தேவர் என்பவருடைய வீராபிஷேகத்தையும் செய்தான் என்ற செய்தியும் இதில் கொடுக்கப்பட்டுள்ளது.

இச்செய்திதான் இக் கல்வெட்டுக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றது.

### கங்கராஜா

யார் இந்தக் கங்கராஜ காலிங்க விஜயவாகு தேவர்? நீண்ட காலமாக இந்தியாவின் பல பாகங்களில் கங்க வம்சத்தைச் சேர்ந்தோராகத் தம்மைக் கருதிய சிலர் கங்கராஜா என்ற பெயரைப் பெற்றிருந்தனர். வணிகம் வழியாக இந்தியச் செல்வாக்கு வெளியே பரவிய காலத்தில் தென்கிழக்காசியாவிலும் இப் பெயர் பரவியிருந்தது. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சம்பா என்ற வியட்நாமிய அரசில் ஆட்சி செலுத்திய முதலாம் பத்திர வர்மனுடைய மகன் ஒருவன் இப் பெயரைத் தரித்திருந்தான்.

இந்தியாவில் கங்க வம்சத்தினர் ஆட்சி செய்த இடங்களில் பலர் இப்பெயரைத் தாங்கியிருந்தனர். எடுத்துக்காட்டாக, பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒரு ஹொய்சள (போசள) மன்னனுக்கும் பதினாறாம் நூற்றாண்டில் கர்நாடகத்து உம்மத்தூரு என்ற இடத்தின் நாயக்கச் சிற்றரசனுக்கும் இப்பெயர் இருந்தது.

கங்க வம்சத்தைச் சேர்ந்தோராய் கிழக்கு இந்தியாவில் (இன்றைய ஒடிஷா மாநிலத்தில்) ஆட்சி புரிந்தோரைக் கீழைக்கங்கர் என்பர்.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பொலன்னறுவை அரசியலில் முக்கியத்துவம் பெறும் பல இளவரசர்களும் இளவரசியரும் கலிங்கத்திலிருந்து வந்த கங்க வம்சத்தினர். கல்வெட்டுக்களில் சிலருடைய பெயருடன் வம்சம் குறிப்பிடப்பட்டுள்ளது (எடுத்துக்காட்டாக, நிஸ்ஸங்க மல்லனுடைய அரசியருள் ஒருவர் கங்க வம்ஸ கல்யாண மஹாதேவி எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்). ஆகவே கங்க ராஜா என இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுபவர் கங்க வம்சத்தைச் சேர்ந்தவர் என்பது தெளிவு.

### காலிங்கவிஜயவாகு

பொலன்னறுவையில் இருந்து ஆட்சி நடத்திய காலிங்க மன்னர்கள் முன்பு இருந்த சிங்கள மன்னர்களைப் போல் -வாகு என முடியும் பெயர்களையும் பொதுவாகச் சூடியிருந்த்தனர். நிஸ்ஸங்க மல்லன் பராக்கிரமவாகு என்ற பெயரையும், அவனுக்குப் பின் ஆண்ட இருவர் வீரவாகு, விக்கிரமவாகு என்ற பெயர்களையும் பெற்றிருந்தனர்.

நிஸ்ஸங்க மல்லன் சகோதரனாகிய ஸாஹஸமல்லன் எனப்படும் மன்னன் காலிங்க விஜயவாகு எனக் கல்வெட்டு ஒன்றில் குறிபிடப்பட்டுள்ளான்.

கொமரன் கடவெலக் கல்வெட்டில் வரும் விஜயவாகு இவனா? இக்கல்வெட் டின் காலம் என்ன என்று தெரிந்தால் இவ் வினாவுக்கு விடை காண்பது இலகு.

துரதிஷ்ட வசமாக கல்வெட்டின் ஆண்டைக் கூறும் தொடக்கப் பாகம் தெளிவற்றுக் காணப்படுகின்றது. எனினும் ஸாஹஸ மல்லனுடைய கல்வெட்டின் சான்றினை வைத்து இப்பிரச்சினையைத் தீர்க்கலாம். இதன்படி, இங்கு ஆராயப்படும் கல்வெட்டின் விஜயவாகு ஸாஹஸ மல்லன் அல்லன் என்று கூறமுடியும். கல்வெட்டில் ஸாஹஸமல்லன் கூறுவது இதுவாகும்: நிஸ்ஸங்க மல்லனுக்குப் பின் பொலன்னறுவையில் ஆட்சி நடத்துவதற்கு அவனுடைய சகோதரன் (ஒரே தகப்பன், தாய் வேறு) ஸாஹஸமல்லனுக்கு (கலிங்கநாட்டு ஸிங்ஹ புரத்துக்கு) இரு சிங்கள அமைச்சர்கள் தூது அனுப்பினர். அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, அவன் இலங்கைக்குப் புறப்பட்டான், வரும்போது சோழ நாட்டுத் துறை ஒன்றில் சிறிது காலம் தங்கி இலங்கைக்கு வந்து முடிசூட்டப்பெற்றான். தன்னை அழைத்து மன்னனாக்கியதற்காக அமைச்சர் இருவருக்கும் தானங்கள் வழங்கி, ஒருவனுக்கு முதல் அமைச்சர் பதவியையும் ஸாஹஸமல்லன் வழங்கினான். தனக்குச் சோழர் படையுதவி கிடைத்தது பற்றி எதுவுமே அவன் கல்வெட்டில் இல்லை. இதற்கு முற்றிலும் மாறாக, கொமரன் கடவெலக் கல்வெட்டில் வரும் காலிங்க விஜயவாகு முடிசூட்டப்பெற்ற சூழ்நிலை காணப்படுகின்றது.

அப்படியாயின் யார் இந்த விஜயவாகு? இவ்வினாவுக்கு விடைகாணச் சிங்கள இலக்கியச் சான்று உதவுகின்றது. பொலன்னறுவை அரசை 1215 இல் கைப்பற்றிய கலிங்க மாகனுக்குக் காலிங்க விஜயவாகு என்ற பெயரும் இருந்தது என்பது நிகாயஸங்க்ரஹய மற்றும் ஸத்தர்ம-ரத்னாகரய ஆகிய நூல்களில் இருந்து தெரியவந்த விஷயமாகும். அத்துடன், இலக்கிய மூலாதாரங்கள் அனைத்தும் தென்னிந்தியப் படைகளின் உதவியுடன் மாகன் வெற்றி பெற்றான் என்று கூறுகின்றன. இங்கு ஆராயப்படும் கல்வெட்டில், காலிங்க விஜயவாகு குலோத்துங்க சோழ காலிங்கராயன் தலைமையிலான படையின் உதவியுடன் அரசைக் கைப்பற்றி மன்னனாகிய செய்தி கூறப்பட்டுள்ளது. இவற்றைக் கொண்டு, இந்த காலிங்க விஜயவாகு வேறு யாரும் அல்ல, கலிங்கமா கனே என அடையாளம் காணமுடிகின்றது.

காலிங்கராயன் காலிங்க விஜயவாகு ஆகிய கலிங்க மாகனின் படையெடுப்பில் மூன்றாம் குலோத்துங்க சோழன் (1178 - 1218) ஆகிய சமகாலச் சோழ மன்னனுக்கும் பங்கு உண்டு என்று தோன்றுகிறது.

விஜயவாகுவுக்கு உதவிய படைத் தலைவன் ஒரு சோழத் தளபதி என்று கொள்ள இடமுண்டு. இவன் முழுப் பெயர் 'குலோத்துங்க சோழ காலிங்கராயன்'. இப் பெயர், சோழ மன்னர் தங்கள் படைத் தலைவர்கள், குறுநில மன்னர், அதிகாரிகள் ஆகியோருக்கு பொதுவாக வழங்கிய விருதுப் பெயர்களை ஒத்துள்ளது.

எடுத்துக்காட்டாக, குலோத்துங்க சோழ காடவராயன், குலோத்துஙக சோழ கச்சியரராயன், குலோத்துங்க சோழ வாணக் கோவரையன், குலோத்துங்க சோழ சாம்புவராயன், குலோத்துங்க சோழ தகடாதிராயன் போன்ற பெயர்களை ஒத்திருப்பது கவனிக்கத்தக்கது.

முதலாம் குலோத்துங்க சோழனுடைய தளபதிகளுள் மிகவும் வெற்றி ஈட்டிய ஒருவனாகிய நரலோகவீரனுக்கு காலிங்கராயன் என்ற விருது வழங்கப்பட்டிருந்ததையும் கவனிக்கலாம். அத்துடன், மூன்றாம் குலோத்துங்க சோழன் இலங்கையைக் கைப்பற்றப் பல தடவை முயன்றிருந்தான் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். பொலன்னறுவை அரசு பொதுவாகச் சோழ அரசை எதிர்த்துப் பாண்டிய அரசுக்கு உதவி புரிந்தது. இக்குலோத்துங்க சோழன் காலத்திலும் இந்த நிலைமை தொடர்ந்தது.

ஈழத்துப் படைகளை வெற்றி கொண்டதாகக் குலோத்துங்கன் தன் கல்வெட்டுக்களில் பல தடவை கூறுகின்றான். சோழருக்கு எதிராகப் பாண்டியருக்கு உதவிசெய்ய இலங்கை மன்னன் தென்னிந்தியாவுக்கு அனுப்பிய படையை 1187இல் வெற்றி கொண்டதாகக் கூறும் குலோத்துங்கன், அதன் பின்னர் இலங்கைக்குத் தன் படையை அனுப்பி வெற்றி கொண்டதாகக் கல்வெட்டுக்கள் வாயிலாகத் தெரிவிக்கின்றான்.

"ஈழத்தாந் முடி வாழ வாழத்தாளிணை சூட்டி...மதிரையும்ஈழமுங் கொண்டு" (திருமாணிக்குழிக் கல்வெட்டு) என்றெல்லாம் சோழமன்னன் தன் வெற்றி யைப் புகழ்ந்து கூறுகின் றான்.

இலங்கையைத் தாக்குமாறு 1194இல் குலோத்துங்கன் தன் படை களுக்கு ஆணை இட்டான் என்றும், பின்னர் 1199இல் மீண்டும் இலங்கைக்குப் படை அனுப்பப்பட்டது என்றும் அறிகின்றோம். இக் காலகட்டத்தில் இப் படிப் படையெடுப்புகள் நடந்தன என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அக் காலத் தில் எழுதப்பட்ட ஸஸதாவத என்ற சிங் கள நூல் சோழ நாட்டில் இருந்து மூன்று படையெடுப்புகள் நடந்தன என்று கூறு கின்றது.

மினிபே மற்றும் போபிட்டிய ஆகிய இடங்களில் கிடைத்த சிங்களக் கல்வெட்டுக்களிலும் சூளவம்ஸத்திலும் இப்படையெடுப்புகள் பற்றிய சான்று வெளிப்படுகின்றது. குலோத்துங்கன் இறுதியாக இலங்கைக்குப் படையனுப்பியது பற்றி 1212இல் பொறித்த கல்வெட்டால் அறிகின்றோம். கலிங்கமாகனின் தாக்குதல் இதற்கு மூன்று ஆண்டுகளின் பின் நடைபெற்றது.

இவற்றை எல்லாம் நோக்குமிடத்து காலிங்கராயன் என்பவன் சோழ மன்னனின் தளபதியாகப் படையுடன் வந்தவன் என்ற முடிவுக்கு வருவது தவிர்க்க முடியாதது. மேலும் ஒரு முக்கிய விஷயத்தை இம்முடிவுக்குச் சார்பாகக் கூற வேண்டும்.

இலங்கையைக் கைப்பற்றியது தன்னுடைய சாதனையாகக் காலிங்கராயன் கூறுகின்றான். அதுமட்டுமல்லாது, விஜயவாகுவுக்கு முடிசூட்டியதும் தன்னுடைய சாதனையாகக் கூறுகின்றான். இதைச் செய்வதற்கு அவனுக்கு எப்படி அதிகாரம் கிடைத்தது? பொதுவாக நம்பப்படுவது போல், விஜயவாகு தென்னிந்தியாவுக்குச் சென்று படை திரட்டி வந்து பொலன்னறுவையைக் கைப்பற்றியிருந்தால், அவன் திரட்டிய படையின் தளபதிக்கு முடிசூட்டும் அதிகாரம் இருந்திருக்காது. காலிங்கராயன் என்ற தளபதி சோழமன்னன் ஆணைப்படி இலங்கையைக் கைப்பற்றி விஜயவாகுவுக்கு உதவிசெய்ய வந்த காரணத்தினாலேதான், வெற்றிக்குப் பின் விஜயவாகுவுக்கு முடிசூட்டும் அதிகாரத்தைப் பெற்றிருந்தான் என்று வாதிக்க முடியும்.

### யாழ்ப்பாண இராச்சியத்தின் தொடக்கம்

பொலனறுவையில் ஆண்ட கலிங்க இளவரசர்களும் இளவரசியரும் காலிங்கச் சக்கரவர்த்தி பரம்பரையைச் சேர்ந்தோர் என அவர்களுடைய கல்வெட்டுக்கள் தகவல் தருகின்றன. எடுத்துக்காட்டாக, நிஸ்ஸங்கமல்லன் தன் பெயரைக்கல் வெட்டுக்களில் நிஸ்ஸங்க மல்ல காலிங்கச் சக்கரவர்த்தி என்று கொடுத்துள்ளான். பொலன்னறுவையில் ஆண்ட பிற கலிங்கர்களைப் போலவே கலிங்க மாகனாகிய விஜயவாகுவும் இதே பரம்பரையைச் சேர்ந்தவன் என்று கொள்ளலாம். இதனால், இவன் பெயர் விஜயவாகு காலிங்கச் சக்கரவர்த்தி என்றும் வழங்கியிருக்கும்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# ஈழத்தமிழ் அரசியல் தலைமைகளின் ஒருமைப்பாடற்ற வெளிநாடுகளுடனான உறவு!

பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்

ஈழத்தமிழருடைய அரசியலில் அதிக நெருக்கடியும் தீர்வுக்கான வாய்ப்புக்களும் கொண்ட காலப் பகுதியாக சமகாலம் அமைந்துள்ளது. இலங்கை பரப்புடன் புலம்பெயர்ந்த தளத்திலும் மாறி வருகின்ற அல்லது குழப்பமடைந்த உலக ஒழுங்கில் ஈழத்தமிழருக்கான அதிக வாய்ப்புகளுக்கான சூழல் உருவாகியுள்ளது.

சீன - இலங்கை உறவு இந்தியாவுக்கு மட்டுமன்றி குவாட் நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் அதிக நெருக்கடிமிக்க விடயமாக விளங்குகின்றது. எனவே, இச்சூழல் ஈழத்தமிழர்களின் அரசியல் பக்கத்தை நோக்கிய அசைவுகளை பிராந்திய சர்வதேச அரசுகள் நகர்த்தத் தொடங்கியுள்ளன.

இதனை சரியாக பயன்படுத்த வேண்டிய களத்தில் ஈழத் தமிழர்களின் அரசியல் தலைமைகள் காணப்படுகின்றனர். ஆனால், அத்தகைய தரப்புக்கள் மீளவும் தனித்து இயங்குவதும் மேலாதிக்கத்தை பேண முயல்வதும் தமக்கு இடையிலான போட்டியை முன்னிறுத்துவதும் என்ற கோணத்தில் இயங்குகின்ற சூழலையும் அவதானிக்க முடிகிறது. இக்கட்டுரையும், தமிழரசியல் தலைமைகளின் திரட்சியற்ற, ஒருமைப்பாடில்லாத தனித்து இயங்குகின்ற போக்கினையும் அதன் விளைவுகளையும் தேடுவதாக உள்ளது.

மிக அண்மையில், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழுவின் அமெரிக்க விஜயம் முக்கியமான அரசியல் உரையாடலாக விளங்கியது. ஆனால், அத்தகைய குழுவின் தெரிவுக்கான பக்கங்கள் அதிக விமர்சனத்தை பொதுவெளியில் ஏற்படுத்தியுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பெயரில் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் அதன் தெரிவுக்குட்பட்ட இரு சட்ட நிபுணர்களும் உள்ளடக்கியிருந்தமை அதன் விமர்சனத்தை எட்டிப்பார்த்திருந்தது. இத்தகைய உரையாடலுக்கான தெரிவு ஒரு தேசிய இனத்தின் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வை நோக்கிய உரையாடலுக்கான நகர்வாகவே அது அவதானிக்கப்பட்டது. இத்தகைய உரையாடல் ஆரம்பப் புள்ளியாக அமைந்தாலும், அதனுடைய அணுகுமுறைகள் அதிக விரிசலை குறித்த கட்சிக்குள்ளேயே ஏற்படுத்தியிருந்தது.

இதேபோன்று, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பெயரில் தமிழீழ விடுதலை இயக்கமும் இலங்கையில் உள்ள இந்தியா, ஜேர்மனி மற்றும் பிரித்தானியா தூதரகங்களின் தூதுவர்களை சந்தித்து உரையாடி வருகின்றது. அத்தகைய உரையாடல்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழுவின் உரையாடல் போன்று தனி அணியாக அடையாளப்படுத்தப்படுகிறது. ஏறக்குறைய ஒரு தேசிய இனப்பிரச்னையின் தீர்வு பற்றிய உரையாடல் கூட்டுத்தன்மையையும் கூட்டு வலுவையும் உள்ளடக்கியதாக அமைவது மட்டுமன்றி அத்தகைய திரட்சியே ஆரோக்கியமான இருப்பை நோக்கியதாக அமைய வாய்ப்புள்ளது.

இந்த வகையான தனித்த கட்சிகள் சார்ந்த தனிநபர்கள் சார்ந்த இயங்கியல் போக்கே கடந்த காலங்களில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைக்கான தீர்வை நீட்சி பெற்றதொன்றாக மாற்றியுள்ளது. இவ்வாறான தனித்த உரையாடல் களம் ஏற்படக்கூடிய விளைவுகளை தேடுதல் அவசியமாகும்.

ஒன்று, ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனமாகவும் சுயநிர்ணய உரிமையை கோரும் வலுவுடைய தேசிய இனமாக பல தசாப்தங்களுக்கு முன்னரே அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்கள். அத்தகைய நீண்ட நிலையான இருப்புக்குரிய வாழ்விடத்தையும், பொருளாதார பலத்தையும் மொழியின் தொடர்ச்சியையும், பண்பாட்டு திரட்சியையும் பல நூற்றாண்டுகளாக பேணி பாதுகாத்து வருகின்றனர். அதுவே, அவர்களது அரசியல் கோரிக்கையாகவும் சுயநிர்ணயத்தின் கீழான பிரகடனமாகவும் அதனை பாதுகாக்கும் பொறிமுறையை கொண்டவர்களாகவும் விளங்குகின்றனர். அத்தகைய வலுவை தொடரவும், அதனை பேணவும் உரித்துடைய பிரிவினராக அரசியல் கட்சிகள் காணப்படுகின்றது.

இரண்டு, ஒரு தேசிய இனத்தின் இருப்பு என்பது அதன் திரட்சியிலும் அதனை வழிநடத்துகின்ற அரசியல் சித்தாந்தத்திலும் கருத்தியலிலும் தங்கியிருக்கின்றது. இதன் தளத்துக்குள் இயங்கும் கட்சிகள் எடுக்கின்ற தீர்மானங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுசேர்ந்த விதத்தில் அமையும்போது மாத்திரமே ஆரோக்கியமான அரசியல் போக்கு ஈழத்தமிழரின் அரசியல் இருப்பில் சாத்தியமாகும். இத்தகைய தனித்த அடையாளப்படுத்தல் என்பது கட்சிகளின் நலன்களையும் தனிமனிதர்களின் நலன்களையும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்களை சாத்தியப்படுத்துமேயன்றி ஒரு தேசிய இனத்தின் முழுமையான வாய்ப்புக்களை உருவாக்காது.

மூன்று, ஈழத்தமிழர்கள் அரசற்ற சமூகமாக நிலைத்திருப்பதென்பது அரசியல் கட்சிகளிலும் அவற்றின் அணுகுமுறைகளிலும் தங்கியுள்ளது. ஆரோக்கியமான அரசியல், சமூகத்தின் இருப்பு ஆரோக்கியமான அரசியல் சிந்தனையிலும் கருத்தியலிலும் தங்கியுள்ளது. அத்தகைய தத்துவார்த்த கட்டமைப்பை உருவாக்கி அரசியல் தலைமைகள் எழுச்சி பெறுகின்ற போது மொழி, மதம், பிரதேசம், சாதியம் என்பனவற்றை கடந்து திரட்சியும், திரட்சிக்குரிய தலைமையும், அந்தத் திரட்சியை வழிநடத்துபவராக அந்தத் தலைமையும் செயல்படுவதை அவதானிக்க முடியும்.

ஈழத்தமிழர் மத்தியில் அத்தகைய தலைமையை முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது இங்குள்ள வாதமாகும். அமெரிக்காவுடனான உரை யாடல் ஆரம்ப முயற்சியாக இருந்தாலும் அத்தகைய முயற்சியினுடைய தொடக்க புள்ளியை பிராந்திய அரச மட்டத்திலிருந்து தொடக்கியிருக்க வேண்டிய அவசியப்பாடும் காணப்படுகிறது. இந்தியா புவிசார் அரசியலிலும் பூகோள அரசியலையும் கையாளும் நாடென்ற அடிப்படையில் அதற்கான ஆரம்ப புள்ளியை இந்தியாவிலிருந்து ஆரம்பித்து நகர்த்தியிருந்தால் ஆரோக்கியமான மாற்றங்களை இலங்கை தமிழர்கள் எதிர்கொள்ள வாய்ப்பு கிடைத்திருக்கும். சர்வலதேச நாடுகளின் அனுசரணையுடன் நிகழ்ந்த அனைத்து பேச்சுக்களிலும் இந்தியா பங்குபற்றாத போதும் இந்தியாவிற்கூடாகவே நகர்த்தப்பட்டது என்பது நோர்வேயின் விசேட தூதுவரின் நகர்வுகளிலிருந்து கண்டு கொள்ள முடியும்.

ஐந்து, ஈழத்தமிழர்களின் அரசியல் தலைமைகளின் ஐக்கியமானதொரு முடிவுக்குள் செயற்படுவதையே பிராந்திய அரசும், சர்வதேச அரசும் விரும்புகின்றது என்பதை அண்மைய நகர்வுகளில் அடையாளம் காண முடிகிறது. அத்தகைய நகர்வுகளுக்கான வலியுறுத்தல்களையே இந்திய தூதுவர் மற்றும் இந்தியாவின் வெளிவிவகார செயலாளர் முதன்மைப்படுத்தியதோடு அமெரிக்க பேச்சுவார்த்தைக்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பையும் புலம்பெயர் ஈழத்தமிழர் அமைப்புக்களையும் அமெரிக்க இராஜாங்க செயலகம் அழைத்திருந்தமையும் வெளிப்படுத்துகிறது. அத்தகைய திரட்சியே ஆரோக்கியமான இருப்புக்கும், சரியான முடிவுகளுக்கும்




அடையாளம் காண்பது சமகாலத்தில் கட்சி நலனாகவும், கட்சிக்குள் எழும் தனிப்பட்ட இலாபங்களாலும் இல்லாமல் போகிறது. ஆயுதப்போராட்ட காலத்திலும் மிதவாத அரசியலின் ஆரம்ப காலப்பகுதியிலும் வலுமிக்க ஆளுமைகள் ஈழத்தமிழரின் அரசியல் சமூக தொகுதியிலிருந்தே அடையாளப்படுத்தப்பட்டனர் என்பதை மறுக்க முடியாது. அத்தகைய ஆளுமைகளை கட்சி நலனுக்கும், சுயநலனுக்கும் தேர்தல் நலனுக்கும் உட்படுத்தாது ஈழத்தமிழரின் அரசியல் நலனுக்கானதாக அடையாளப்படுத்தும் போக்கு உருவாக்கப்படுதல் அவசியமாகும்.

நான்கு, ஈழத்தமிழர்களின் அரசியல் இருப்பில் தெளிவான வெளியுலகத்துடனான தொடர்பு அவசியமானது என்ற வாதம் மேலோங்கி வருகின்றது. அதுபற்றிய உரையாடல் மிக நீண்டகாலமாக அரசியல் கட்சிகளுக்கு புலம்பெயர்ந்த தளத்திலும், புலத்தின் தளத்திலும் முன்வைக்கப்பட்டு வந்தது. ஆனால், அதற்குரிய ஆரம்ப பொறியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழு தொடக்கி வைத்துள்ளது. அதன் இரண்டாவது கட்டத்தை தமிழ் ஈழ விடுதலை இயக்கம் செயற்படுத்தி வருகிறது.

இத்தகைய முன்முயற்சிகள் ஆரோக்கிய மானவை. ஆனால் அவ்வகை முன்முயற்சிகள் ஒன்றிணைக்கப்பட்டு தெளிவான திட்டமிடல்களுடன் தந்தி ரோபாய ரீதியில் வாய்ப்பளிக்கும். உரையாடல் என்பதே சிறந்த தந்திரோபாயத்தின் ஒரு கட்டமைப்பான விடயமாகும். அதனை தனித்து முதன்மைப்படுத்தாது கூட்டாகவும் சரியான திட்டமிடலோடும் நகர்த்தப்படுவதென்பதுவும் அவசியமானதாகும். தனிப்பட்ட விருப்புக்களின் பாற்பட்டு ஒரு தேசிய இனத்தின் தீர்வு அமைவதில்லை.

எனவே, ஈழத்தமிழருக்கான வாய்ப்புக்கள் இலங்கையின் அமைவிடம் பொறுத்து தொடர்ச்சியாக கிடைப்பதற்கான சூழலை தந்துள்ளது. இதனை ஒரு வறட்டுத்தனமான சிந்தனைக்குள் அணுகுவதை விடுத்து ஓர் ஆரோக்கியமான புரிதலை ஏற்படுத்தவதன் மூலம் அனைத்து தரப்பின் ஆலோசனைகளையும் பெற்று தீர்க்கமான முடிவுகளோடு சரியான அணுகுமுறைக்கூடாக நகர்த்துதல் என்பதே தற்போதைய அவசியமான செயற்பாடு. குவாட் நாடுகளின் அங்கத்துவத்தின் பிரதிபலிப்புக்களை கருத்தில் கொண்டு இதன் தொடக்கத்தையும் முடிவையும் நிர்ணயிக்க வேண்டும். தென்னிலங்கை ஆட்சியாளர்கள் ஈழத்தமிழர்களின் அணுகுமுறையைவிட மிகத்தீவிரமாகவும், நிதானமாகவும் செயல்படுகின்ற இராஜதந்திர பொறிமுறையை கொண்டுள்ளனர். நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இந்திய விஜயம் அத்தகைய பொறிமுறையின் ஒரு கட்டமாகவே தெரிகிறது. ■

- நன்றி - அருவி

# ‘ஆடாது அசங்காது வா…’

**- மாலி**

லண்டன் பாரதிய வித்திய பவனிலிருந்து மகிழ்ச்சியோடு வெளியேவந்த அவர்கள் இருவரும் வீதியில் மர நிழலில் நிறுத்தப்பட்டிருந்த காரை நோக்கிவந்தபோது, எதிர்பாராத அந்த சந்திப் பின் வியப்பும் சேர்ந்துகொண்டது.

பவனில் வேலை கிடைத்திருக்கிறது என்று மகிழ்ச்சியோடு சொன்னார் சிவசக்தி. கணவர் சிவ நேசனை அறிமுகப்படுத்தினார். லண்டனில் அப்போதுதான் முதலில் பார்த்தது.

இந்திய சாஸ்திரீய கலை, கலாசார மேம்பாட்டு அமைப்பான பாரதிய வித்திய பவனின் சர்வதேச நிலையங்களில் லண்டன் நிலையம் சிறப்பானது - பிரசித்தமானது. மத்தூர் கிருஷ்ணமூர்த்தி என்ற ‘பெரும் மனிதர்’ அதன் இந்த பெருமைக்கு காரண மானவர். அவரைத்தான் சிவசக்தி அப்போது சந்தித்து, அந்த ஆனந்தத்துடன் திரும்பினார். சென்னையில் வயலின் மேதை லால்குடி ஜெயராமனின் ஆலோச

அரங்கேற்றத்தில் பாடிய நாகேஸ்வரி பிரம்மானந் தாவுக்கு அன்று பாலசந்தர் சூட்டிய பெருமை, யாழ்ப்பாணத்துக்கு - இலங்கைக்கு சூட்டிய பெருமை. சிவசக்தி, நாகேஸ்வரி பிரம்மானந் தாவிடமும் இசை கற்றவர். கல்யாண கிருஷ்ண பாகவ தரிடம் வீணை கற்றவர்.

இராமநாதன் அக்கடமியின் ‘சங்கீத இரத்தினம்’ பட்டத்துடன் சென்னை சென்று, சென்னை மத் திய கர்நாடக இசைக் கல்லூரி ‘சங்கீத வித்வான்’ பட்டத்து டன் மீள வந்து இராமநாதன் அக்கடமி யில் ஆசிரியை யாக பணியாற்றிய சிவசக்தியை கடைசியாக யாழ்ப் பாணத்தில் கலைஞர் வேல். ஆனந்தனின் நடன நிகழ்ச்சி யொன்றுக்கு வீரங்சிங் கம் மண்டபத்தில் பாடுகையில் பார்த்திருந்தேன்.

கர்நாடக இசைக் கல்லூரியில் டி. கே. ஜெயராமன், எஸ். இராமநாதன், கே. வி. நாராய ணசாமி, டி. எம். தியாகராஜன், ஆர். வேதவல்லி போன்ற இசை மேதைகளிட மெல்லாம் சிவசக்திக்கு சிட்சை

டாக்டர் ஜோன் மார் கர்நாடக இசையின் கொள்கை களை அங்கு கற்பித்தார். இந்திய அரசின் ‘பத்ம பூஷண்’ விருதுபெற்ற இசை அறிஞரான ஜோன் மார், லண்டன் பல்கலைக்கழக கீழைத் தேய ஆபி ரிக்க கற்கைகள் கல்லூரியில் இந்திய இசைத்துறைத் தலை வராகவிருந்த ஸ்கொட்டிஷ்காரர்; அண்ணா மலைப் பல்கலைக்கழக இசைப் பட்டதாரி.

ஏராளமான மாணவ, மாணவிகள் சிவசக்தியி டம் வாய்ப்பாட்டு, வீணை கற்றனர். பலர் அரங் கேறினர். கற்பித்தலில் கண்டிப்போடு கனிவும் இருந்ததில், குடும்ப அளவில் பலரின் அன்பை வெகுவாக வென்றார். பாரதிய வித்ய பவனின் பரதநாட் டிய அரங்கேற்றங்கள், பரதநாட்டிய நிகழ்ச்சிகளுக்கும் பாடினார். ‘சிவசக்தியின் குரு பீடம்’ என்று, அவ ரது மாணவி ஒருவரின் அரங்கேற்ற விமர்சனத்தில் பத்திரிகை, விமர்சன துறைகளின் பிதாமகரான சோ. சிவபாதசுந்தரம்



னையிலும் சிபாரிசி லும் இது நிகழ்ந்தது.

சிவசக்தி அதிருஷ்டக்காரி. அதே வேளை, பவனுக்கும் அது ஒருவித அதிருஷ்டம்தான். இதைக் கணக்கிட முடியாதவரல்லர் மத்தூர் கிருஷ்ண மூர்த்தி.

பாரதிய வித்திய பவனில் சிவசக்தி கர் நாடக சங்கீதத்தில் வாய்ப்பாட்டும் வீணையும் கற்பிக்க தொடங்கியபோது, அது அடைக்கலம் தேடிவந்த இடத்தில் தம் அடையாளத்தை தேடிய இலங்கைத் தமிழர்களை வெகுவாக ஈர்த்தது. சங்கீதத் தில் மாத்திரமன்றி, பரதநாட்டியத்துக் கும் இலங்கை மாணவர்கள் பெருகி னார்கள்.

சிவசக்தி அதிருஷ்டக்காரி மாத்திர மல்ல, கெட்டிக்காரியும்கூட. இந்திய கலை கலாசார தூதரகம்போன்ற இங்கு இந்திய கலை வடிவங்கள் அனைத்தின தும் உன்னத கலைஞர்கள் அனைவருமே வந்து, தங்கி, நிகழ்ச்சியளித்து, கலந்துரை யாடி, கற்பித்து சென்றார்கள். இந்திய சாஸ்திரீய இசை - நட னங்கள் அனைத்தி னதும் உன்னத கலைஞர்கள் பலரையும் முதன்முதலாகவும் பல தடவைகளிலும் இங்கு பார்த்தேன். சென்னைக்கு அடுத் ததாக இந்த வாய்ப்பு லண்டன் பாரதிய வித்திய பவனில் கிட்டுகிறது.

வீதியின் எதிர்ப்புறத்திலேயே தனக் கோர் இல்லத் தையும் வாங்கிவிட்ட சிவசக்திக்கு இதுவே அவரின் வாழ்வுச் சூழலானது. ‘கலை மலரும் பூங்காவில் ஒரு ரீங்காரம்’ என்று தலைப்பிட்டு, 1994இல் ‘நாழிகை’ சஞ்சிகையில் எழுதியிருந்தேன்.

இந்த சூழலில், தன்னுடைய வித்துவத்தை செழுமைப்படுத்திக் கொள்வதிலும் சிவசக்தி நாட்டமுடன் ஈடுபட்டார். இசை மேதைகள் பலருக்கு, பவனுடன் பக்கத்தில் சிவசக்தியின் இல்லமும் அதனுடன் இணைந்த தொன் றாகியது. ரி. வி. கோபால கிருஷ்ணனை மற்றொரு குருவாகவும் கொண்டார்.

வீரமணி ஐயரிடம் சங்கீதத்துடன் நடனமும் கற்றவர் சிவசக்தி. அவரின் பிள்ளைபோலவும் வளர்ந்தவர். வீரமணி ஐயர் நடனத்தில் அரங்கேற்றிய ஒரே மாணவியும் சிவசக்திதான். யாழ்ப்பாணம் வீர சிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இவ் வரங்கேற்றத் துக்கு வீணை மேதை எஸ். பாலசந்தர் பிரதம விருந்தினராக வந்திருந்தார்.

கிட்டியிருக்கிறது.

பவனில் சிவசக்தி வாய்ப்பாட்டும் வீணையும் கற்பித்த வேளையில் இம் மாணவர்களுக்கு

குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடற்பாலது.

தன் இசைப் பணியில் சிவசக்தி துணைநின்ற சமூகப்பணிகள், அந்த விதத்திலான கலைஞர்களுடன் அவரையும் வரிசைப்படுத்தும். வீர மணி ஐயரின் ஆக்கங்கள் அனைத் தையும் நூலுருவாக்கி வெளியிட்டார்.

‘வாணி பைன் ஆட்ஸ்’ என்று, தனது சொந்த அமைப்பொன்றை யும் லண்டனின் தென்கீழ்ப் பகுதியில் இயக்கிவந்த சிவசக்தி, பாரதிய வித்ய பவனில் தனக்கென்று ஒரு மதிப்பார்ந்த ஸ்தானத்தை நிலைநிறுத்தியிருந்தார். இது, அவ ரது கலை வாழ்வின் மதிப் பீடாக பெரிதும் நோக்கவல்லது. பொதுவாகவே, அதுவும் கலைசார் நிறுவனங்களின் ‘அரசியல் பொல்லாத தாகின்ற போது’, இந்த இந்திய நிறுவ னத்தில் ஓர் இலங்கையரான சிவசக் திக்கு, இவ்வரசியலை விஞ்சிய கலா பூர்வ அங்கீகாரமும் மதிப்பும் இருந் தது. மத்தூர் கிருஷ்ணமூர்த்திக்கு பின் னர் அவரின் மருகரான டாக்டர் நந்த குமார பாரதிய வித்ய பவனின் இயக்கு நராகவிருக்கிறார். கலாரசனை மேலிட்ட, சமஸ்கிருத மொழிவித்தகர்.

டாக்டர் நந்தாவும் பாரதிய வித்திய பவனின் ஏனைய கலைஞர்களும் சிவசக்தியின் பூதவுடலை தாங்கிவந்த னர். இரண்டு ஆண்டுகளுக்கு முன்ன தாக, சுகவீனம் காரணமாக பாரதிய வித்திய பவன் பணியிலிருந்து 35 ஆண் டுகளின் பின்னர் சிவசக்தி ஓய்வுபெற் றாலும், பவனிலிருந்து அவர் விலக வில்லை.


லண்டனில் வீடுகளின் முன்புற கதவு, பொதுவா கவே ஒற்றைக் கத வாகத்தானிருக்கும். “வித்தியாசமான தாக இரட்டைக் கதவுடனான வீடு. ஆட்டாமல் கொள்ளாமல் என்னை எடுத்துச் செல்லலாம்” என்று, பவ னுக்கு அருகிலேயே வேறொரு வீட்டை புதிதாக வாங்கியவேளையில் சிவசக்தி சொன்னபோது கடிந்துகொண்டதை, அவருடன் உற்ற நெருக்கமான ஒரு தாய் சொன்னார். கணவர் சிவநேசன், ‘ஆடாது அசங்காது வா’ என்றுதான் அவரை இக் கலைவாழ்வில் பக்குவமாக அழைத்து வந்தார்.

உடல் தீயில் சங்கமித்தவேளை, மன்டலின் சிறிநிவாஸின் மண்டலின் இசை ஏகாந்தமாய் ஒலித்தது. அது சிவசக்தியின் விருப்பம். ‘யூரியூபில்’ ஒவ்வொருவாரமும் சிவ சக்தியின் பாடல் ஒன்று கேட்கிறது.

ஈழநாடு



# சமூக ஊடகங்கள் எமக்கு இலவச சேவையினை வழங்குகின்றனவா?




## இதனைக் கூறும் The Social Dilemma

ரமணன்

ஒரு வெறுமையான அறைக்குள் ஒவ்வொருவராக தம்மை சிரித்துக் கொண்டே அறிமுகப் படுத்தும் அவர்கள் அனைவரும் கலிபோர்னியாவில் சிலிக்கன் பள்ளத்தாக்கில் உள்ள புகழ்பெற்ற தொழில் நுட்ப நிறுவனங்களான பேஸ்புக், கூகிள், இன்ஸ்ட கிராம், பிண்டரெஸ்ட், ட்விட்டர் போன்ற நிறுவனங் களில் பணி புரிந்தவர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் தாம் வகித்த பதவிகளை கூறி-தற்போது பதவி விலகி உள்ளதாக குறிப்பிடுகின்றனர். இவர்கள் ஏன் தமது உயர் பதவிகளை துறந்தனர் என்பதை கூறும் Netflix விவரணப் படமே The Social Dilemma.

அன்றாடம் இணையத்தில் பாவிக்கும் சேவைகளான தேடல், மின்னஞ்சல், சமூக ஊடகங்கள், யூட்யூப் போன்ற பொழுது போக்கு தளங்கள், எமக்கு வழி காட்டும் வரைபடங்கள் போன்ற திசை காட்டிகள் எல்லாம் ஏன் இலவசமாக உள்ளது? இணையத்தில் எதாவது ஒரு பொருளையோ சேவையையோ தேடினால், அது தொடர்பான விளம்பரங்கள் பின் தொடர்ந்து செயலியில் ஏன் அடிக்கடி வருகின்றன? இந்த விந்தையான வினாக்களுக்கு மட்டும் பதில் கூறாமல், இன்னும் பல விடயங்களை ஆராய்கின்றது இந்த விவரணம்.

“ஒரு தொழில்நுட்ப நிறுவனம் உங்களுக்கு சேவைகளை இலவசமாக வழங்கினால், அந்த நிறுவனம் விற்கும் சேவை நீங்களாகவே இருப்பீர்கள்”, “போதைப்பொருள் தயாரிப்பாளர்களும், தொழில்நுட்ப நிறுவனங்களும் மட்டுமே தங்கள் வாடிக்கையாளர்களை “பயனர்”(User) என்று விழிக்கின்றனர்” என்ற விவரணத்தில் வரும் வாசகங்கள் கண்டிப்பாக சிந்திக்க வைக்கும். இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் தரவுகள் (data) என்பதே புதிய எண்ணெய் வளம் என்ற கருத்து நிலவி வருகின்றது. அந்த வகையில் பயனர்களை கண்காணித்து அதன் மூலம் வருவாயை தேடும் கண்காணிப்பு முதலாளித்துவ (Survival Capitalism) முக்கியத்துவம் கொடுக்கும் நிலைக்கு உலகம் தள்ளப்பட்டுள்ளது என்ற கருத்தையும் வைக்கின்றது.

விளம்பரங்கள் மூலம் பணம் ஈட்டும் தொழில்நுட்ப நிறுவனங்கள் பயனர்களை தங்கள் கைவசம் வைத்திருக்க பல்வேறு உத்திகளை பயன்படுத்துகின்றனர். பார்வை நேரத்தை வலைத்தளத்தில் அதிகரிக்க கணனி அல்லது தொலைபேசித் திரையை பார்க்கத் தூண்டும் வடிவமைப்பை செய்கின்ற னர். செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மூலம் ஆர்வத்தை தூண்டக்கூடிய விதத்தில் தகவல்களை அடுத்தடுத்து பயனர்களை பார்வையிட தூண்டுகின்றனர். பின்னர் Like, Share போன்ற அம்சங்கள் மூலம் அந்த தகவல்களை கோடிக்கணக்கான மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பிக்கின்றனர்.

விளையாட்டு வினையாகியது என்பது போல இந்த யுத்திகள் எல்லாம் உலகளாவிய ரீதியிலும் தனிப்பட்ட ரீதி யிலும் பெரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அந்த வகையில் அமெரிக்க தேர்தல், பிரெக்ஸிட் முதல் கொண்டு வளர்ந்து வரும் தேசியவாத அரசியல், இந்தியாவில் பொய்த் தகவல்கள் பரப் பப்பட்டதால் கும்பல்கள் அநியாயமாக கொலை செய்யப்பட்ட அப்பாவிகள், கும்பல் மனப்பான்மையால் பாதிக்கப்பட்டும் பெரும் உளவியல் தாக்கங்களுக்கு உள்ளாகும் இளைய வயதினர், அதிகரிக்கும் தற் கொலைகள், கணனித் திரை களுக்கான போதை போன்ற அடிமைத் தனம் என்பவனவற்றை விலாவாரியாக அலசுகின்றது.


தொழில்நுட்ப வல்லுனர்கள் கூறும் கருத்தை புரிய வைக்க சாதாரண அமெரிக்க குடும்பம் ஒன்றை மையப்படுத்திய கதை ஒன்றும் நடு நடுவே வந்து போகும். அந்தக் கதையை பார்க்கும் போது சமூக வலைத்தளங்களின் தாக்கம் எப்படி குடும்ப வாழ்க்கையை பாதிக்கின்றது என்பது புரியும். அண்மையில் Amazon Prime இல் வெளியான மலையாளப் படமான #Home, இதனை மேலும் அழகாக கூறுகின்றது.

சமூக வலைத் தளங்களின் பின்னால் இருக்கும் செயற்கை நுண்ணறிவுத் திறன், பாவனையாளரின் கவனத்தை முழு நேரமும் வலைத்தளத்தில் மீது வைத்திருக்க செய்யும் திருகுதாளங்களை, கதாப்பாத்திரங்கள் வடிவமைத்தும் வரைகலை (Graphic) மூலமும் பார்வையாளர்களுக்கு எளிய முறையில் புரியக் கூடியதாக கூறி இருப்பது பாராட்டத் தக்கது. இந்தக் காட்சிகளை பார்க்கும் போது அனைவருக்கும் ஒரு கணம் திகைப்பை கொடுக்கும்.

இந்த விவரணப் படத்தில் வரும் தொழில்சார் வல்லுனர்களில் இருவர் இலங்கையை பின்னணியாக கொண்ட வர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முதலாமவர் சமாத் பலிஹாபிடியா பேஸ்புக்கின் குறுகிய காலத்திலான அசுர காரணகர்த்தா. இரண்டாமவர் ரந்திம பெர்ணாண்டோ நிவிடா நிறுவனத்தில் இருந்து வேலையை துறந்து தற்போது அன்றாட பயன்பாட்டு தொழில்நுட்ப நிறுவனங்களின் செயற்பாட்டை கேள்வி கேட்கும் செயற்பாட்டாளராக உள்ளார்.

இந்தத் தொடரினை பார்வையிட அமெரிக்க செய்திகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சார் வார்த்தைப் பிரயோகங்கள் தொடர்பான அறிமுகம் தேவை என்பது குறிப்பிட்டேயாக வேண்டும்.

உங்களுக்கும், கணனி திரைக்கும் இடையில் உள்ள தொடர்பை மீளாய்வு செய்ய தூண்டும் இந்த விவரணத்தை கட்டாயம் பார்க்கலாம். ■





# அதிர்ச்சி அளித்த அனு

தமிழில் “துப்பறிவாளன், நம்ம வீட்டுப் பிள்ளை“ படங்களில் கதாநாயகியாக நடித்தவர் அனு இமானுவேல். அவர் கதாநாயகியாக நடித்து கடந்த மாதம் வெளிவந்த “மகா சமுத்திரம்“ தெலுங்கில் படுதோல்வி அடைந்தது. தமிழில் நேரடியாக ஓடிடி தளத்தில் வெளியிட்டுவிட்டார்கள்.

அடுத்ததாக அவர் எந்த புதுப் படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகவில்லை. இந்நிலையில் சில கவர்சி ஒளிப்படங்களை வெளியிட்டு ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்துள்ளார். அவ்வப்போது இப்படியான படங்களை வெளியிடுபவர்தான் அனு, என்றாலும் நேற்று அவர் வெளியிட்டுள்ள புதிய ஒளிப்படங்கள் வேற லெவல் என்கிறார்கள் ரசிகர்கள்.

அவர் அணிந்துள்ள மஞ்சள் நிற ஆடையும், அவரின் பார்வையும் மிக அழகாக இருப்பதாகவும், அவருடைய கண்களும், சிரிப்பும் அவ்வளவு அழகு என்று சொல்கிறார்கள் ரசிகர்கள்.




# அந்நியன் யாருக்கு?

விக்ரம், சதா, விவேக் நடிப்பில் ஷங்கர் இயக்கிய படம் அந்நியன். ஆஸ்கர் ரவிச்சந்திரன் தயாரித்திருந்தார். இந்த படத்தை இப்போது ஹிந்தியில் ரன்வீர் சிங்கை வைத்து மீளுருவாக்வுள்ளார் ஷங்கர். இதற்கான அறிவிப்பு வெளியாகி உள்ளது. தற்போது ராம்சரண் படத்தை இயக்கும் ஷங்கர், அதன்பிறகு இந்தியன் 2 படத்தை முடித்ததும், இந்த படத்தை தொடங்கவிருந்தார். இதற்கிடையே இக்கதை உரிமை தொடர்பாக ஷங்கருக்கும், ஆஸ்கர் ரவிச்சந்திரனுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இந்நிலையில் ஆஸ்கர் ரவிச்சந்திரனும், அந்நியன் படத்தை ஹிந்தியில் எடுக்க போவதாக ஒரு பேட்டியில் கூறியுள்ளார். இதில் ஹொலிவூட் நடிகர் ஜாக்கிசான் மற்றும் பொலிவூட்டின் பெரும் நட்சத்திரத்தை வைத்து தயாரிக்க இருப்பதாகவும், வரும் ஏப்ரலில் இதற்கான பணிகள் ஆரம்பமாகும் என அவர் கூறியுள்ளார்.

# திரை விமர்சனம்




திரைப்படம் : மாநாடு
இயக்கம் : வெங்கட் பிரபு
இசை : யுவன் ஷங்கர் ராஜா
நடிப்பு : சிலம்பரசன், எஸ்ஜே சூர்யா, கல்யாணி

டுபாயிலிருந்து கோவை வழியே ஊட்டிக்கு ஒரு திருமணத்திற்குச் செல்கிறார் அப்துல் காலிக். போகும்வழியில் நாயகியை சந்திக்கிறார். கூடவே சில பல பிரச்னைகளை யும். அவை ஒரு முடிவே தெரியாத கால சுழற்சியில் அவரை சிக்க வைக்கின்றன. எதனால் திடீரென இப்படி நடக்கிறது? எப்படி நிறுத்துவது? இதனால் என்ன பயன் என நமக்குள்ளே குறுகுறுக்கும் கேள்விகளுக்கு அப்துல் காலிக் விடை கண்டு பிடித்துச் சொல்வதுதான் இந்த “மாநாடு“.

நீண்ட இடைவெளியின் பின்னர் வெளியான இந்தப் படத்தில் சிம்பு அதிக பொறுப்புணர்வுடன் நடித்துள்ளார். நடிப்பு, சண்டை, நகைச்சுவை, பாச உணர்வு என சகலவற்றிலும் தேர்ந்த நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

ரைம் லூப் படத்தில் எதிர்பாராத திருப்பம் எல்லாம் இல்லை. திரும்ப திரும்ப ஒரே காட்சி கதையே வரும். அது சலிப்பை ஏற்படுத்தும். ஆனால், எஸ். ஜே. சூர்யாவின் நடிப்பால் அதையெல்லாம் மாற்றி விடுகிறார். அவரின் உடல்மொழி பாணி வசனங்களால் கவர்கிறார். சிம்புவா, எஸ். ஜே. சூர்யாவா நாயகன் என்று சந்தேகப்படுமளவுக்கு படத்தின் கதையமைப்பு அமைந்துள்ளது.

எஸ். ஏ. சி, வாகை சந்திரசேகர், வை. ஜி. மகேந்திரன், கருணாகரன், பிரேம்ஜி என ஒரு நடிகர் கூட்டம். இதில், சட்டென கவர்வது வை. ஜி. மகேந்திரன். மற்றவர்களும் தங்கள் பங்களிப்பை சரியாகக் செய்திருக்கிறார்கள். கல்யாணி பிரியதர்ஷனுக்கு ஒரே ஒரு காட்சியில் மட்டுமே வாய்ப்பு.

இசையில் முத்திரை பதித்திருக்கிறார் யுவன் சங்கர் ராஜா. நாயகன் சிம்பு, வில்லன் எஸ். ஜே. சூர்யா இருவருக் கும் தனித் தனியே பின்னணி இசையையும் வைத்துள்ளார்.

வேகமாக ஓடும் திரைக்கதைக்கு இடையிடேயே கடிவாளம் போட்டு சுவாரசியம் ஏற்றியுள்ளார் இயக்குநர். நேர்த்தியான காட்சி அமைப்பும் கவர வைக்கின்றன. கதை இப்படித்தான் நகர்கிறது என்பதை ஊகிக்க முனைவோ ருக்கு தனது புத்திசாலித்தனத்தால் ஏமாற வைக்கிறார் இயக்குநர்.

இன அரசியல், கல்யாணி ப்ரியதர்ஷன் விளக்கும் காட்சி என எல்லாவற்றையும் மேம்போக்காக பேசிச் சென்றாலும் உறுத்தாத வகையில் பயணித்திருப்பது படத்துக்கு கூடுதல் பலம். படம் பார்க்கும்போது கவனம் சிதறினால் கதை விளங்காமல் போகுமளவுக்கு படத் தொகுப்பு அமைந்துள்ளது.

சிறுபான்மையினர் மேல் பழிபோடும் நிகழ்கால அரசியல், பிரிவினை பேச்சுகள் போன்றவற்றை ஒரு முன்னணி நாயகன் வழியே பேச நினைத்திருப்பதற்கு பாராட்டுக்குரியது.



# விமலின் புதிய படம்

இயக்குநர் மார்ட்டின் நிர்மல் குமார் இயக்கும் புதிய படத்தில் விமல் நாயகனாக நடிக்கிறார். குடும்ப உறவுகளை மையமாக கொண்டு உருவாகும் இப்படத்தில் விமலின் தந்தையாக பாண்டியராஜன் நடிக்கிறார். சகோதரியாக அனிதா சம்பத் நடிக்கிறார்.

தங்கைக்கு திருமணம் செய்து வைக்க போராடும் ஓர் அண்ணனின் வாழ்வை மையமாகக் கொண்டு இந்தப் படம் உருவாக்கப்பட்டுள்ளது. படம் குறித்த மற்ற விவரங்கள் விரைவில் வெளியாக உள்ளது.



# சிவா - விஷால் மோதல்

விஷால் நடித்த எனிமி படம் தீபாவளிக்கு ரஜினியின் அண்ணாத்த படத்துடன் வெளியானது. இதையடுத்து தனது வீரமே வாகை சூடும் படத்தை டிசெம்பர் 25இல் தமிழ், தெலுங்கில் வெளியிட திட்டமிட்டிருந்தார். ஆனால், தெலுங்கில் சங்கராந்தி ஸ்பெசலாக ஆர். ஆர். ஆர், ராதே ஷ்யாம் என பெரிய படங்கள் வெளியாவதால் தனது படத்தை ஜனவரி 26ஆம் திகதியன்று வெளியிடப்போவதாக அறிவித்துள்ளார் விஷால். இதேநாளில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள டான் படத்தையும் வெளியிட எண்ணி உள்ளனர். இதனால் அன்றைய நாளில் விஷால் - சிவகார்த்திகேயன் படங்கள் நேரடியாக மோதவுள்ளன.



# ஓரின சேர்க்கைக்கு ஆதரவு

விஜய் சேதுபதியின் 96 படம் மூலம் அறிமுகமாகி, மாஸ்டர் படத்திலும் முக்கிய பாத்திரத்தில் நடித்தவர் கௌரி கிஷன். இதேபோன்று நட்பே துணை படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் அனகா.

இவர்கள் இருவரும் மகிழினி அல்பம் பாடலில் நடித்துள்ளனர். விஜி. பாலசுப்ரமணியன் இயக்கியுள்ள இந்த பாடலுக்கு கோவிந்த் வசந்தா இசையமைக்க மதன் கார்க்கி பாடலை எழுதியுள்ளார். அருண் கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்துள்ளார்.

ஓரின சேர்க்கையாளர்களுக்கு ஆதரவாக இந்த அல்பம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் கௌரி கிஷனும், அனகாவும் ஓரின சேர்க்கையாளர்களாக நடித்துள்ளனர்.




## கனவு நிறைவேறுமா...?

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக காலியில் நடந்த முதல் டெஸ்டில் இலங்கையின் வெற்றிக்கு பிரதான காரணமானவர் திமுத் கருணாரத்ன. முதல் இனிங்ஸில் அவர் பெற்ற 300 பந்துகளில் 147 ஓட்டங்களும், இரண்டாவது இனிங்ஸில் 104 பந்துகளில் 83 ஓட்டங்களும் இந்த வெற்றியில் அதீத செல்வாக்கு செலுத்தின. 10 ஆயிரம் டெஸ்ட் ஓட்டங்களை குவிப்பதே தனது கனவு என்று அவர் கூறியுள்ளார்.

போட்டியின் நாயகனாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் கூறுகையில், “10,000 ஓட்டங்களை எடுப்பதே எனது இலக்கு. இதை அடைய முடியுமா என்று எனக்கு தெரியவில்லை. ஆனால், என்மனதில் அதுதான் உள்ளது.”, என்று கூறினார். டெஸ்ட் அணியின் தலைவராகவும் செயல்படும் அவர் இந்த ஆண்டு 854 ஓட்டங்களை குவித்துள்ளார். இது அவரை 2021ஆம் ஆண்டில் அதிக ஓட்டங்களை சேர்த்தவர்கள் பட்டியலில் ஜோ ரூட், ரோஹித் சர்மாவுக்கு அடுத்ததாக - 3ஆவது இடத்தில் வைத்துள்ளது. ஆனால், இதில் திமுத்தின் சாதனை சிறப்பு என்னவென்றால், 77.63 என்ற சராசரியில் 400 ஓட்டங்களுக்கு மேல் பெற்றிருப்பதுதான். அவரின் இந்த சராசரியை வேறு எவரும் நெருங்கக்கூடவில்லை.

இலங்கை அணியைப் பொறுத்தவரையில் 10 ஆயிரம் ஓட்ட சாதனையை கடந்திருப்பவர்கள் இருவர்தான். குமார் சங்ககார (11 இரட்டை சதங்கள், 38 சதங்கள், 52 அரைச்சதங்களுடன் 12,400 ஓட்டங்கள்), மஹேல ஜெயவர்த்தன (7 இரட்டை சதங்கள், 34 சதங்கள், 50 அரைச்சதங்களுடன் 11,814 ஓட்டங்கள்) ஆகியோரே. தற்போது, திமுத் கருணாரத்னவும 5 இலக்க வரிசை ஓட்டத்தில் சேர விரும்புகிறார். 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்த முதலாவது தொடக்க வீரராக இருக்க வேண்டும் என்பது அவரின் கனவாக இருக்கிறது. ஆனால், 33 வயதாகி விட்ட திமுத்துக்கு இது சாத்தியமா என்ற கேள்வி எழுகிறது.

கருணாரத்ன தற்போது 5,406 ஓட்டங்களை எடுத்துள்ளார். இவர் தற்போது, சங்ககார, ஜெயவர்த்தனவுக்கு அடுத்து அதிக ஓட்டங்களை எடுத்த சிறந்த வீரர்களான திலான் சமரவீர (5,462 ஓட்டங்கள்), டில்ஷான் (5,492 ஓட்டங்கள்), மாவன் அத்தப்பத்து (5,502ஓட்டங்கள்) சாதனையை தொடக்கூடிய தூரத்தில் உள்ளார். இதற்காக அவர் இன்னமும் 100 ஓட்டங்களை எடுத்தாலே போதுமானது.

ஆனால், கடந்த 6 டெஸ்ட்களில் அவர் 50இற்கு மேற்பட்ட ஓட்டங்களை எடுத்துள்ளார். இந்த ஆண்டில் மட்டும் 4 சதங்களை அடித்துள்ளார். 33 வயதான கருணாரத்ன, 2018ஆம் ஆண்டில் 37.08 என்ற ஓட்ட சராசரியையே கொண்டிருந்தார். ஆனால், இப்போது அவரின் ஓட்ட சராசரி 47.97 ஆகும். இது அவரின் சாதனைக் கனவை ஊக்குவிக்கின்றது. 73 போட்டிகளில் விளையாடியுள்ள திமுத் 100 டெஸ்ட் போட்டிகள்வரை விளையாட வாய்ப்புண்டு. ஒருவேளை அவரால் ஐந்து இலக்க சாதனையை எட்ட முடியாது போனாலும்கூட அதற்கு நெருக்கமாக முன்னேற முடியும். அத்துடன், அதிக ஓட்டங்களை எடுத்த இலங்கையின் மூன்றாவது வீரர் என்ற பெருமையும் திமுத் கருணாரத்னவால் பெறமுடியும் என்பது உறுதி.

# நிரூபிப்பாரா...?

அவுஸ்திரேலிய நாட்டவர்களைப் பொறுத்தவரை பிரதமர் பதவிக்கு அடுத்து முக்கியமானது டெஸ்ட் அணியின் தலைமைப் பதவிதான் என்றால் மிகையல்ல. உலகக் கிண்ணத்தை விட அதிகௌரவமாக அவர்கள் கருதுவது ஆஷஷ் கிண்ணத்தையே. இந்த நிலையில் சர்ச்சைகளுக்கு மத்தியில் டெஸ்ட் அணியின் தலைமை பதவி பட் கம்மின்ஸிடம் வழங்கப்பட்டுள்ளது.

அஸ்திரேலிய கிரிக்கெட்டைப் பொறுத்தவரை 1956ஆம் ஆண்டு, வேகப்பந்து வீச்சாளரான ரே லிண்ட்வால் டெஸ்ட் அணித் தலைவர் பதவியை அலங்கரித்திருந்தார். இப்போது, 65 ஆண்டுகளுக்குப் பிறகு, முழுநேர அணித் தலைவராக ஒரு வேகப்பந்துவீச்சாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.



கம்மின்ஸின் பெயர் பரிசீலனையில் உள்ளது என்ற செய்திக்கு ஆதரவுக் குரல்களும் எழும்பின, விமர்சனங்களும் வந்தன. ஓரிரு நாட்களுக்கு முன்னதாக, “பிரட்லீயோ, மெக்ராத்தோ, அடுத்த ஓவரைத் தீர்மானிப்பதை, உங்களால், கற்பனை செய்து பார்க்க முடியுமா?” என நக்கலாகக் குறிப்பட்டிருந்தார் றிக்கி பொண்டிங்.

இந்த எதிர்ப்புகளுக்கு இன்னொரு காரணமும் உண்டு. மூன்றுவகை கிரிக்கெட்டிலும் தொடராக விளையாடி வரும் அவருக்கு அடிக்கடி காயம் ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு. அவ்வாறு காயமடையும் பட்சத்தில் சில மாதங்கள்கூட விளையாட முடியாது போகலாம். ஆஷஷ், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போன்ற முக்கிய தொடர்கள் வரும்போது அப்படி காயம் நேர்ந்தால் அணியை யார் வழிநடத்துவது என்ற கேள்வியே. கம்மின்ஸின் கடந்தகால பதிவுகளும் அவ்வாறானவைதான்.

தலைமை அவருக்கு மேலும் பளுவை அதிகரிக்கும் என்பதுவும் மற்றொரு காரணம். டெஸ்ட் தலைமைத்துவம் என்பது மிகவும் மன அழுத்தத்தைக் கொடுக்கக் கூடியது. 5 நாட்களும் நாளுக்குநாள்கூட போட்டி மாறிக் கொண்டே இருக்கும். அந்த நிலையில் அவர் பந்து வீசவும் வேண்டும், மற்ற பந்து வீச்சாளர்களையும் மாற்றம் செய்ய வேண்டும். எதிரணியின் 20 விக்கெட்டை வீழ்த்தவும் தொடர்ந்து திட்டம் வகுத்துக் கொண்டே இருக்க வேண்டும். இவை அனைத்தையும் கம்மின்ஸ் சமாளிப்பாரா என்பதுதான் முன்னிருக்கும் கேள்வி.

கம்மின்ஸின் வழித்தடத்தைக் கவனிப்பவர்களுக்கு, அவரால், இ(எ)துவும் முடியும் என்பது விளங்கும். 18 வயதில், (2011 நவம்பரில்) தன் முதல் டெஸ்ட் போட்டியில் ஆறு விக்கெட்களை எடுத்ததிலிருந்து, 2021 நவம்பரில், டெஸ்ட் அணித் தலைவராக மகுடம் சூட்டிக் கொண்டிருப்பது வரை, இந்த பத்தாண்டுகளுக்கான அவரின் கிரிக்கெட் வாழ்வின் கோடு, ஒரே நேர்க்கோடாக உச்சத்தை நோக்கிப் பயணப்பட்டிருக்கவே இல்லை. அதல பாதாளங்களைத் தொட்டுப் பார்த்திருந்தது. காயங்கள் அவரை தொடர்ந்து முடக்கிப் போட்டு, ஐந்து ஆண்டுகள் அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட்டை விட்டே விலக்கி வைத்திருந்தது. கிரிக்கெட் உலகம் ஏறக்குறைய அவரை ஏறங்கட்டிய பின்தான் அவரின் சுயரூபம் வெளிச்சத்திற்கு வந்தது.

உள்ளூர் கிரிக்கெட்டில் அதிர்வலைகளை ஏற்படுத்தி, 2017இல், உள்ளே வந்தவருக்கு, அங்கிருந்து, வீழ்ச்சியே இல்லை் எழுச்சியை மட்டுமே அவருடைய பந்துவீச்சு கொண்டுள்ளது. அவரின் முதல் டெஸ்ட்டுக்குப் பின், அவரின்றி 64 டெஸ்ட் போட்டிகளை அவுஸ்திரேலியா ஆடியிருந்தது. ஆனால், அவர் திரும்பிவந்த பிறகு ஆடிய, 35 டெஸ்ட்களில், 33 போட்டிகளில் பிரதான பந்து வீச்சாளர் அவர்தான்.

கூடவே, உப தலைவராக நியமிக்கப்பட்ட ஸ்ரீவ் ஸ்மித்தும் இரண்டு ஆண்டுகள் தலைமை பொறுப் பேற்க தடையிலிருந்து மீண்டு வந்திருக்கிறார். அவரின் அனுபவமும், கம்மின்ஸுக்கு உதவும். நெருங்கும் ஆஷஷ் தொடர், ஆரம்பித்து விட்ட உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர், ரிம் பெய்ன் தற்காலிக ஓய்வு என கம் மின்ஸ் முன் பல சவால்கள் தற்போது உள்ளன. அவரின் தலைமை ஆளுமையை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# மீண்டும் ஹமில்டன்!




கட்டார் நாட்டில் போர்முலா 1 கிராண்ட் ப்றீ பந்தயம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நேரப் போட்டியாக நடந்து முடிந்திருக்கிறது. இதில் வெற்றி பெற்று பட்டத்துக்கான போட்டியில் இடைவெளியைக் குறைத்துக் கொண்டிருக்கிறார் லூயிஸ் ஹமில்டன். கட்டார் கிராண்ட் ப்றீ தொடங்குவதற்கு முன்னதாக, மக்ஸ் வெர்ஸ்டப்பன் மற்றும் ஹமில்டனுக்கு இடையே 14 புள்ளிகள் இடைவெளி இருந்தது. இந்த வெற்றியின் மூலமாக, அதனை 8 புள்ளிகளாகக் குறைத்திருக்கிறார் லூயிஸ்.

தகுதிச்சுற்றில் சிறப்பாகச் செயல்பட்டு வழக்கம் போல் லூயில் ஹமில்டனே முதல் இடத்தில் முடித்தார். வேறு எந்தத் தடைகளும் இன்றி கிராண்ட் ப்றீயின் “போல் பொசிஷனி“லும் ஹமில்டனே இருந்தார். இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களில் வெர்ஸ்டப்பன் மற்றும் வோல்ட்டேரி போட்டாஸ் ஆகியோர் தகுதிச்சுற்றை முடித்திருந்தார்கள்.

தகுதிச்சுற்றில் ஞ3இன் முடிவில் பியர் கேஸ்லியின் கார் சேதமடைந்தது. 15ஆவது திருப்பத்திற்குப் பின்னர் அவர் காரை நிறுத்தினார். இதனால் முதலில் இரட்டை மஞ்சள் கொடியும் பின்னர் ஒற்றை மஞ்சள் கொடியும் காட்டப்பட்டது.

மஞ்சள் கொடி காட்டப்படும்போது மற்ற போட்டியாளர்கள் வேகத்தைக் குறிப்பிட்ட அளவிற்குக் குறைக்க வேண்டும். ஆனால், இரட்டை மஞ்சள் கொடி காட்டப்பட்டபோது வெர்ஸ்டப்பன் வேகத்தைக் குறைக்காமல் அந்தக் கொடியைக் கடந்து சென்றார். இதேபோல் போட்டாஸும் மஞ்சள் கொடி காட்டப்பட்ட போது வேகத்தைக் குறைக்காமல் கடந்தார். இதனைத் தொடர்ந்து வெர்ஸட்டப்பனுக்கு கிராண்ட் ப்ரீ தொடக்க வரிசையில் 5 இடங்கள் கிரிட் பெனால்டியும், போட்டாஸுக்கு 3 இடங்கள் கிரிட் பெனால்டியும் வழங்கப்பட்டது.

இரண்டாம் இடத்தில் முடித்திருந்தாலும் 5 இடங்கள் கிரிட் பெனால்டி காரணமாக வெர்ஸ்ட்டப்பன் 7ஆம் இடத்திலும், 3 இடங்கள் கிரிட் பெனால்டி காரணமாக போட்டாஸ் 6ஆம் இடத்திலும் போட்டியைத் தொடங்கவேண்டியிருந்தது. வெர்ஸ்ட்டப்பன் மற்றும் போட்டாஸ் பின்னால் சென்றதால், 4 மற்றும் 5ஆம் இடங்களில் இருந்த பியர் கேஸ்லி மற்றும் பெர்னாண்டோ அலோன்சோ ஆகியோர் 2 மற்றும் 3ஆம் இடங்களில் பந்தயத்தை தொடங்கினார்கள்.

7ஆம் இடத்தில் போட்டியைத் தொடங்கிய வெர்ஸ்ட்டப்பன் முதல் சில திருப்பங்களிலேயே 4ஆம் இடத்திற்கு முன்னேறினார். 6ஆம் இடத்தில் தொடங்கிய போட்டாஸ் முதல் லேப் முடிவிற்குள்ளேயே 11ஆம் இடத்திற்குப் பின்தங்கினார். பெர்னாண்டோ அலோன்சோ தனக்குக் கிடைத்த வாய்ப்பைத் தக்க வைத்துக் கொண்டு தொடக்கத்தில் சில லேப்கள் 2ஆம் இடத்தில் நீடித்தார்.

ஹமில்டனின் வேகத்திற்கு ரெட்புல் காரால் ஈடு கொடுக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் இந்த போட்டியில் இரண்டாம் இடம்தான் என்பதனை வெர்ஸ்ட்ப்பனே உணர்ந்து கொண்டார். எனவே, இருவரும் போட்டியின்றி முதல் மற்றும் இரண்டாம் இடங்களில் பயணித்து போட்டியை முடித்துக் கொண்டார்கள். மூன்று மற்றும் நான்காம் இடத்துக்குத் தான் கடைசி வரை போட்டி கொஞ்சம் கடுமையாக இருந்தது. 11ஆவது இடத்தில் இருந்த பெரஸ் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டியிட்டு 7ஆம் இடத்துக்கு முன்னேறினார்.







# வளரிளம் பருவத்தினருக்கான சஞ்சிகை ‘அச்சாண்டி’ வெளியீடு

சிறகுகள் அமையத்தின் “அச்சாண்டி” சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சுன்னாகம் பொது நூலகத்தில், நடைபெற்றது. வளரிளம் பருவத்தினரிடையே வாசிப்பைத் தூண்டும் நோக்கில் காலாண்டுச் சஞ்சிகையாக அது வெளியிடப்பட்டிருக்கிறது. சுன்னாகம் பொது நூலகத்தில், வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்படும் நிகழ்வுகளின் வரிசையில் இந்த சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் இடம்பெற்றிருக்கிறது.

நிகழ்வை சிறகுகள் அமைய செயற்பாட்டாளர் சஜீவன் ஒருங்கமைத்து நடத்தியிருந்தார். உடுவில் பிரதேசசபை செயலாளரைத் தொடர்ந்து எழுத்தாளர் பகீரதி கணேசதுரை, “அறிந்திரன்” சஞ்சிகை ஆசிரியர் கணபதி சர்வானந்தா, “எங்கட புத்தகங்கள்” சார்பில் குலசிங்கம் வசீகரன், சிறகுகள் அமையம் சார்பில் சஞ்சிகா, சுன்னாகம் பொதுநூலக நூலகர் திருமதி சுதர்சன் ஜெயலட்சுமி, “அச்சாண்டி” சஞ்சிகை ஆசிரியர் பா.சிறிபவன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்கள்.

வேதாந்த மடத்தின் குரு பீடாதிபதி வேத வித்யா சாகரர் நிகழ்வுக்கான ஆசியுரையை வழங்கியிருந்தார். தொடர்ந்து நூலின் வெளியீட்டுரையை சிறகுகள் அமைய இயக்குநர் சுஜீவன் வழங்க மூத்த பத்திரிகையாளரும், “அறிந்திரன்” சஞ்சிகை ஆசிரியருமான கணபதி சர்வானந்தா சஞ்சிகையின் முதலாவது பிரதியை கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் அபிஷேக்கிடம் வழங்கி சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். சுன்னாகம் பொதுநூலக நூலகருக்கான சிறப்புப் பிரதியை குலசிங்கம் வசீகரன் வழங்கிவைத்தார்.

எழுத்தாளர் பகீரதி கணேசதுரை மதிப்பீட்டுரையை வழங்கினார். “அச்சாண்டி” சஞ்சிகையின் ஆலோசகர் நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்கள் இணையம் மூலம் வழங்கிய வாழ்த்துரை காணொளி மூலம் ஒளிபரப்பப்பட்டது. அச்சாண்டி சஞ்சிகையின் ஆசிரியர் பா. சிறிபவன் ஏற்புரையை நிகழ்த்தினார்.

## ஜேர்மனியில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனின் மணிவிழா








தாய்மண்ணில் தமிழுக்கும் தமிழ் சமூகத்திற்கும் அரும்பணியாற்றும் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களின் சேவைகளைப் பாராட்டும் முகமாக அவருடைய மணிவிழா ஜெர்மனியில் கடந்த சனிக்கிழமை St.Monika Gemeinderzentrum – Am Kleinenberg, 53239 Schwerte Ergste மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. இவ்விழா ஜெர்மனியில் வெளியிடப்படும் வெற்றிமணி பத்திரிகை, சிவத்தமிழ் சஞ்சிகையின் ஆசிரியர் டாக்டர் மு.க.சு.சிவ குமாரினால் நடத்தப்பட்டது.

இவ்விழாவுக்கு சிவஸ்ரீ பாஸ்கரநாத குருக்கள் ஆசியுரை வழங்கினார். எழுத்தாளர்கள், ஆன்மீகவாதிகள், தமிழ் ஆர்வலர் கள், கலைஞர்கள், மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர். இவ்விழா வின் நிகழ்ச்சிகளை சகநாயகன் சக்திவேல் தொகுத்து வழங்கியிருந் தார்.

செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனின் சேவைகளைப் பாராட்டி மாணவர்களின் உரையும், பெரியோர்களின் வாழ்த்துரைகளும் இடம்பெற்றன. நடன நிகழ்வுகள், கனடா சீனியஸ் நாடகத் தந்தை அ.சிவதாசனும் நாடகக் கலைஞன் வெ.இரவிந்திரனும், வழங்கிய தாளலய நிகழ்வு ஆகியன இவ் விழாவை மேலும் சிறப்பித்தன.

அத்துடன் இந்நிகழ்வில் சிவத்தமிழ் சிறப்பிதழ் வெளியிடப்பட்டது. வெளியீட்டுரையை எழுத்தாளர் நகுலா சிவநாதன் நிகழ்த்தியிருந்தார். முதல் பிரதியை சிவஸ்ரீ. பாஸ்கரகுருக்கள் வழங்க ஈஸ்வரா சலங்கை ஒலி நாட்டியாலய அதிபர் கார்த்திகா ஈஸ்வரலிங்கம் பெற்றுக்கொண்டார். அதன் பின் வானதி வாணி நர்த்தனாலயம் சார்பாக திரு. தேசிங்குராஜா அவர்களும் ஆன்மிகத் தென்றல் த. புவனேந்திரன் அவர்களும் பெற்றுக் கொள்ள சிறப்புப் பிரதிகள் நடனக் கலைஞர்களும், மாணவர்களும் பெற்றுக்கொண்டனர்.









## சத்திய சாய்பாபாவின் பிறந்த தின நிகழ்வுகள்

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 96 ஆவது ஜனன தின வைபவம், கொழும்பு- புதுச் செட்டி தெருவில் உள்ள சாயி மத்திய நிலையத்தில் பிரதம அறங்காவலர் எஸ். என். உதயநாயகன் தலைமையில் இடம் பெற்றது. இதன்போது, பகவானுக்கு தீபாராத்தி நடைபெறுவதையும், சிரேஷ்ட அறங்காவலர் கே.பி. பாலநாயகம் சர்வமத தொடியேற்றுவதையும் நிகழ்வில் பங்கேற்ற பிரதமரின் இந்து மத ஆலோசகர் சட்டத்துறைக் கலாநிதி ஜே.எம். சுவாமிநாதன் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# மழையில நனையாதை...

வி. தேன்மொழி சபா

உன்னதமான எண்ணங்களுடன் புறப்பட்டாள் வதனி. நீண்ட நாட்களாக தடைப்பட்ட பயணம் ஒருமாதிரி நிறைவேறியதால் மிகுந்த சந்தோசம் அவளுக்கு. கனடா மாப்பிளை நிச்சயமாகி வருடங்கள் மூன்றைத் தாண்டின. தன்னை பெற்றவர்களை தனது சகோதரனின் பொறுப்பில் விட்டதோடு, மகளுக்காக அவர்கள் கொடுத்த சீதன வீடு வளவை பார்க்கும் பொறுப்பை யும் அவனிடத்தில் ஒப்படைத்தாள் விமான நிவையத்தில் சகோதரன் பெற்றோரின் பூரண ஆசியுடன், கண்கலங்கி கையசைத்து மறைந்தாள்.

இரண்டு வருடங்கள் ஓடி மறைந்தன, ஒரே மகள் தன்னை விட்டு வெளிநாட்டிற்கு சென்ற ஆதங்கத்தில், செல்லம்மா நான்கு மாதங்கள் படுக்கையில் கிடந்து இறையடி சேர்ந்தாள். மனைவி மகளுடன் வாழ்ந்த வீடு. இப்போது அந்தப் பெரிய வீட்டில் தனிய வாழ்வதற்கு கஷ்ரமாய் இருந்தது ரகுவிற்கு. நான்கு மாதங்களாக தனது நேரத்தை மனைவிக்காக செலவழித்தவரால் இந்த அதிர்வைத் தாங்க முடியாது போனது. எல்லாம் இழந்த உணர்வு அவரிடத்தில் குடிகொண்டது.. வெறுமையாக கிடந்த மனைவியின் கட்டில், காணுந்தோறும் பல கதைகள் பேசி வருத்தத்தை கொடுத்தது.. அதனால் தனது பெரும்பாலன பொழுதை வெளியிடங்களில் செலவிட முயன்றார்.

மகன் தனுசாந்தனும் தகப்பனை கவனிக்க நேரமில்லாதவன் போல நடந்தான். தனிமையில் தங்குவதில் பல சிரமங்கள் ஏற்பட மகளின் விருப்பத்தோடு வீட்டை ஒரு தொகைப் பணத்தை முற்பண மாகப் பெற்று வாடகைக்கு விட்டார். அந்தப் பணத்தையும் தனது உடமைகள் அனைத்தையும் மகன் மருமகளிடம் ஒப்படைத்து, அவர்களுடன் ஒட்டிக் கொண்டார். மாதமாதம் வாடகைப் பணத்தை மகன் பெற்றுக் கொண்டான். ரகுவின் கையில் பணம் கொடுப்பதை தவிர்த்தனர்.

அவரது வாழ்க்கை ஊதியம் வாங்காத வேலைக்காரனாக கழியத் தொடங்கியது. காரணம் தகப்பன் கொடுத்த பணத்துடன் தாங்களும் பணம்போட்டு சின்னதாக ஒரு புடவைக் கடை ஒன்றை ஆரம்பித்தனர். வியாபாரத்தை இருவரும் சேர்ந்தே நடாத்தினர். அதனால் வீடு கூட்டுவதில் இருந்து சாப்பாடு சமையல் பிள்ளைகளின் உடுப்புக் கழுவுதல் என சகலதும் இவர் தலையில் விழுந்தது.. ரகு தன்னால இயன்ற மட்டும் அவர்களுக்காக உழைத்தார். அவருக்கு பேரப்பிள்ளைகளுடன் பொழுதைக் கழிப்பது பெரிய ஆனந்தத்தை அளித்தது. பிள்ளைகள் பாடசாலையிலிருந்து வந்ததும் அவர்களுக்கு சாப்பாடு பரிமாறுவதுடன், அவர்களுடன் கதைத்துப் பேசி மகிழ்ந்தார். கதைகள் சொல்லி அவர்கள் இடத்தும் நல்ல சிந்தனையை வளர்த்தார். பிள்ளைகளும் தாத்தாவுடன் மிகவும் நெருக்கமாகினர்

நாட்கள் நகர்ந்தன. வியாபாரமும் தனுசாந்தனுக்கும் விமலாவுக்கும் பிடிபடத் தொடங்கியது.. இரவில் தமது கடை லாபத்தை கதைப்பதோடு, புதிய பலசரக்கு கடை போடுவதற்கும் திட்டம் போட்டனர். அத்திட் டத்திற்கான பணத்தை, தாய், தகப்பனுக்கு பிற்காலம் வதனிக்கு சேரும்படியாக எழுதிய வீட்டை, வதனியின் சீதன வீட்டை விற்பதில் வந்து நின்றது. அவர்களது உரையாடலில் இருந்த தவறான எண்ணத்தை புரிந்து கொண்ட ரகு, மறு நாளில் இருந்து தனது பேரப்பிள்ளைகளுக்கு பாரதக்கதையை கூறத்தொடங்கினார்.

பஞ்ச பாண்டவர்களுக்கு சேர வேண்டிய, இராஜ்ஜியத்தை துரியோதனன் ஏமாற்றிச் சூதாடி அவர்களை தோற்கடித்து பெறமுனைந்தான்.. பெரும் படையுடன், திறமையான வீரர்களுடன் பாண்டவர்களுடன் கடும் யுத்தம் புரிந்தான். ஆனால் யுத்தத்தில் அடுத்தவன் சொத்தை தட்டிப்பறிக்க முயன்ற துரியோதனனும் அவனது சகாககள், உறவினர்கள் என அனைவரும் மாண்டனர். தர்ம வழியில் போராடிய பாண்டவர்கள் கைக்குத்தான் அஸ்தினாபுரம் கிடைத்தது. அதுபோல இராமயணத்தில் இராமனுக்கு பட்டாபிஷேகம் நடப்பதை தடுத்து தனது மகனுக்குத்தான் அரசுரிமை கிடைக்க வேண்டும் என ஆசைப்பட்ட கைகேயி பட்ட அவலத்தையும் கூறினார் பிள்ளைகளின் மனத்தில் அடுத்தவன் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது என்பதை ஆழமாக பதித்தார்.

மகனும் மருமகளும் வீடுவளவை விற்பதற்கு கையெழுத்து இடும்படி வற்புறுத்த. தொடங்கினர். ரகுவும் “அது எனக்குச் சொந்தமில்லை மகளுக்கு குடுத்தாச்சு... அதை என்னால் விற்கமுடியாது எனக் கூறி மறுத்தார். சிலநாட்கள் இந்தப் பிரச்னை தொடர்ந் தது. மகன் தகப்பனுடன் கதைப்பதை நிறுத்திக் கொண்டதுடன், பிள்ளைகளையும் அவருடன் கதைப்பதற்கு தடை போட்டனர்.

ஆனால் மருமகள் “எல்லாக் குடும்பத்திலையும் வெளி நாட்டிலை இருக்கிறவை எவ்வளவு உதவி செய்கினம் ஆனால் இங்க அவையளுக் காக நாங்கள் பாடுபட வேணும்- என்ன பிரியோசனம்,...ஏதாவது உதவி செய்தாலும் பறவாயில்லை. எங்களுக்கு வேண்டாம் தகப்பனுக்காக அனுப்பலாம் தானே. வருமானம் இல்லாத,இவையளை நாங்கள் பார்க்க வேணும், அவையள் அங்க ஒய்யாரமாய் இருப்பினம்” அன் றைய புராணம் அத்துடன் நிறைவேறியது.

மறுநாள் ரகுவுடன் பிள்ளைகள் இருந்தால் அவர்களின் மனதை மாற்றிப்போடுவார் எனப் பயந்து அவர்களையும் கடைக்கு வரும்படி வற்புறுத்தினர். இடைக்கிடை புராண இதிகாசங்கள் நடக்கும் ரகுவை திரும்பவும் தனிமை வாட்டத் தொடங்கியது.

இரண்டு நாட்கள் அமைதியாகச் சென்றது. அன்றிரவு “அவா மட்டும் தான் பொம்பிளைப் பிள்ளையை பெத்த மாதிரி பிகு காட்டி எல்லாத்தையும் சுறுட்டி வழிச்சுக் கொண்டு போவிட்டா, எல்லாத்தையும் துடைச்ச மாதிரி இஞ்ச இருக்கிறதையும் துடைச்சுக்கொண்டு போயிருக் கலாமே. எங்கட நிம்மதியைக் கெடுக்கத்தான் இதை விட்டு விட்டு போனது” என வாயில வந்ததை எல்லாம் கொட்டித்தீர்த்தாள். மறைந்து போன மனைவிக்கு மங்களம் போட்டதையும், தன்னால தாங்கள் கரைச்சல் படுவதாகவும் கூறிய வார்த்தைகளும் ரகுவின் மனதை ஆழமாக சுட்டது. அவளின் கொடூரமான வார்த்தை களை எல்லாம் சகிக்க முடியாதவராக மறைவான இடத்தில் வேதனை தீருமட்டும் அழுது முடித்தார். தன்னை ஆசுவாசப் படுத்தி படுப்தற்கு அறைக்கு செல்ல முற்பட்டவரைக் கண்டதும் உருப்பிடித்த வளாட்டம், “என்ன சாப்பாடு- உப்புக் கொட்டிக் கிடக்கு, வாயிலை வைக்க ஏலாமல் கிடக்கு” என சாப்பிட்டு முடிந்த கோப்பையை தள்ளிவிட்டு வெடித்தாள். அது ரகுவின் காலடியில் விழுந்தது.

“என்னம்மா சொல்லுகிறீங்க- நல்லாய்த்தானே இருக்கு... தாத்தா சாப்பாடு சமைக்கிறது தான் உங்களுக்கு பிரச்னை... உங்களுக்கு பிடிக்கேலை எண்டால் நீங்க சமைக்கிறது தானே” என்றவாறு எழும்பினான் கரன்.



தனக்காக சாப்பிடாமல் எழும்பிய பேரனை பார்த்து மனதுக்குள் குமைந்தார். “நான் பெத்தது, கொஞ்சிக் கொஞ்சி விளையாடினது, ஊட்டி ஊட்டி வளர்த்தது, என்ர இரத்தம், எதுவும் கண்டு கொள்ளாமல் கொட்டிக் கொண்டு இருக்குது” என எண்ணி, கண் கலங்கி குனிந்து கோப்பையை எடுத்து கழுவ முற்பட்டார்.. அப்போ அருகில் வந்த தனுசாந், “உனக்கு சூடு சொறணை இருக்கா?” ஏனக் கேட்டவாறு தனது கையைக் கழுவினான். அவனது வார்த்தை அவரைத் தள்ளாட வைத்தது. விழப்போன வரை பக்கத்தில் நின்ற கவி தாங்கிக் கொண்டான்.

தனுசாந்தன், “இந்த நடிப்பிற்கு மட்டும் குறைச்சலில் இல்லை” என்றவாறு அவ்விடத்தை விட்டகன்றான். தகப்பனின் வார்த்தை கவிக்கு கோபத்தை ஊட்டினாலும், “தாத்தா...,என்னைப் பிடியுங்க” எனக் கூறியவனன அவரால் பிடிக்க முடியாது போக தரையில் அமர்ந்து கொண்டார். அவரது உடல் வியர்வையால் நனைந்தது. மெதுவாக தரையில் படுத்தார். “அண்ணா! அண்ணா! இங்க ஓடிவா, தாத்தா விழுந்து விட்டார்” என பதற்றத்துடன் தமையனை அழைத்தான்.. அந்த நேரம் தொலைபேசி சிணுங்கியது. விமலா எடுத்து. “கொஞ்சம் பொறம்மா, அப்பா விழுந்து போனார், அவரைப்பார்த்து விட்டு வாறன்” என பாச மழையைப் பொழிந்து, தொலை பேசியை கட் பண்ணி வைத்தவள். நேராக ரகுவின் அருகில் வந்தாள். கவியும் கரனும் மெதுவாக தாத்தாவை தூக்கி கட்டிலில் படுக்க வைத்தனர். சூடான நீர் பருகக் கொடுத்தனர். மன வேதனையும் உடல் வேதனையும் வருத்தத்தை கொடுக்க மெதுவாக கண்மூடினார்.

“என்ன நாடகம் முடிஞ்சா, இல்லாட்டால் போய்ச் சேர்ந்து விட்டாரா?” என ஏழனமாக வினாவிய படி கட்டில் அருகில் வந்தாள், வந்தவளின் மனதில் என்ன நடந்ததோ தெரியாது. “அப்பாவைக் கூட்டி யாடா” என கவியை அனுப்பி விட்டு பதற்றத்துடன், “மாமா...மாமா, உங்கட மகள் மாமா,...கதைக்கப் போறீங்களா?” என்றவள் கரனை, “கோப்பி ஊத்தி வா” என அனுப்பினாள். கரன், “சுப்பர் ஸ்ரார் நயந்தாரா பிச்சை வேண்ட வேணும், என்ன நடிப்படா“ என நினைத்தவாறு அவ்விடத்தை விட்டகன்றான் எல்லாத்திற்கும் மேல அருமை மகன் ஓடிவந்து “அப்பா, அப்பா” என பதற்றத்துடன் அருகில் நின்று அழைத்தார். அவர்களின் நடத்தையை அவதானித்த கவி அழத் தொடங்கினான். அவன் அழும் சத்தம் கேட்டதும் கரனும் அவ்விடத்திற்கு வந்து, “தாத்தா தாத்தா” என்றழைத்தான். தாத்தா கண்ணைத் திறந்து பேரப் பிள்னைகளை அருகில் அழைத்து கையில் முத்தம் கொடுத்து முகத்தை வாஞ்சையோடு தட வினார். பின் தன் ஒரே மகனைப் பார்த்து “மழையில் நனையாதையடா உனக்கு சளிக் காச்சல் பிடிச்சுடும், அம்மா கூப்பிடுறா” என்று கூறிவிட்டு கண்ணை மூடினார் தலை சரிந்தது..

அவரது தலை சரியவும் தனுசாந்தன் தன்னை அறியாமல் “அப்பா” என கத்தினான். அவனது கத்தல் கேட்டு அயலவர்கள் ஒன்று கூடினர் கனடா விற்கு தகவல் பறந்தது.. மகள் பணம் அனுப்பியதால், தகப்பனின் காரியங்களை எல்லாம் சிறப்பாக செய்து முடித்தனர்.

நாட்கள் நகர்ந்தன, தனுசாந்தனின் மனதில் வேதனை குடிகொண்டது.. எந்த நேரமும் படுக்கையை நாடினான். வீட்டில் சமையல் சாப்பாடு கடை எல்லாம் பிரச்னையாகியது. தகப்பனின் இறுதி வார்த்தை என்நேரமும் தனுசாந்தனின் காதில் ஒலித்த வண்ணம் இருந்தது.. அவன் சாப்பாட்டை குறைக்கத் தொடங்கினான். அவனது நடவடிக்கைகளில் படிப்படியாக மாற்றங்கள் ஏறபட்டன. நடையில் தள்ளாட்டம் தெரிய அறைக்குள்ளே முடங்கிக் கொண்டான். அவனது நிலையை பார்த்து விமலா பயப்படத் தொடங்கினாள். வீட்டையும் கவனித்து கடையையும் கவனிக்க வேண்டிய பெரும் பொறுப்பு அவள் தலையில் விழுந்தது. **(16 ஆம் பக்கம் பார்க்க..)**



# மகாஜனா பழைய மாணவர் கனடா கிளை பாராட்டுவிழா

மிக நீண்ட நாட்களின் பின் கனடா மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களின் ஒன்று கூடல் 'கலேஸ்நைட்' இரவு விருந்துபசாரம் கடந்த வாரம் கிறாஸ் பாங்குவிட் மண்டபத்தில் நடந்தேறியது. இந்த விருந்துப சாரத்தில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர்களும் கலந்து கொண்டனர்.

கோவிட் - 19 பேரழிவு காரணமாக இரண்டு வருடங்களாக கனடாவில் மக்கள் வீடுகளில் முடக்கப்பட்ட நிலையில் இருந்தனர். கனடாவில் இயங்கும் மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்கும், யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்கும் இடையே கனடாவில் நடைபெறும் சினேகபூர்வமான துடுப்பாட்ட விளையாட்டுப் போட்டியில் கடந்த 3 வருடங்களாக தொடர்ந்தும் மகாஜன கல்லூரி வெற்றி ஈட்டியதைக் கொண்டாடும் முகமாக இந்த ஒன்றுகூடலுடன் கூடிய விருந்துபசாரம் ஒழுங்கு செய்யப்பட்டது.

சங்கத்தலைவர் ச. புவனச்சந்திராவின் வரவேற்புரையைத் தொடர்ந்து, கல்லூரியின் பழைய விளையாட்டு வீரர்களான பி. பாலசிங்கம், வி.ரி. மகாலிங்கம் போன்ற சிலர் தங்கள் காலத்து விளையாட்டு போட்டி அனுபவங்களை விருந்துனருடன் பகிர்ந்து கொண்டனர். யூனியன் கல்லூரி பழைய மாணவர் சார்பாக யாழ் கோபன் பாலசுந்தரம் உரையாற்றினார். அதனையடுத்து எழுத்தாளர் குரு அரவிந்தனின் உரை இடம்பெற்றது.

இந்த விழாவில் துடுப்பாட்ட வீரர்கள் விருது கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனர். ராஜினி விமலகாந்தன் நிகழ்ச்சியை நடத்தினார். விருந்துபசாரத்தைத் தொடர்ந்து ரதி சாம்பவலிங்கம் அவர்களின் நன்றியுரையுடன் பாராட்டுவிழா முடிவுற்றது. ■

# கொடகே சாகித்திய விருது பெறும் நூல்களின் விபரம்

2020ஆம் ஆண்டு தமிழில் வெளிவந்த நூல்களில் தெரிவுக்கு வந்த நூல்களின் தெரிவு முடிவுகள் அறி விக்கப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டு வெளிவந்து தெரிவுக்கு வந்த நாவல்களில் சிறந்த நாவலாக ஒன்றும் தெரிவுச் செய்யப்படவில்லை.

2020ஆண்டு வெளிவந்து,தெரிவுக்கு வந்த சிறு கதைத் தொகுப்புகளில் சிறந்த சிறுகதைத் தொகுப் பாக மல்லிகை சி. குமாரின் "வேடத்தனம்" தெரிவுச் செய்யப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு வெளிவந்த கவிதைத் தொகுப்பு தொகுப்புகளில் சிறந்த கவிதைத் தொகுப்பாக வெலி மடை ரபீக்கின் "ஒரு நானும் இன்னும் ஒரு நானும்" தெரிவுச் செய்யப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு சிங்களத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நாவலாக எம்.ரிஷான் ஷரீப்பின் மொழிபெயர்ப்பில் வெளி வந்திருக்கும் கத்யானா அமரசிங்ஹ வின் தரணி0- எனும் நாவல் தெரிவுச் செய்யப்பட்டுள்ளது.

2020ஆண்டு வெளிவந்து ,தெரிவுக்கு வந்த நூல் களில் முதல் நூல் வெளியிட்ட இளம் படைப் பாளியின் நூலுக்கான விருது ஆ.லெ.மு.இர்ஷாத் தின் ஒளி பூக்கும் இரவு எனும் ஹைக்கூ தொகுதி தெரிவுச் செய்யப்பட்டுள்ளது. ■




# மைக்கல் கொலினின் இரு கவிதை நூல்கள் இன்று வெளியீடு

ஈழத்துச் சமகால இலக்கியச் செயற்பாட்டாளர்களில் முக்கியமான ஒருவராக விளங்கும் திருமலை வாழிடமாகவும் கொண்ட வி.மைக்கல் கொலினின் ஐந்தாவது நூலாகவும் மூன்றாவது கவிதை நூலாகவும் அமையும். இவனைச் சிலுவையில் அறையுங்கள் என்ற பாஸ்கா கால திருவிபிலிய மீள் வாசிப்பு கவிதைத் தொகுதியும் தனது காதல் திருமண வாழ்வின் இருபத்தியிரண்டாம் வருட நிறை வாக தன் காதல் மனையாளுக்காக வெளியிடும் எழுதித்தீராப் பிரி யங்கன் என்ற காதல் கவிதைத் தொகுதியும் இன்று மட்டக்க ளப்பில் பெருவிழா ஒன்றில் வெளியீடு காண்கின்றன. இவ் வெளியீட்டு நிகழ்வில் கிழக்கு மாகாணத்தின் பல அரச உயர் மட்டப் பிரபலங்களுடன் பேராசிரியர்கள், விமர்சகர்கள், எழுத் தாளர்கள் கலந்து சிறப்பிக்கின்றனர். இவ் இரு நூல்களும் மகுடம் பதிப்பகத்தின் 41 ஆம், 42 ஆம் வெளியீடுகளாக அமைவதும் சிறப்புக்குரியது.



மைக்கல் கொலின் ஒரு சஞ்சிகையாளர், கவிஞர், சிறுகதையாளர், நாவலாசிரியர், குறும்பட இயக்குநர், பத்திரிகையாளர், வெளியீட்டாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட ஒரு இலக்கியச் செயற்பாட்டாளராக விளங்குகிறார். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை பல முதல் முயற்சிகளின் சொந்தக்காரராகவும் இவர் விளங்குகிறார். 1992 களில் இவர் வெளியிட்ட "என் பிரிய ராஜகுமாரிக்கு" என்ற புதுக் கவிதைத் தொகுதியே திமுகோணமலை மண்ணில் அச்சில் வெளி வந்த முதற் புதுக் கவிதைத் தொகுப்பாகும். திருமலை மண்ணில் முதல் குறும்படமான "மரபை மீறும் மானுடம்" என்பதை நெறியாள்கை செய்தவரும் இவரே.

இவர் வெளியிட்ட "தாகம்" என்ற இதழே திருமலை மண்ணில் தொடர்ந்து பத்து வருடங்களாக வெளிவந்த ஒரே இதழ் என்ற சிறப்பைப் பெறுகிறது. தினக்கதிர் நாளிதழிலும் இவரது பங்களிப்பு முக்கியமானது. 2012 முதல் மட்டக்களப்பில் இருந்து வெளிவரும் மகுடம் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இவர் விளங்குகின்றார். இவரால் வெளியிடப்பட்ட பரசுராமபூமி என்ற சிறுகதைத் தொகுப்பே ஈழத்தில் இதிகாச, புராண, மறைநூல் கருத்துக்களை மறு வாசிப்புக்கு உட்படுத்தி வெளிவந்த முதற் சிறு கதைத் தொகுப்பு என்ற சிறப்பைப் பெறுகிறது. இதே போல் இவரால் அண்மையில் வெளியிடப்பட்ட சிலுவைகளே சிறகுகளாய் என்ற கவிதை நூல் தேசிய சாகித்திய விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட கவிதை நூல்களில் ஒன்றாக விளங்கி சிறப்பு பெறுகிறது. இவரது "வீணையடி நீ எனக்கு" என்ற நாவல் கிழக்கு பல்கலைக் கழக வாழ்வியலை பேசும் முதல் நாவலாக விளங்கி சிறப்பு பெறுகிறது. அத்துடன் மகுடம் பதிப்பகம் மூலம் பல ஈழத்து படைப்பாளிகளின் நூல்களை பதிப்பித்து வெளியிடும் பணியையும் இவர் மேற்கொண்டுள்ளார்.

படைப்பிலக்கியத்திற்கு மகுடம் சூட்டும் இவரது பணிகளின் தொடர்ச்சியாக இன்று வெளியிடப்படும் இவ் இரு கவிதை நூல்கள் கூட வித்தியாசமான முயற்சிகளாகவே அமைகின்றன. 2021 ஆம் ஆண்டின் கத்தோலிக்கர்களது பாஸ்கா காலத்தில் முக நூலில் எழுதப்பட்ட 40 கவிதைகளின் தொகுப்பாகவும், கிறிஸ்தவ இறையியல் பின்னணியில், புதுமையான சமூகக் கழுத்துக்களை, மீள்வாசிப்பு அனுபவமாக தருவதாக அவனைச் சிலுவையில் அறையுங்கள் என்ற கவிதைத் தொகுப்பும், தன் காதல் வாழ்வின் எழுதித் தீராப் பிரியங்களை அழகிய வண்ண வடிவல் தன் மணநாளின் 22 ஆம் வருட நிறைவாக வெளியிடப்படுவதாக எழுதித் தீராப் பிரியங்கன் என்ற கவிதைத் தொகுப்பும் அமைந்துள்ளன. ■

# மழையில நனையாதை...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தனுசாந்தனின் நிலை நாளுக்குநாள் மோசமாகியது.. தண்ணிச் சாப்பாடு மட்டுமே அவன் சாப்பிடத் தொடங்கினான்.

விமலாவுக்கு வேலைப்பளுவும் வேதனையும் கூடியது.. எல்லாத்தையும் விட கணவனை எந்த நேரமும் கண்காணிக்க வேண்டிய பெரும் பொறுப்புக்கு உள்ளானாள். ஏதாவது நடந்துவிடுமோ என்ற பயம் மனதில் குடி கொள்ளத் தொடங்கியது. அவளால் எல்லாத்தையும் சமாளிக்க முடியாது போக கடையை பொருட்களுடன் இன்னொருவரிடத்து பாரம் கொடுத்தாள். கொடுத்தவளின் மனதில் அமைதியில்லை. எல்லா விதத்திலும் மனதில் வேதனையும் போராட்டமும் அதிகரித்துக் கொண்டது ஆழ்ந்த யோசனையில் முழ்கிப்போனாள்.

தாயின் நடவடிக்கைகளை அவதானித்த கரன் "இதெல்லாத்திற்கும் காரணம் நீங்கதானம்... மா உங்களிட்ட இருக்கிற பேராசை தானம்மா, நீங்க துரியோதனன் மாதிரி அடுத்தவன்ர சொத்துக்கு ஆசைப்பட்டு தாத்தாவை கொடுமைப் படுத்தியதால தான் எல்லாம் நடந்தது..., தாத்தா எவ்வளவு நல்லவர். அவற்றை மனத்தை எப்பிடி எல்லாம் வேதனைப் படுத்தினனீ, அவர் தனக்கெண்டு ஏதாவது வைச்சிருந்தவரா? கைக்கு வந்த ஐந்து லட்சத்தையும் உங்களுக்கு தானே தந்தவர். வாடகைப் பணம் பதினையாயிரமும் அப்பா தானே வாங்குகிறார். அத்தையும் அப்பப்ப காசனுப்பிறவா தானே... அதெல்லாம் உங்கட கண்ணுக்கு தெரியேலையா?

ஒண்டு மில்லாமல் உங்கட கையைப் பார்த்துக் கொண்டு இருக்கிறதாக உங்கட கெட்ட எண்ணம்.... எவ்வளவு பேச்சுப் பேசினனீங்கள் அவரை, காரணம் உங்கட மனசில் நிண்ட பேய். தாத்தா தானுண்டு தன்ர வேலையெண்டு தானே இருந்தவர். ஆனால் உங்களுக்குதான் அவற்ற அருமை தெரியேலை. இப்ப புரியுதா, அவர் இல்லாதத்தால எவ்வளவு கஷ்ரம் எண்டு, எங்களை எல்லாம் எப்படிப்பார்த்தவர். உங்களைவிட எங்களை நல்லாய் பார்த்தவர் அவர். விருப்பமான சாப்பாடெல்லாம் செய்து தந்தார். நாங்கள் பள்ளிக்கூடத்தால் வரும்போது வாசல்ல சிரிச்ச முகத்தோட நிப்பார், அதுவே எங்களுக்கு பெரிய சந்தோசம். பொரியலின்ர வாசம் சமையலறைக்கு இழத்துச் செல்லும். எங்களுக்கெல்லாம் அவர் தான் அம்மா ஊட்டி விடுவார்,...... அதை நினைச்சால் தான் என்னால் தாங்க ஏலாமல் கிடக்கு..." என விசும்பினான்.

மகனின் ஒவ்வொரு வார்த்தையும் அம்பாய் பாய்ந்தது. கரன் தொடர்ந்தான்... " உன்ர கதையை கேட்டு அப்பாவும் ஆடினவர் தானே. அவருக்கு எங்க போனது புத்தி எல்லாத்துக்கும் காரணம் பணப் பேய் தான். இருக்கிறதோட நிம்மதியாய் வாழத் தெரியாமல் அகலக் கால் வைக்க பார்த்தாய், எல்லாத்தையும். ஒரே அடியில உடைத்து விட்டார் பாத்தியா? தாத்தா நல்லவர். அதால தான் உன்னோட இருக்காமல் போவிட்டார்" எனக்கூறி விம்மி விம்மி அழத் தொடங்கினான். அவன் அழத்தொடங்கவும் விமலா அவனை அணைத்தபடி அழுதாள்.

இருவரது சம்பாசணையையும் அமைதியாக கேட் டுக் கொண்டிருந்த தனுசாந்தன் மெதுவாக வந்து மகனின் தலையைத் தடவி "கரன் நீ அம்மாவைப் பேசினதெல்லாம் எனக்கும் கேட்டது. நாங்கள் எங்கட உழைப்பை நம்பாமல் அடுத்தவன்ரையை அபகரிக்க பார்த்தோம், அப்பா நல்ல பாடம் புகட்டிப் போட்டு போவிட்டார். இப்ப பார் இருந்த சொத்தையே எங்களால் கவனிக்க முடியாமல் போட்டுது,கொஞ்சநாளுக்க உங்களுக்கு நல்ல விடயங்களைச் சொல்லித் தந்து விட்டார்" என கரனை தனது மார்பில் சாய்த்து அழத்தொடங்கினார். மகன் கூறிய ஒவ்வொரு விடயமும் தாயின் மனதை கூரிய வாளாகக் குத்தியது.. தனுசாந்தன் கரனை அணைத்ததும் தனது பிடியை தளர்த்தி முகத்தை துடைத்தாள்...

விமலா அவரது கட்டிலில் வீசிய மாமனாரின் படத்தை நன்றாகத் துடைத்து விறாந்தையின் வடக்குப் பக்க சுவரில் இருந்த ஆணியில் கொழுவினாள். அதைப் பார்த்து தனுசாந்தன் ஓரளவு நிம்மதி அடைந்தான். ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்


கல்வி tv CHANNEL

❖ **பின்வரும் தகவலைக் கொண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.**

| | |
|---|---|
| சட்டை + சேலை | = ரூபாய் 320.00 |
| சட்டை + சேலை + பூமாலை + காப்பு | = ரூபாய் 470.00 |
| 2 சட்டைகள் + 2 சேலைகள் + 2 பூமாலைகள் | = ரூபாய் 840.00 |

28) பூமாலை ஒன்றின் விலை யாது?

1) ரூபாய் 100.00 2) ரூபாய் 50.00 3) ரூபாய் 200.00


29) 

இவ்வுரு ஒரேயளவான சதுரமுகிக் குற்றிகளால் ஆக்கப்பட்டுள்ளது எனின் இங்குள்ள சிறிய சதுரமுகிக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?

1) 36 2) 35 3) 37

30) நாளொன்றில் ரூபாய் 10.00 வீதம் மிதுலேஷ் உண்டியலில் இட்டு வந்தான். 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் மட்டும் அவன் சேமித்த மொத்தப்பணம் எவ்வளவு?

1) ரூபாய் 280.00 2) ரூபாய் 290.00 3) ரூபாய் 270.00

31) 


மேலே தரப்பட்ட தரவுக்கேற்ப பழங்களை இறங்குவரிசைப்படுத்தும் போது சரி நடுவில் வரும் பழம் எது?

1)  2)  3) 

32) மூன்று நாட்கள் நடைபெறும் கண்காட்சியொன்றை பார்வையிட முதல் நாளை விட அடுத்த நாள் இருமடங்கான மாணவர்கள் வருகை தருவர். மூன்று நாட்களும் வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கை 700 எனின் முதல்நாள் வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

1) 200 2) 150 3) 100

33) பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க?

- அது உயிருள்ள ஒரு பொருள்.
- அது மனிதனுக்குப் பயன்படும்.
- அது உண்ணக்கூடிய ஒரு பொருள்.
- அது பறவையிலிருந்து பெறக்கூடியது.

1) குஞ்சு 2) முட்டை 3) இறைச்சி

❖ **வகுப்பொன்றில் மாணவர்கள் A, B, C எனும் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

- குழு C இல் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையின் இருமடங்கு மாணவர்கள் குழு B இல் உள்ளனர்.
- B, C ஆகிய குழுக்களில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை குழு A யிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்குச் சமனாகும்.
- குழு B இலிருந்து ஒரு மாணவன் குழு C இற்குச் செல்லும்போது குழு B இல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 11 ஆகும்.

34) மேலுள்ள தகவலின்படி மூன்று குழுக்களிலும் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 36 2) 18 3) 30

35) பின்வரும் கூற்றுக்களில் சரியான கருத்தைத்தரும் வாக்கியத்தைத் தெரிவு செய்க?

1) புகைவண்டியில் அதிகமானோர் பயணம் செய்யலாம். அது மின்சாரத்தினாலும் இயங்கும்.
2) கப்பல் கடலில் செல்லும். அதில் இரும்பினால் ஆன பொருட்களை ஏற்றமுடியாது.
3) பூனை அனைத்துமுண்ணி. அதற்கு மரத்தில் ஏறத்தெரியாது.


36) 

இவ்வுருவானது ஒரேயளவான கம்பிகளினால் செய்யப்பட்ட உருவாகும். இவ்வுருவில் நடுவிலுள்ள ▽ இப்பகுதியைச் செய்வதற்கு 12m நீளமான கம்பி பயன்பட்டது. எனின் முழு உருவைச் செய்வதற்குத் தேவைப்படும் கம்பியின் மொத்த நீளம் யாது?

1) 36m 2) 20m 3) 48m

37) பெட்டியொன்றில் சில பந்துகள் இருந்தன. அவற்றை மூன்று மூன்றாக எண்ணிய போது 2 பந்துகள் எஞ்சியிருந்தன. அவற்றை எட்டு எட்டாக எண்ணிய போது 4 பந்துகள் எஞ்சியிருந்தன. எனின் பெட்டியில் இருந்த பந்துகள் எத்தனை?


1) 356 2) 288 3) 354

38) 

இவ்வுருவில் இனங்காண முடியாத தளவடிவம் எது?

1) சதுரம் 2) வட்டம் 3) முக்கோணம்

39) கீழ்வரும் படங்களில் பலவின் பாலினைக் குறிக்கும் படத்தினைத் தெரிவு செய்க?

1)  2)  3) 

40) A யின் சகோதரி B ஆவாள். C என்பவர் B இன் தாயாவார். இதன்படி A என்பவர் C இன்

1) தாய் 2) சகோதரி 3) மகன்

# இரு விடுதிகள் சுற்றிவளைப்பு

## ஐவர் கைது

கொழும்பு, நவ. 28

கம்பஹா, நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பீரிஸ் மாவத்தை மற்றும் ஏத்துகால ஆகிய பிரதேசங்களில் இரு விபச்சார விடுதிகள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதுடன் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விபச்சார விடுதிகளை நடத்திச் சென்ற இருவரும் விபச்சார விடுதியை நடத்திச் செல்வதற்கு உடந்தையாக இருந்த மூன்று பெண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு, வய்க்கால், அம்பாறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 22 - 56 வயதுக்கு இடைப்பட்டவர்களே இதன் போது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(இ)

# அதிவீரியம் மிக்க ஆபத்தான வைரஸ் பரவலையடுத்து ஆறு நாடுகளுக்குப் பயணத்தடை விதித்தது இலங்கை

கொழும்பு, நவ. 28

அதிவீரியம் கொண்ட புதிய வகையான வைரஸ் பரவலையடுத்து, 6 நாடுகளுக்கு இலங்கை தற்காலிக பயணத் தடையை விதித்துள்ளது.

தென் ஆபிரிக்கா, நமீபியா, சிம்பாப்வே, போட்ஸ்வானா, லெசோத்தோ மற்றும் எசுவாத்தினி ஆகிய நாடுகளில் இருந்தே இலங்கை வர இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரை இந்தத் தடை அமுலில் இருக்கும் என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேற்படி நாடுகளிலிருந்து கடந்த இரு தினங்களில் எவரேனும் வருகை தந்திருக்கும் பட்சத்தில், அவர்கள் கட்டாய தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவில் பரவும் அதிவுயர் ஆபத்தான கொரோனா - ஒமிக்ரோன் வைரஸ் பரவலிலிருந்து இலங்கையை பாதுகாக்கும் நோக்கிலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (இ)

# கலிங்க மாகன் பற்றிய....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பதிமூன்றாம் நூற்றாண்டு இலங்கையின் வரலாற்றைத் திசை திருப்பிய இரு பெரும் நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலம். இவற்றின் முக்கியத்துவத்தை உணர்வதற்கு இக்கூற்றினை இன்னொரு விதமாக அமைத்துக் கூறலாம். அதாவது, இந்த இரு நிகழ்ச்சிகளும் நடைபெற்றிருக்காவிட்டால் இலங்கையின் வரலாறு முற்றிலும் வேறாகச் சென்றிருக்கும். இந்த நிகழ்ச்சிகள் எவை?

ஒன்று, பொலன்னறுவையின் வீழ்ச்சி. மற்றது, வடக்கில் யாழ்ப்பாண இராச்சியத்தின் எழுச்சி. இவை இரண்டிலும் கலிங்கமாகனுக்குப் பங்கு உண்டு.

மாகனுக்கு இருந்த எதிர்ப்பின் விளைவாக அவன் நீண்ட காலம் பொலன்னறுவையில் ஆட்சி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் அவன் வடக்கு நோக்கி நகர்ந்து இறுதியில் தூர வடக்கில் தன் ஆட்சிபீடத்தை நிறுவினான். இவன் தொடக்கி வைத்த அரசு பின்னர் யாழ்ப்பாண இராச்சியம் எனப் பெயர் பெறுகின்றது. இதன் தோற்றம் பற்றிய தெளிவான விபரங்கள் கிடைக்காத காரணத்தால் இதை மட்டுமே ஊகிக்க முடிகின்றது.

**காங்கவம்சக் குறியீடுகள்**

வடக்கில் ஓர் இராச்சியத்தை அமைத்த கலிங்க மாகனுடைய வரலாற்று எச்சங்கள் எதுவும் உண்டா? உண்டு. முதலாவதாக, அவன் பெயர் மறக்கப்படவில்லை. விஜய(வாகு) காலிங்கச் சக்கரவர்த்தி என்ற அவன் பெயர் விசயகூழங்கைச் சக்கரவர்த்தி ஆகி, யாழ்ப்பாண வரலாற்று மரபில் மறைந்து இருக்கிறது. இதனை இற்றைக்கு ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சுவாமி ஞானப்பிரகாசர் எடுத்து விளக்கியுள்ளார். ஏட்டுப் பிரதியின் எழுத்தில் காலிங்கச் சக்கரவர்த்தி என்பது கூளங்கச் சக்கரவர்த்தி ஆகி, பின்னர் கூழங்கைச் சக்கரவர்த்தி ஆகியது என்பது அவர் விளக்கம்.

கங்கராஜா எனத் தன் கங்கவம்ச உறவினைப் பிரகடனப்படுத்திய காலிங்க விஜயவாகு வடக்கில் ஆட்சி செலுத்திய போது கங்க வம்சக் குறியீடுகள் சிலவற்றை அங்கு புகுத்தியிருந்தான். சிறப்பாக, கங்க வம்சத்தினர் பயன்படுத்திய நந்தியும் பிறையும் (இடப லாஞ்சனை) யாழ்ப்பாண அரசின் சின்னமாகியது (கீழைக் கங்கர்கள் செப்பேடுகளின் முத்திரையில் இதனைப் பயன்படுத்தினர்). யாழ்ப்பாண அரசர்கள் தங்கள் நாணயங்களிலும் கொடியிலும் இச்சின்னத்தைப் பயன்படுத்தினர்.

வடக்கில் அமைக்கப்பட்ட புதிய ஆட்சிபீடம் சிங்கை நகர் எனப்பட்டது. இது கங்க வம்சத்தினருடைய ஸிங்ஹ புரத்தை மனதில் வைத்து இடப்பட்ட பெயராக (ஸிங்ஹ நகர்) கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் ஆட்சி நடத்திய மன்னர் கங்க வம்சத்தவர் என்பது மக்கள் மத்தியில் பதிந்திருந்தது என்பதற்கு அங்கு எழுதப்பட்ட தமிழ் நூல்களில் சான்று உண்டு. இவற்றில் சில சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணத்து மன்னர் கங்கை ஆரியர், கங்கநாடன் என்று வர்ணிக்கப்பட்டுள்ளனர். மன்னனுக்கு உதவிய சில உயர் குலத்தவர் கங்கா குலத்தவராகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவ்வாறாக, கங்க ராஜகாலிங்க விஜயவாகு பற்றியும் குலோத்துங்க சோழ காலிங்கராயன் பற்றியும் தகவல் தரும் கொமரன் கடவெலக் கல்வெட்டு வரலாற்று முக்கியத்துவம் உள்ள ஒரு கல்வெட்டாகக் காணப்படுகின்றது.

DAN CINE MARATHON

மாபெரும் குறும்படப் போட்டி

இது நமது திரைத்துறை
கலைஞர்களுக்கான சந்தர்ப்பம்

உங்கள் அணியினருடன் போட்டியில்
கலந்துகொள்ளத் தயாராகுங்கள்

Dan Cine Marathon குறும்படப் போட்டியில்
பங்குபற்றவிரும்பும் அணிகள் இப்போதே உங்கள்
விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு :

075 313 2901, 075 313 2932, 076 921 3686

# கலவையில் ஏற்பட்ட மாற்றத்தால் சிலிண்டர்கள் வெடிக்கவில்லை!

## ஆய்வில் உறுதி என்கிறது அரசு



**கொழும்பு, நவ. 28**

**“கலவையில் ஏற்பட்ட மாற்றத்தால் எரிவாயு சிலிண்டர்களில் வெடிப்பு ஏற்படவில்லை. இதனை மொரட்டுவ பல்கலைக்கழகம் ஆராய்ந்து உறுதிப்படுத்தியுள்ளது.”**

- இவ்வாறு கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் நடைபெற்ற வர்த்தக அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எரிவாயுசிலிண்டர்கள் தொடர்பில் சமூகத்தில் பேசப்பட்டு வரும் பிரச்னைகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண இக்குழுக்கூட்டத்தில் குறிப்பிட்டார்.

கலவையில் ஏற்பட்ட மாற்றத்தால் எரிவாயு சிலிண்டர்களில் வெடிப்பு ஏற்படவில்லை என்றும், இதனை மொரட்டுவ பல்கலைக்கழகம் ஆராய்ந்து உறுதிப்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். புதிய 18 லீற்றர் எரிவாயு சிலிண்டரை இடைநிறுத்தவும் லிட்ரோ நடவடிக்கை எடுத்துள்ளது. எனவே, எரிவாயு இணைப்புகள் தொடர்பில் நிலவும் பொய்யான கருத்தாக்கங்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும், லங்கா சதொசவின் புதிய கிளைகளை நிறுவுதல், அலங்கார மீன் வளர்ப்பை ஊக்குவித்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் மற்றும் பச்சைப்பயறுகளை அரசால் கொள்வனவு செய்தல் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹன திஸாநாயக்க, ஜகத்புஷ்பகுமார, அமரகீர்த்தி அத்துகோரள, கீதா சமன்மலி குமாரசிங்க, அஜித் ராஜபக்ச மற்றும் கலாநிதி கயாஷான் நாவானந்த ஆகியோர் கலந்துகொண்டனர். (இ)

# நாட்டை முன்னேற்றுவதற்காக எதிர்காலத்தில் முக்கிய தீர்மானங்களை எடுக்க வேண்டிவரும்

## ஏற்றுமதி விருது விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு




கொழும்பு, நவ. 28

உலகளாவிய பொருளாதாரச் சவால்களை வெற்றி கொண்டு நாட்டை முன்னேற்றுவதற்காக, எதிர்காலங்களில் பல்வேறு தீர்மானங்களை எடுக்க வேண்டி இருக்கும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசின் தீர்மானங்கள் விமர்சனங்களுக்கு உள்ளானாலும், எதிர்வரும் காலங்களில் அதன் பிரதிபலன்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைக்கும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

“ஜனாதிபதி ஏற்றுமதி விருது விழா”வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

குறுகியகால சிக்கல்களை வெற்றி கொண்டதன் பின்னர் பொருளாதார நிவாரணங்களை வழங்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

குறுகியகால இலாபம் ஈட்டுவதற்குப் பதிலாக உலகளாவிய ரீதியில் போட்டியிடக் கூடிய தரமான உற்பத்திகளை உருவாக்குவதற்கு கைத்தொழிலாளர்கள் செயற்பட வேண்டும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, அதற்காக இலங்கையில் தனித்துவமான திறன்கள் இருக்கின்றன என்றும் சுட்டிக்காட்டினார்.

ஏற்றுமதித் துறையில் நிலவுகின்ற சிக்கல்களை உடனடியாகத் தீர்ப்பதாக உறுதியளித்த ஜனாதிபதி, ஏற்றுமதித் துறையின் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அரசு மற்றும் தனியார் துறையினர் கைகோர்த்து இணைந்து செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

1981ஆம் ஆண்டு ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் “ஜனாதிபதி ஏற்றுமதி விருது விழா“ ஆரம்பிக்கப்பட்டது. இம்முறை 24 ஆவது விருது விழா நடத்தப்பட்டது.

இலங்கையில் ஏற்றுமதியாளர்களுக்கு கிடைக்கக்கூடிய உயர் மற்றும் தனித்துவமான விருது இதுவாகும். ஏற்றுமதித் துறையின் வளர்ச்சிக்காக உயரிய பங்களிப்பை வழங்கிய ஏற்றுமதியாளர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகின்றது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் ஜனாதிபதியால் 24 விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

(இ)

ஈழநாடு
Eelanadu

# பயங்கரவாதிகளை நேற்று நினைவேந்திய அனைவரும் கூண்டோடு கைதாகுவார்கள்

## எச்சரிக்கின்றது அரசு

கொழும்பு, நவ. 28

**"தமிழர்கள் கூறும் "மாவீரர்கள்" பயங்கரவாதிகள். நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அவர்களை நினைவுகூரவே முடியாது. எனவே, வடக்கு, கிழக்கில் நேற்று பயங்கரவாதிகளை நினைவேந்திய அனைவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கூண்டோடு கைதுசெய்யப்படுவார்கள்."**

- இவ்வாறு அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் ஆகியோரின் பல்வேறு கெடுபிடிகளுக்கு மத்தியிலும் மாவீரர் நாள் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. துயிலும் இல்லங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மாவீரர்கள் நினைவாக மக்கள் ஈகைச்சுடரேற்றினார்கள். இந்தநிலையிலேயே அரசு மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழர்கள் கூறும் மாவீரர்கள் பயங்கரவாதிகள். அவர்கள் இந்த நாட்டை அழித்தவர்கள் பலரைக் கொலை செய்தவர்கள். இந்த நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அவர்களை நினைவுகூரவே முடியாது. பயங்கரவாதிகளை நினைவேந்த எமது அரசு ஒருபோதும் அனுமதி வழங்கவில்லை.

எனவே, வடக்கு, கிழக்கில் நேற்று பயங்கரவாதிகளை நினைவேந்திய அனைவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கூண்டோடு கைதுசெய்யப்படுவார்கள். அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும். - என்றார். (இ)




## மரண அறிவித்தல்

தோற்றம் 19 - 09 - 1942



மறைவு 26 - 11 - 2021

### திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு (பாக்கியம்)

யாழ். கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், நோர்வே, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி திருநாவுக்கரசு நேற்றுமுன்தினம் (26.11.2021) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் – உத்தமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், திரு. திருமதி கதிரவேலு தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு ( VKT – பிரபல தொழிலதிபர் ) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான மகேஸ்வரி, இராஜரட்ணம் மற்றும் சாம்பசிவம், நல்லம்மா, தேவராஜா, சொர்ணலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

திருச்சாந்தி (பிரித்தானியா), திருச்சிவம் (பிரித்தானியா), திருக்குமார் ( பிரபல தொழிலதிபர் – கனடா ), திருஞானம் (பிரித்தானியா), திருச்செல்வி (பிரித்தானியா), திருக்கேதீஸ்வரன் (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

தேவபாலன் ( பிரித்தானியா ), இரஞ்சிதவதனி ( பிரித்தானியா ), சுதர்விழி ( கனடா ), அருள்செல்வி ( பிரித்தானியா ), அற்புதராஜா ( பிரித்தானியா ), தவராஜினி ( பிரித்தானியா ) ஆகியோரின் அன்பு மாமியாரும், யதுர்சன், Dr.யட்சன் (UK) கவின், கவிதா, கபில், திமேத்தி (சட்டத்தரணி – கனடா) Dr.தனிஷா ( கனடா ) தனிக்கா, திகர்ணன், தியாணி, அஜேன், டெசியா, திசோக், திவ்யன், தஜினி ஆகியோரின் பாச மிகு பேர்த்தியும், சயன் அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**திருக்குமார் - மகன்**
**Mobile : +14167267748**

தகவல்:
**குடும்பத்தினர்**

# யாழிலுள்ள பனை அபிவிருத்திச் சபை ஒருபோதும் கொழும்புக்கு மாற்றப்படாது

## சிறிதரன் எம்.பியிடம் அமைச்சர் ரமேஷ் உறுதி

கொழும்பு, நவ. 28

யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்திச் சபை ஒருபோதும் கொழும்புக்கு மாற்றப்படாது. அது தொடர்ந்தும் யாழ்ப்பாணத்திலேயேதான் செயற்படும் என்று பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண உறுதியளித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பெருந்தோட்ட அமைச்சு, காணி அமைச்சு மற்றும் 3 இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. சி.சிறிதரன், "யாழ்ப்பாணம் மாவட்டத்திலே இருக்கின்ற குறிப்பாக வடக்கையும் கிழக்கையும் பிரதிநிதித்துவப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள பனை அபிவிருத்திச் சபையைக் கொழும்புக்கு மாற்றும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதனுடைய தலைவராக தற்போது முதன்முதலாக ஒரு சிங்கள மொழி பேசுபவர் நியமிக்கப்பட்டுள்ளார்" என்று கூறினார்.

இதற்குப் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண பதிலளிக்கும்போது, "யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்திச் சபை ஒருபோதும் கொழும்புக்கு மாற்றப்படாது. அது தொடர்ந்தும் யாழ்ப்பாணத்திலேயேதான் செயற்படும். இதன் முதலீடுகளினால் உங்கள் மாகாணத்துக்குத்தான் நன்மைகள் கிடைக்கும்.

அத்துடன் எனது அமைச்சுடன் தொடர்புபட்ட விடயங்களில் உங்களுக்கு ஏதாவது அநீதிகள் இடம்பெறுமானால் உடனடியாக எனக்கு அறியத்தாருங்கள். நான் உங்களுக்கு நீதி வழங்குவேன்" - என்றார். (இ)

# புத்தாக்க அரங்க இயக்கத்தின் வாராந்த அரங்க கதையாடல்

யாழ்ப்பாணம், நவ. 28

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் மெய்நிகர் இணையவழி அரங்க கதையாடல் 52 ஆவது நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாடகத்துறை ஆசிரியர் யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம், க.கஜேந்திரன் அவர்கள் ஈழத்து இசை நாடக ஆளுமைகளில் சரவணமுத்து அவர்கள் பற்றிய நோக்கு என்னும் விடயத்தில் கதையாடவுள்ளார் . நிறைவுரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப்பணிப்பாளர் எஸ்.ரி.அருள் குமரன் வழங்கவுள்ளார்கள்.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.



# இராணுவத்தால் அமைக்கப்பட்ட வீடு பயனாளியிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், நவ.28

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியின் வழிகாட்டுதலின் கீழ் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/278 புத்தூர் கிராம அலுவலர் பிரிவில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடு நேற்று கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளை தளபதியால் வீட்டு உரிமையாளரிடம் குறித்த வீடு கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தலைமை உயர் அதிகாரிகள், கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இராணுவத்தினரால் சமூக நலனோம்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ - 03)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை -தற்காப்புக்கலை
பகல்
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம் - சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி - காதல் கோட்டை
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார் - திறமையாளர்களுக்கான களம்



7.00 மணி : SPOTLIGHT – தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் - சட்டத்தரணி க.சுகாஷ்



08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :செல்லாடுகளம்
10.00 மணி:- நேர்கொண்ட பார்வை - திருகோணமலை மாவட்ட ஐ.ம.ச நாடாளுமன்ற உறுப்பினர் - இம்ரான் மஹ்ரூப்



**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு